
# தமிழரசு

16.8.1979 50காசு




# கோவையில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சி








# விடுதலைத் திருநாள்

— பேரறிஞர் அண்ணா



இன்று ஆகஸ்டு பதினைந்தாம் நாள்—ஆங்கில நாட்டின் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெற்று, சுதந்தரக் கொடியினைப் பெருமிதத்துடன் ஏற்றிடும் நன்னாள்—தன்னரசு பெற்ற நாள்—உரிமைப் போரிலே வெற்றி கண்ட நாள் என்று பாராட்டுவர்; பாராட்டுகின்றனர்.

வரலாற்று ஏடுகளிலே, இந்நாள் தனிச் சிறப்பையளிக்கும் நாளாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றது.

இந்நாள் திருநாள்—ஐயமில்லை; இந்நாள் பொன்னாள்—மறுப்பார் இல்லை; இந்நாள் நமது உரிமையை உலகு ஒப்புக் கொண்டு விட்டது என்பதனை அறிவிக்கும் நாள்--அறிகிறோம்; அகமகிழ்ச்சி பெறுகிறோம்.

வந்தது சுதந்தரம். வாழ்கின்றோம்-நம்மை நாமே ஆள்கின்றோம் என்ற உரிமையுடன். ஆனால், ''வாழ்கின்றோமா?'' நம்மை நாமே கேட்டுக் கொள்ளவேண்டிய கேள்வி இது. வாழ்கின்றோமா?

வாழ்கின்றோம் என்பதற்கும், இருக்கின்றோம் என்பதற்கும், பொருள்வேறுபாடு மிகுதி.. நம்மிலே மிகப் பெரும்பாலோர் இன்று 'ஏதோ இருக்கின்றோம்' என்று கூறிடும் நிலையிலே உள்ளோம்; 'வாழ்கின்றோம்' என்று மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்ளும் நிலையில் அல்ல.

ஏழ்மையும் அறியாமையும் ஒழிந்த நிலையே, வாழ்கின்றோம் என்று கூறிட நாம் உரிமை பெறும் நாளாகும்.

இல்லாமையும் போதாமையும் ஒழிந்த நாளே, நாம் வாழ்வு பெற்றிடும் புதுநாளாகும்.

இந்நாள், நாட்டின் நிலையை நாம் அறிந்திடல் வேண்டும் சுதந்தரத் திருநாள் தந்திடும் மகிழ்ச்சியுடன், விழிப்புணர்ச்சியும் இழைந்திட வேண்டும். அப்போதுதான், எதற்காகச் சுதந்தரம் பெற்றளித்தனரோ, பெரியோர்கள், அந்த நல்ல நிலையினை நாடு பெற்றிடும்; சுதந்தரத்தின் கனிச்சுவை கிடைத்திடும்.

களிப்படைய மட்டுமல்ல, நண்பர்களே, இது கணக்குப் பார்க்கும் நாளுமாகும். 'நாம் சுதந்தரம் பெற்ற பிறகு, நாடு வாழ்ந்திட நாம் தந்தது என்ன, இனி என்ன தரவேண்டும். எவ்வளவு தரவேண்டும்? என்ற கணக்குப் பார்த்திடும் நாள்.

முதல் ஆகஸ்டு பதினைந்து, கணக்குத் தீர்த்த நாள் - ஏகாதிபத்தியத்துக்கும் நமக்கும் இருந்து வந்த கணக்கைத் தீர்த்த நாள். புதுக் கணக்குப் போட்ட நாள். இன்றைய ஆகஸ்ட் பதினைந்து கணக்குப் பார்க்கும் நாள் - சுதந்தரம் பெற்ற பிறகு, நமது சொல்லும் செயலும் எந்த முறையில் எந்த அளவுக்கு நமக்குச் சுகவாழ்வு பெற்றளித்தது எனக் கணக்குப் பார்க்கும் நாள்.

*[பேரறிஞர் அண்ணா அவர்கள் 15-8-1967-ல் ஆற்றிய வானொலி உரையிலிருந்து தொகுக்கப்பட்டது]*



ஏற்றம் கண்ட

# இன எழுச்சி இயக்கம்

இந்திய அரசியலில் தமிழகத்தில் மட்டும் திராவிட இன எழுச்சிக்காகவே ஓர் இயக்கம்உருவாகியது. அதனைப்பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சி அமைக்கும் கட்டத்திற்குக் கொண்டு வந்தார்கள். அண்ணாவின் அடியொற்றி வருபவர்களே ஆட்சி செலுத்தி வரும் சூழ்நிலை உள்ளது. இது எவ்வாறு முடிந்தது என்பதை விளக்கும் வகையில் சென்னையில் ஒரு கருத்தரங்கம் நடைபெற்றது.

கனடா நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள் அனைத்தையும் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் இக்கருத்தரங்கில் பங்கேற்றனர்.

சாஸ்திரி இந்தோ - கனடியன் நிறுவனம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தது. இதனையொட்டி பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த திரு ஸ்டீபன் ஆர். இங்கிலிஸ் (Stephen R Inglis) தமிழ்நாடு மாநிலத்திட்டக் குழுத் துணைத் தலைவர் திரு கோவை செழியன் அவர்கட்குக் கடிதம் ஒன்றினை எழுதியிருந்தார். அக்கடிதத்தில், தென்னகத்தின் அரசியல் நிலைமைகளைத் தமது மாணவர்களுக்கு விளக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்.

மனித சமுதாயத்தின் வளர்ச்சி- இயல்பு-சட்டங்கள் ஆய்வுத் துறை (Sociology) மனித உடல், உளம் இரண்டும் சார்ந்த முழு வரலாற்று ஆராய்ச்சித் துறை (Anthropology) ஆகியவற்றில் பயிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் கடந்த 21.7.79 அன்று சென்னை எழிலகத்தில் உள்ள திட்டக்குழு கலந்துரையாடு அலுவலகக் கூடத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்குபெற்றனர்.

இந்தக் கருத்தரங்கில் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவைத் தலைவர் திரு முனுஆதி அவர்களும், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. எஸ். ராமச்சந்திரன் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

திட்டக்குழுத் துணைத் தலைவர் திரு கோவை செழியன், மின்துறை அமைச்சர், பேரவைத் தலைவர் ஆகியோர் திராவிட இன எழுச்சி ஆரம்பம் முதல் இன்றுவரை வளர்ந்துள்ள வளர்ச்சிப் படிகளையும் அதனால் உருவாகியுள்ள நிலைகளையும் விளக்கினார்கள்.


தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் உருவாக்கித் தந்த அந்த மாபெரும் திராவிட இன எழுச்சிகளை-சாதனைகளை, இன்று தமிழகத்தில் முதல்வர் புரட்சித் தலைவர் எப்படிச் செயல்வடிவம் கொடுக்கிறார் என்பதை விளக்கினார்கள்.

மேலும் தமிழகத்தில் ஐந்தாண்டுத் திட்டங்கள் - மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் உள்ள தொடர்புகள் - மொழிப் பிரச்சினைகள் ஆகிய பொருள்கள்பற்றியும் எடுத்துரைத்து விவாதித்த திட்டக் குழுத் துணைத் தலைவர் அவர்கள், கனடாவிலிருந்து வந்த பிரதிநிதிகளிடம் 'கியூபெக்' பகுதியில் நடந்துவரும் மொழிப் போராட்டம் பற்றிய விவரங்களைக் கேட்டறிந்துகொண்டார்.

கனடா நாட்டுப் பல்கலைக் கழக மாணவர்களும் ஆசிரியர்களும் அதனைப் பற்றி விரிவான விளக்கங்களை அளித்தனர்.

சாஸ்திரி இந்தோ-கனடியன் நிறுவனத்தின் முதுவேனிற்காலத் திட்டத்தின் படி நடைபெற்ற இக்கருத்தரங்கம், தென்னகத்தின் அரசியல் வளர்ச்சியையும், இன எழுச்சி வரலாற்றையும் அறிந்துகொள்ள அரிய வாய்ப்பாக அமைந்திருந்தது.

# படமும் செய்தியும்



இந்தியாவிலுள்ள பிரெஞ்சு நாட்டுத் தூதுவர் திரு அண்டர் ரோஸ் (Andre Ross), மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களை 2.8.79 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.



தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் புதிய உல்லாசப் பேருந்தின் வெள்ளோட்டத்தை 22.7.79ல் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் துவக்கி வைத்தார்.




# உலகத்தமிழ் மாநாட்டுச் செயற்குழு

1980-ம் ஆண்டு சனவரி மாதம் 2-ந்தேதி முதல் 8-ந்தேதி வரை ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டினை மதுரையில் நடத்துவதென தமிழ் நாடு அரசு தீர்மானித்துள்ளது. 1968-ம் ஆண்டு நடைபெற்ற உலகத்தமிழ் மாநாடு அனைத்து நாட்டு தமிழ் ஆராய்ச்சிக் குழுவினால் நடத்தப் பெற்றது. தற்போது ஐந்தாவது உலகத்தமிழ் மாநாட்டினை தமிழ்நாடு அரசினால் சிறப்பான முறையில் கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத தலைவராகக்கொண்ட 40 உறுப்பினர்கள் கொண்ட செயற்குழு ஒன்றினை அரசு நியமித் துள்ளது.

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம், மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் திரு கே. மனோகரன், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன், மாண்புமிகு



கல்வித்துறை அமைச்சர் திரு சி. அரங்கநாயகம், நீதிபதி திரு எம். எம். இஸ்மாயில், நீதிபதி திரு பி. ஆர். கோகுல கிருஷ்ணன், நீதிபதி திரு மகராஜன், முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம், முன்னாள் முதல்வர் திரு மு. கருணாநிதி, மாண்புமிகு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம், முன்னாள் கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன், முன்னாள் உள்துறை அமைச்சர் திரு பி. கக்கன், ராஜா சர் முத்தையா செட்டியார், டாக்டர் மால்கம் ஆதி சேஷையா, மதுரை காமராஜ், சென்னை, அண்ணாமலை பல்கலை கழகங்களின் துணை வேந்தர்கள், மதுரை மாநகர மேயர், திரு கி. ஆ. பெ. விசுவநாதம், அரசுக் கவிஞர் திரு கண்ணதாசன் ஆகியோர்களை இக்குழுவின் துணைத் தலைவர்களாக அரசு நியமித்துள்ளது.

இக்குழுவின் இதர உறுப்பினர்களாக கல்வித் துறைச் செயலர், செய்தி - மக்கள் தொடர்புத் துறைச் செயலர், டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரம், திரு ஏ. சுப்பையா, திரு கே. அப்பாத் துரை, திரு எம். வி. வேணுகோபாலபிள்ளை, டாக்டர் வ. சுப. மாணிக்கம், டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம், டாக்டர் வெங்கட சுப்பிரமணியம், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை மாநகராட்சியின் ஆணையாளர், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், தமிழ் கலாச்சார நிலைய இயக்குநர், மொழி பெயர்ப்புத்துறை இயக்குநர், அனைத்து நாட்டு தமிழ் ஆராய்ச்சி நிறுவன இயக்குநர், சென்னை, மதுரை காமராஜ், அண்ணாமலை, பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர்கள் ஆகியோர் இருப்பார்கள்.

இச்செயற்குழுவின் சிறப்பு அலுவலர், அமைப்புச் செயலராகப்பணியாற்றுவார்.



# நாகர்கோவிலில்

# தந்தை பெரியார் நூற்றாண்டு விழா

அரசியல் பெருமையும், வரலாற்றுச் சிறப்பும், இலக்கியப் புகழும் ஒருங்கே பெற்றுத் திகழும் மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். இத்தகு பல்வேறு பெருமைகளும் ஒருங்கேகொண்ட குமரி மாவட்டம் நாகர்கோவிலில் தமிழ்நாடு அரசின் சார்பில் 7.7.79 அன்று, பகுத்தறிவுப் பகலவன்-தந்தை பெரியார் விழா, நாகர்கோவில் நகராட்சி கலைவாணர் கலையரங்கில் தொடங்கப்பட்டது.

'உயர்ந்த நகைச்சுவை என்றால், அது மனிதனைச் சிரிக்க வைப்பதோடு சிந்திக்கவும் வைக்க வேண்டும்' என்னும் நகைச்சுவை இலக்கணத்திற்குச் சிறந்த இலக்கியமாக விளங்கிய நகைச்சுவை மன்னர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் பிறந்த அம்மண்ணில், அவர் நினைவாக அமைக்கப்பட்ட கலையரங்கில்-இங்கர்சால், ரூசோ, சாக்ரடீஸ், லெனின் போன்ற பல்வேறு தலைவர்களின் மொத்த உருவாகத் திகழ்ந்த தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா தொடங்கப்பட்டது, மிகமிகப் பொருத்தமானதாகும். ஆமாம். ஆட்டம் ஆடிப் பாட்டுப் பாடி நாட்டைத் திருத்தவந்த அந்த நாகரிகக் கோமாளி, தன் வாழ்நாள் முழுவதும் தந்தை பெரியாரின் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புவதையே இலட்சியமாக - உயிர்மூச்சாகக்கொண்டு திகழ்ந்தவரல்லவா? இதைவிட வேறென்ன பொருத்தம் வேண்டும்?

விழாவையொட்டி, முதல் நாளே நாகர்கோவில் முழுவதும் விழாக்கோலம் பூண்டிருந்தது. வளைவுகளும் தோரணங்களும் அலங்கார விளக்குகளும் நகரை அலங்கரித்தன. இவற்றைக் காண இரவு முழுவதும் மக்கள் குடும்பம் குடும்பமாக - சாரை சாரையாக நடமாடிக் கொண்டிருந்தது, இரவே பகலாகிவிட்டதோ என்று எண்ணும்படியாக இருந்தது.

7.7.79 காலை, 9 மணியளவில் விழா தொடங்கியது. விழா அரங்கில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

சட்டமன்ற உறுப்பினர் திரு சி. கிருஷ்ணன் அவர்கள் விழாவிற்கு வந்திருந்தோர் அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்துகையில், ''இதுகாறும் தந்தை பெரியாரின் விழாவினை ஒரு குறிப்பிட்ட இயக்கத்தினரே கொண்டாடி வந்தனர். இப்போது, அரசுச் சார்பிலேயே அதனைக் கொண்டாடுகின்ற நல்லதொரு வாய்ப்பினை நமது புரட்சித் தலைவர் அவர்கள் உருவாக்கியுள்ளார்கள்'' என்றார்.

அடுத்து திரு. திருக்குறளார் வீ.முனிசாமி அவர்கள் தொடக்க உரையாற்றினார். அவர் குறிப்பிட்டதாவது:

''மூடப் பழக்க வழக்கங்கள் ஒழிய வேண்டும்; பகுத்தறிவு பெருகவேண்டும் என்று பெரியார் வாழ்நாளெல்லாம் பாடுபட்டார்.

''உனக்கொரு அறிவு இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்- அதைப் பயன்படுத்தி வாழு என்று சொல்லி விளங்கவைத்தவரே பெரியார்தான்.

''உலகத்திலேயே சாதி ஒழிப்புக்குப் போராடி, முதன் முதலாகச் சிறைக்குப் போனவர் பெரியார்தான்.

''சாதி மதபேதங்களை -மூடப் பழக்க வழக்கங்களை வளர்க்கின்ற கருத்துடைய பாடங்களை நமது பாடத் திட்டத்திலிருந்து நீக்கியாக வேண்டும்.

''ஒருவன் எவ்வளவுதான் படித்தவனாக இருந்தாலும், அவன் பகுத்தறிவுள்ளவனாக வாழ்ந்தாலன்றி இந்த நாட்டிற்கு நன்மை செய்ய முடியாது.''

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் செல்வி பி.டி. சரசுவதி அவர்கள் தலைமையில் மகளிர் அரங்கம் துவங்கியது. அமைச்சர் தம் தலைமையுரையில் குறிப்பிட்டதாவது;

''இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவரான தந்தை பெரியார், தாம் வாழ்ந்த காலத்தில் பிரச்சினைக்குரியவராகவே வாழ்ந்தார்.

''பிறர் மனத்தைப் புண்படுத்துமே என்பதற்காக அவர் கவலைப்பட்டதில்லை. சொல்ல விரும்பிய கருத்துக்களை-சொல்ல வேண்டிய கருத்துக்களை வெளிப்படையாக - துணிச்சலாக-தெளிவாகச் சொன்னவர் தந்தை பெரியார்.

''தந்தை பெரியார் சிக்கனமாக வாழ்ந்தார். தனக்காக-தன் வாரிசுக்காக என்று அவர் அப்படி வாழவில்லை. வாழ்க்கையின் அடித்தளத்தில், வாழ்வோடு போராடி உழன்று கொண்டிருந்த கடைகோடி மக்களுக்காகவே அவர் பணத்தைச் சேர்த்தார். இந்த நாட்டின் ஏழை எளிய மக்களை-ஆதரவற்ற மக்களை-வாழவைப்பதற்கென்றே அவர் சிக்கனமாக வாழ்ந்து பொருளைச் சேர்த்தார்.

''இன்று இந்த நாட்டில் பெண்கள் பலர் டாக்டர்களாகவும்,

அறிவியல் மேதைகளாகவும், பொறியியலாளராகவும், அமைச்சர்களாகவும் இன்னும் இப்படிப் பட்ட பல்வேறு பதவிகளிலும் இருக்கிறோம் என்றால் அது, தாய்க் குலத்திற்குத் தந்தை பெரியார் தந்த பிச்சை என்பதை நாம் மறுக்கவோ மறைக்கவோ முடியாது''.

அடுத்து குற்றாலம் பராசக்தி கல்லூரி முதல்வர் செல்வி பாகீரதி, பேராசிரியை திருமதி அவ்வையார் அழகப்பன், திருமதி சாந்தா பாலகிருஷ்ணன் ஆகியோர் தந்தை பெரியார் அவர்கள் மகளிர் சமுதாயத்திற்கு ஆற்றியிருக்கிற அரும்பணிகளையெல்லாம் விளக்கினார்கள்.

திருமதி அந்தோணி அம்மாள் அனைவருக்கும் நன்றி கூறினார்.

டாக்டர் அவ்வை நடராசன் அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது. 'ஏற்றமிகு பேச்சாளர் பெரியார்' 'பண்புகளின் பாசறை பெரியார்', 'புதிய சகாப்தத்தின் விடிவெள்ளி பெரியார்', 'சீர்திருத்தச் செம்மல் பெரியார்', 'பகுத்தறிவுத்தந்தை பெரியார்' என்னும் தலைப்புகளில் முறையே கவிஞர்கள் ப. வளன் அரசு, ஈரோடு தமிழன்பன், இ. முத்துராமலிங்கம், டாக்டர் எஸ். நாகராசன், இரா. அரங்கசாமி ஆகியோர் தாம் இயற்றிய கவிதைகளை அரங்கேற்றினர். முற்பகல் நிகழ்ச்சி இத்துடன் முடிவுற்றது.

தந்தை பெரியாரின் சீரிய கொள்கைகளையும், அவரது வாழ்க்கையின் முக்கிய நிகழ்ச்சிகளையும் சித்திரிக்கும் அலங்கார வண்டிகளின் சிறப்பு அணிவகுப்பு ஊர்வலம் பிற்பகல் 4-00 மணியளவில் சேது இலக்குமிபாய் அரசு மேல்நிலைப் பள்ளியிலிருந்து புறப்பட்டது. நாகர்கோவில் சிறுத்ததோ, பெரியார் பெரும்படை பெருத்ததோ என்று கருதுகின்ற அளவிற்கு வெள்ளம் போல் மக்கள் கூட்டம் கலந்து கொண்ட அந்த எழுச்சி மிக்க ஊர்வலத்தினை வழியில் ஒரு மேடையில் நின்றவாறு மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர் பார்வையிட்டார்.

ஊர்வலம், நகரின் முக்கியத் தெருக்களின் வழியே அண்ணா விளையாட்டரங்கம் வந்து அடைந்தது.

நிதியமைச்சரின் பேரவைச் செயலர் நாஞ்சில் திரு எம்.வின்சென்ட் அவர்கள் தமது வரவேற்புரையில், நாஞ்சில் மாவட்டத்தின் பெருமைகளை விளக்கிட்டு, ''கட்சி பேதமின்றி, எந்தக் கட்சியாக இருந்தாலும், இந்த நாட்டுக்கு நல்லனவற்றைச் சொல்லி வைத்த தலைவர்களுக்கெல்லாம் புரட்சித் தலைவரின் தலைமையில் சிறப்புற இயங்கும் இந்த அரசு விழாவெடுத்துச் சிறப்புச் செய்கிறது'' என்று கூறி அனைவரையும் வரவேற்றார்.

அடுத்து மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள், தந்தை பெரியாரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து மிகச் சிறந்ததோர்உரை நிகழ்த்தினார். அவர் தம் உரையில் குறிப்பிட்டதாவது:

''பெரியார் அவர்களின் பகுத்தறிவுப் பிரச்சாரம் தமிழ்ச் சமுதாயத்தை விழிப்புறச் செய்திருக்கிறது.

''பெரியார், சமுதாயத்தில் எதிர்நீச்சல் போட்டே வளர்ந்தார். அவர் நடந்து வந்திருக்கிற பாதை மிகவும் கரடுமுரடானது.

''பெரியாரை நான் எண்ணிப் பார்க்கும்போது, என் மனக்கண் முன்னே பெர்னாட்ஷா தோன்றுகிறார்; மார்ட்டின் லூதர் தோன்றுகிறார்; கார்ல் மார்க்ஸ் தோன்றுகிறார்; பெட்ரண்ட் ரசல் தோன்றுகிறார்; ரூசோ தோன்றுகிறார்; சாக்ரடீஸ் தோன்றுகிறார். இளைஞர்கள், பெரியாரின் எண்ணங்களை இதயத்தில் ஏற்றுச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

பின்னர், டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தமது உணர்ச்சிமிக்க தலைமையுரையை நிகழ்த்தினார். அவர் உரையில் குறிப்பிட்டதாவது:

''வீழ்ச்சியுற்ற தமிழர்க்கு எழுச்சியூட்டியவர் தந்தை பெரியார். தாழ்வுற்ற சமுதாயத்தினைத் தலைநிமிரச் செய்தவர் தந்தை பெரியார்.

''எங்களையெல்லாம் ஆளாக்கிய பெருமை அறிஞர் அண்ணாவுக்கு உண்டு. அறிஞர் அண்ணாவை உருவாக்கிய பெருமை தந்தை பெரியாருக்கு உண்டு.

''தந்தை பெரியார், பிறக்கும் போது, வெறும் இராமசாமியாகத்தான் பிறந்தார்; இறக்கும் போதோ தந்தை பெரியாராக இறந்தார்.''

டாக்டர் நாவலர் அவர்கள் பேசுகையில் மழை தூறியது; அப்போது அவர்கள் "செயற்கரியவற்றைச் செய்த தந்தை பெரியாரின் விழாவினை நாமும் மகிழ்ச்சியோடு கொண்டாடுகிறோம்; நாம் குற்றாலத்திற்குப் போகாமல் குற்றாலமே இங்கு வந்தது போல, மழையும் மகிழ்கிறது'' என்றார்.

முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ.பெ. விசுவநாதம், டாக்டர் மோசஸ், திரு கே.எஸ். அப்துல் வகாப் எம்.எல்.சி., திருவாரூர் திரு கே. தங்கராசு ஆகியோர் பெரியாரின் சிறப்புகளையும் அவர்தமிழினத்திற்கு ஆற்றியுள்ள அரும்பணிகளையும் பாராட்டினார்கள்.

பிறகு நல்ல மழைக்கிடையே மாண்புமிகு முதல்வர் விழா சொற்பொழிவைத் தொடங்கினார்கள். மழை 'சோ'வென்று கொட்டத் தொடங்கியது. எனினும் அறிஞர் அண்ணா விளையாட்டரங்கில் நிரம்பி வழிந்த மக்கள் கூட்டம் ஒரு சிறிதும் கலையவில்லை.

மக்கள் தாங்கள் உட்கார்ந்திருந்த நாற்காலிகளையே தலைக்குமேல் தூக்கிக் குடைபோலப் பிடித்துக் கொண்டும், துணிகளைத் தலையில் போட்டுக் கொண்டும் ஆடாமல் அசையாமல் நின்ற காட்சி காண்போரை மெய்சிலிர்க்க வைப்பதாக இருந்தது.

முதல்வர் சுமார் இரண்டு மணி நேரம் உணர்ச்சிக்க உரையாற்றினார்கள். அவர் குறிப்பிட்டதாவது:

''தாழ்த்தப் பட்டவர்களும் உயர்வு பெறவேண்டும் என்பதே நமது குறிக்கோள்: பெரியாரின் குறிக்கோளும் அதுதான்: பெரியார் சுட்டிக் காட்டிய சமூக அநீதிகளை அகற்ற நாங்கள் பாடுபட்டு வருகிறோம்.

''பெரியாருடைய சக்தியின் பல்லாயிரக் கணக்காண துளிகளில் நானும் ஒருவன்.

நாங்கள் ஐயாவின் கொள்கைகளை அண்ணாவின் வழியில் நிறைவேற்றுவதில்தான் நம்பிக்கை கொண்டுள்ளோம். அதில்தான் தொடர்ந்து நம்பிக்கை வைத்து வருகிறோம். பிற்பட்ட மக்களுக்கு - அதிலும் கிராமங்களில் வாழ்கிற ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கு அரசின் சலுகைகள் எட்ட வேண்டும்; ஏழையென்பதால் அவர்கள் வாய்ப்பை இழந்துவிடக் கூடாது- ஏழை எளிய மக்களும் படித்துப் பட்டம் பெறவேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கம்.

''உயர்வு தாழ்வு என்பது கூடாது என்று ஐயா சொன்னார். அந்த வகையில் பல சீரிய திட்டங்களைச் சென்னையில் வருகிற செப்டம்பர் மாதத்தில் நடைபெற இருக்கிற பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவில் அரசு அறிவிக்கும்!''

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. துரை சுந்தரேசன் அவர்கள் நன்றி கூறினார். பிற்பகல் நிகழ்ச்சி, திரு சி.எஸ்.பாண்டியன் குழுவினரின் 'பெரியாரும் கலைவாணரும்' என்னும் கலைநிகழ்ச்சியோடு தொடங்கி, திரு கே.பி. ராஜ்மோகன் குழுவினரின் 'பெரியார் ஒரு சகாப்தம்' என்னும் நாடகத்தோடு விழா நிறைவுற்றது.

நிகழ்ச்சித் தொகுப்பு:


**சாமி பழனியப்பன்.**

# விருதுநகரில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா

''தந்தை பெரியாருக்குக் கொள்கை வழி விருதாகக் கொடுக்கப்பட்ட நகர்'' என்னும் சிறப்புப் பெற்ற விருதுநகரில், தமிழ்நாடு அரசின் சார்பில், (க்ஷத்திரிய) பெண்கள் மேல் நிலைப் பள்ளியில், 8.7.79ல் தந்தை பெரியார் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் திரு நெ.து. சுந்தரவடிவேலு அவர்கள் தலைமையில் தொடங்கியது.

பாராளுமன்ற உறுப்பினர் திரு பொ. அன்பழகன், விருதுநகரில் இந்த விழா கொண்டாடப்படுவதற்குரிய சிறப்புகளை விளக்கி அனைவரையும் வரவேற்றார்.

விழாவைத் தொடங்கி வைத்து தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:



''தமிழக அரசு, ஒரு மாவட்டத்திற்குப் பெரியார் மாவட்டம் என்று பெயர் வைத்ததற்காக நாம் இந்த அரசைப் பாராட்டுகிறோம்; நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

'இராமநாதபுரம் மாவட்டத்தில், பெரியார் நினைவாக ஒரு கிராமத்தை உருவாக்க வேண்டும்; அதற்குப் பழைய கிராமங்கள் எதுவும் சரிவரவில்லை என்றால், 300 குடும்பங்கள் உள்ள ஒரு புதிய கிராமத்தை உருவாக்க வேண்டும். அதை, தந்தை பெரியார் நினைவுக் கிராமமாக அறிவிக்க வேண்டும். பெரியாரின் கொள்கைகள் கோட்பாடுகள் அங்கு பரவிக் கால்கொள்ளுமாறு செய்ய வேண்டும்.''

திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் தமது தொடக்க உரையில் குறிப்பிட்டதாவது:

''பெரியாரின் நினைவைப் போற்றும் வகையில் பெரியார் நூற்றாண்டு விழாவை மாதந்தோறும் ஒவ்வொரு மாவட்டத்திலும் கொண்டாடி வரும் தமிழக அரசைப் பாராட்டுகிறேன்-முதலமைச்சர் திரு எம்.ஜி.ஆர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

''பெரியாரின் கொள்கைகள், தாழ்த்தப்பட்ட - பிற்பட்ட மக்களைச் சிந்திக்கச் செய்தன. அவர்கள் மேம்பாட்டுக்குப் பெருந்துணை புரிந்தன.''

தொடர்ந்து 'பெரியாரும் தன்மான உணர்வும் என்ற தலைப்பில் திருக்குறளார் வீ.முனுசாமியும், 'பெரியாரும் புரட்சிச் சிந்தனைகளும்' என்ற தலைப்பில் டாக்டர் தமிழண்ணலும் 'பெரியாரும் கலையுலகப் புரட்சியும்' என்னும் தலைப்பில் நடிகமணி டி.வி. நாராயணசாமியும், 'பெரியாரும் போராட்டங்களும்' என்ற தலைப்பில் திரு வி.ஏ. பழனியும், 'பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும்' என்ற தலைப்பில் திரு கடம்பூர் இரா.சனார்த்தனமும், பெரியாரும் சாதி ஒழிப்பும்' என்ற தலைப்பில் திரு பழனி அரங்கசாமியும், 'பெரியாரும் சமூகச் சீர்திருத்தமும்' என்ற தலைப்பில் திருமதி விசயாமுத்து வண்ணனும்னும், 'பெரியாரும் தீண்டாமை ஒழிப்பும்' என்ற தலைப்பில் திரு செங்கோட்டை சனார்த்தனமும் தத்தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

சட்டமன்ற உறுப்பினர் திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்கள் நன்றிகூற, முற்பகல் நிகழ்ச்சி முற்றுப்பெற்றது.

## அணிவகுப்பு - ஊர்வலம்

விழாவையொட்டி நகரெங்கும் வண்ணத் தோரணங்களும், வரவேற்பு வளைவுகளும், அலங்காரப் பந்தல்களும் அணி செய்தன. மாலை 5 மணி அளவில் விருதுநகர் சுப்பையா (நாடார்) அரசு உயர்நிலைப் பள்ளியிலிருந்து மாபெரும் அணிவகுப்பு ஊர்வலம் நடைபெற்றது.

தெருக்கள், கடைவீதிகள் எங்கும் பெரியாரின் பொன்மொழிகள் எழுதி வைக்கப்பட்டிருந்தன.

ஊர்வலம், நகரின் முக்கியத் தெருக்கள் வழியாக, ஆண்கள் (க்ஷத்திரிய) மேல்நிலைப் பள்ளித் திடலை வந்தடைந்தது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கா.காளிமுத்து அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். அவர் பேசுகையில், ''தந்தை பெரியார் தமிழினத்தின் தனிப் பெருந் தலைவர்; அவர் தமிழினத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்குமே வாழ்நாளெல்லாம் பாடுபட்டார். அவருடைய நூற்றாண்டு விழா வைத்தான் ஓராண்டு முழுவதும், 4½ கோடி மக்களின் சார்பில் தமிழக அரசு கொண்டாடுகிறது'' என்றார்.

டாக்டர் நாவலர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்:

''தந்தை பெரியாரின் சீரிய கருத்துக்களுக்குக் கைகொடுக்க முன்வந்த நகரங்களில் மிக முக்கியமான நகர் விருதுநகர்.

''சாக்ரடீஸ் ஏதன்ஸ் நகரத்தின் வீதிகளிலும், மண்டபங்களிலும் மட்டுமே தன் கருத்துக்களைப் பரப்பி வந்தார்; கார்ல் மார்க்ஸ் லண்டனில் இருந்துதான் 'மூலதனம்' என்னும் நூலை எழுதினார். ரசல் தன் கருத்துக்களை லண்டனில்தான் வழங்கினார். இவர்களெல்லாம் தாம் இருந்த இடத்திலேயே இருந்து தம் கருத்துக்களைப் பரப்பி வந்தனர். ஆனால், தந்தை பெரியார் மட்டும், தமிழகத்தின் நகரங்களில் மட்டுமல்ல - மூலை முடுக்கிலுள்ள பட்டிதொட்டிகள் எங்கும் சென்று தன் கருத்துக்களை பரப்பினார், யாருக்கும் தோன்றாத கருத்துக்களை எடுத்துச் சொன்னார். வாழ்நாள் முழுதும் தன் கருத்துக்களை எவருக்கும் அஞ்சாமல்-தெளிவாகவும் ஆணித்தரமாகவும் எடுத்துக் கூறினார்.''

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி சோமசுந்தரம் அவர்கள் தம் சிறப்புரையில் குறிப்பிட்டார்:

''திராவிடச் சமுதாயம் முன்னேற தந்தை பெரியார் எந்தெந்தக் கருத்துக்களைச் சிந்தித்தார்களோ, சொன்னார்களோ, அந்தக் கருத்துக்களை

யெல்லாம் மற்றவர்கள் புரட்சிக் கருத்துக்கள் - பகுத்தறிவுக் கருத்துக்கள் என்று பாராட்டினார்கள்.

''பெரியார் கொள்கைகளைப் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு நடைமுறைப் படுத்திவருகிறது. பெரியார் இன்று இருந்திருந்தால், புரட்சித் தலைவரின் தலைமையில் இயங்கும் இந்த ஆட்சியை-இந்த அரசை நிச்சயம் ஆதரிப்பார் என்பது உறுதி''.

திருவாரூர் திரு. கே. தங்கராசு அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''புரட்சித் தலைவரின் இந்த அரசு, தந்தை பெரியாரின் எந்தெந்தக் கொள்கைகளுக்குச் செயல்வடிவு - சட்டவடிவு தர முடியுமோ அந்தந்தக் கொள்கைகளுக்குச் செயல் வடிவும் சட்ட வடிவும் தந்து கொண்டிருக்கிறது.

''கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் ச லு கை க ள் அனைத்தும் தரப்படும் என்று முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் அறிவித்தாரே, இது சாதனையா இல்லையா?''

முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

''பெரியாரின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதன் மூலம் இந்த அரசு நல்லபணியை-நல்ல முறையில் செய்கிறது.

''பெரியார் ஒரு நல்ல சிந்தனையாளர். மக்களுக்குச் சிந்திக்கக் கற்றுக் கொடுத்தவர்; மக்களைச் சிந்திக்க வைத்தவர்; சிந்தனையைத் தூண்டி வளர்த்தவர். பெரியார் தோன்றியிராவிட்டால், தமிழகத்தில்-தமிழ் மக்களிடத்தில் இவ்வளவு சிந்தனையுணர்வு ஏற்பட்டிருக்காது.

''நபிகள் நாயகமும் பெரியாரும் தாம், தம் வாழ்நாளிலேயே வெற்றிகண்டு பெருமைப்பட்டவர்கள்.

''பெரியார் பெயரால், தமிழகத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று தொடங்க வேண்டும்''.

விருதுநகர் திரு. உத்தண்டன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தந்தை பெரியாருக்கும்விருதுநகருக்கும் மிக நெருக்கமான தொடர்பு உ ண் டு. அவரது கொள்கைகளுக்கு நல்லாதரவு தந்தது விருதுநகர்.''

மா ண் பு மி கு அரிசன நலத் துறை அமைச்சர் திரு பெ.சவுந்தரபாண்டியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''உலகில், பெரும்பாலும் நாட்டைத் திருத்த வந்த அத்தனை பேரும் வீட்டைத் துறந்தவர்கள். பெரியாரோ, நாட்டை திருத்து முன் வீட்டைத் திருத்த முன் வந்தவர்.''

சட்டமன்றத் துணைத் தலைவர் திரு எஸ்.திருநாவுக்கரசு பேசுகையில் குறிப்பிட்டார்:

''தந்தை பெரியார் சுய சிந்தனையாளராக வாழ்ந்தார். இன்று அரசியலில்-பொது வாழ்வில் ஈடுபடுபவர்கள் பெரியாரின் பண்புகளை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும். அவரைப் போல, செயலிலும் சொல்லிலும் வெளிப்படையாக இருக்க வேண்டும்.''

மாண்புமிகு கிராம கைத்தொழில் அமைச்சர் திரு கா. இராசா முகமது அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''சின்னஞ்சிறு வடிவத்தில் இங்கு கொடுக்கப்படும் பெரியாரின் சிலையை ஒரு சின்னஞ்சிறு உண்டியலாகச் செய்து கொடுத்தால், பெரியாரின் சிக்கனத்தையும் சேமிப்பையும் குழந்தைகளுக்கு உணர்த்தி அவர்களையும் சிக்கனமாகவும், சேமிக்கும் பழக்கத்துடனும் வாழச் செய்யலாம். பெரியாரின் சிக்கனத்திற்கும் சேமிப்பிற்கும் இது ஓர் எடுத்துக் காட்டாகவும் இருக்கும்.''

மாண்புமிகு சமுகநலத் துறை அமைச்சர் செல்வி பி.டி.சரஸ்வதி அவர்கள் பேசியதாவது:

''எதையும் சொல்வதோடு கடமை முடிந்துவிட்டது என்று கருதாமல், சொன்னதைச் செயல்படுத்திக் காட்டியவர் தந்தை பெரியார்.

''வெ ட் டு ஒன்று து ண் டு இரண்டு என்று பேசுவாரே தவிர, வழவழ என்று பேசுவது அவருக்குப் பிடிக்காது.''

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு எஸ்.இராகவானந்தம் அவர்கள் பேசியதாவது:

''மனத்தில் பட்டதை ஒளிக்காமல்-மாற்றாமல் நேரடியாகச் சொன்னவர் தந்தை பெரியார். அவற்றைப் பக்குவமாகச்சொல்லி அவர் கொள்கைகளுக்கு ஆதரவு தேடி அவற்றைப் பரப்பியவர் அறிஞர் அண்ணா.''

வணக்கத்திற்குரிய ம து ரை மேயர் அவர்கள் பேசியதாவது:

''தமிழகத்தைப் பொறுத்தவரை, பிற்பட்ட — தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்ந்திருக்கிறார்கள் என்றால், அதற்குத் தந்தை பெரியாரின் 60 ஆண்டுக் காலப் பெரு முயற்சிதான் காரணம்.''

தந்தை பெரியாரின் கொள்கைகள் நிறைவேற்றப்படுகின்றன என்பதற்கு அறிகுறியாக விழாப் பந்தலிலேயே விதவைத் திருமணங்களும், கலப்புத் திருமணங்களுமாக 10 ஜோடிகளுக்கு நடத்தி வைக்கப்பட்டன. முதல்வர் திரு எம்.ஜி.ஆர் அவர்கள், அவர்களுக்கு மங்கல நாண்களை எடுத்துக் கொடுத்துத் திருமணங்களை நடத்தி வைத்து, மணமக்களை வாழ்த்தினார்.

பின்னர் முதல்வர் அவர்கள் தமது சிறப்புரையில் குறிப்பிட்டதாவது:

''மாற்றுக் கருத்துக்களையுடையோரும் நமது கருத்துக்களை ஏற்கும் வகையில் நமது கருத்துகளைச் சொல்லவேண்டும் என்பதை அமரர் அறிஞர் அண்ணா அவர்கள் நமக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

''இந்தியாவின் மற்ற பகுதிகளும் தமிழகத்தைப் பின்பற்றும் வகையில் சில ஆண்டுகளில் தமிழகம் சிறந்த இடத்தைப் பெறும். அதற்கான அறிவு, ஆற்றல், பண்பு முதலியன தமிழக மக்களுக்கு உண்டு.

''சமுதாயத்தில் எதிர்நீச்சல் போட்டே பழக்கப்பட்டவர் ஐயா அவர்கள். எல்லாராலும் அப்படிச் செய்ய முடியாது. ஐயா அவர்களைச் சிலர் சர்வாதிகாரி என்பார்கள்; ஐயா அவர்களிடம் ஜனநாயகப் பண்பு நிறைந்திருந்தது.

''ஒழுக்கம் கடவுளை விட முக்கியம் என்றார் ஐயா. அந்த ஒழுக்கத்தை - நன்னெறியை - ஐயா ஏற்ற குறள் நெறியைத் தழைக்கச் செய்வோம்.''

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எஸ்.சுப்பிரமணியம், அனைவருக்கும் நன்றி கூறினார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு எம். சுந்தரராசன் தலைமையில் திரு கே.பி. ராஜ்மோகன் குழுவினரின் 'பெரியார் ஒரு சகாப்தம்' என்னும் நாடகம் நடைபெற்றது.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**

**சாமி பழனியப்பன்**

காலத்தை வென்ற கவிதை

# ஆறு

கவிமணி
தேசிக விநாயகம் பிள்ளை

கல்லும் மலையும் குதித்துவந்தேன்—பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி—எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.

கட்டும் அணையேறிச் சாடிவந்தேன்—அதன்
கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன்;
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன்—மடைச்
சீப்புகள் மோதித் திறந்துவந்தேன்.

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன்—அதில்
கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன்;
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்—அங்கென்
ஆசை தீரவிளை யாடிவந்தேன்.

ஏறாத மேடுகள் ஏறி வந்தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.


ஆயிரம் காலால் நடந்துவந்தேன்—நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்துவந்தேன்;
நேய முறப்புன் செய்க்காட்டினிலும்—அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன்.

பஞ்சை அரைத்துநூல் நூற்றுவந்தேன்—சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன்;
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரில்—குழாய்
நீராகவும் சென்று பாய்ந்துவந்தேன்.


மாங்கனி தேங்கனி வாரிவந்தேன்—நல்ல
வாச மலர்களும் அள்ளிவந்தேன்;
தீக்கரும் பாயிரம் தள்ளிவந்தேன்—மிகத்
தேனும் தினையுமே சேர்த்துவந்தேன்.

அல்லும் பகலும் அலைந்துவந்தேன்—எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்;
நில்லும் எனக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்ட வழிபோக வேண்டுமம்மா!

(பாரி நிலையம் வெளியிட்டுள்ள 'மலரும் மாலையும்'
என்னும் நூலிலிருந்து)



சில கவிவாணர்களின் கவிதைகள் காலத்தையும் வென்று—நிலைத்து நிற்கும் பேராற்றல் பெற்றுத் திகழ்கின்றன. அத்தகைய கவிதைகளை இதழ் தோறும் வெளியிட்டு நினைவஞ்சலி செய்யத் 'தமிழரசு' முனைந்துள்ளது. அந்தப் பணியின் தொடக்கமாக 'கவிமணி' யின் கவிதையை இங்கே வெளியிடுகிறோம்.




"கமலம்! அந்தக் கூஜாவிலே தண்ணீர் எடுத்தா! வெற்றிலைச் செல்லம் எங்கே? வச்சது வச்ச இடத்தில் இருந்தால்தானே!'' என்று முணுமுணுத்தார் முருகதாசர்.

கையில் இருக்கும் கோரைப் பாயை விரிப்பதே ஒரு ஜால வித்தை. நெடுநாள் உண்மையாக உழைத்தும் பென்ஷன் கொடுக்கப்படாததால், அது நடுமத்தியில் இரண்டாகக் கிழிந்து, ஒரு கோடியில் மட்டிலும் ஒட்டிக் கொண்டிருந்தது. அதை விரிப்பது என்றால், முதலில் உதறித் தரையில் போட்டுவிட்டு, கிழிந்து கிடக்கும் இரண்டு துண்டுகளையும் சேர்த்துப் பொருந்த வைக்க வேண்டும். அதுதான் பூர்வாங்க வேலை. பின்பு, விடுதலைபெற முயற்சிக்கும் அதன் கோரைக் கீற்றுகள் முதுகில் குத்தாமல் இருக்க ஒரு துண்டையோ, அல்லது மனைவியின் புடவையையோ, அல்லது குழந்தையின் பாவாடையையோ எதையாவது எடுத்து மேலே விரிக்கவேண்டும்.

முருகதாசரைப் பொறுத்த வரை - அது அவரது புனை பெயர்-அது இரண்டு பேர்செய்ய வேண்டிய காரியம்.

மறுபடியும், ''கமலா!'' என்று கூப்பிட்டார்.


சமையல்+உக்ராண + ஸ்நான அறை, மூன்று நான்கு கட்டுகள் தாண்டி, துண்டாக, அலாதியாக இருப்பதால், இவருடைய பாய் விரிப்புக் கஷ்டங்கள் அந்த அம்மையாருக்கு எட்டவில்லை.

சென்னையில் 'ஒட்டுக் குடித்தனம்' என்பது ஒரு ரசமான விஷயம். வீட்டுச் சொந்தக்காரன், குடியிருக்க வருகிறவர்கள் எல்லோரும் 'திருக்கழுக்குன்றத்துக் கழுகு' என்று நினைத்துக் கொள்ளுவானோ என்னமோ!

## சாகாவரம் பெற்ற கதைகள்

இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் தமிழ் இலக்கிய உலகிலே தோன்றிய மறுமலர்ச்சியில், சிறுகதைகளுக்குச் சிறப்பான இடம் உண்டு. அன்றும் இன்றும் என்றும் நின்று நிலைத்து நிற்கக்கூடிய—உலகத்துச் சிறந்த சிறு கதைகள் வரிசையிலே இடம் பெற முழுத் தகுதி படைத்த அமரத்துவம் வாய்ந்த அற்புதமான சிறுகதைகள் பல, தமிழிலே இந்தக் கால கட்டத்திலே உருவாயின. அப்படிப்பட்ட சிறந்த கதைகள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து, தொடர்ந்து 'தமிழரசு' இதழில் வெளியிட முடிவு செய்துள்ளோம்.

தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டு இன்றைய புகழ்பெற்ற எழுத்தாளர் பலருக்கு முன்னோடியாகவே திகழும் அமரர் புதுமைப்பித்தனின் சிறந்த சிறுகதை ஒன்றுடன் இத்தொடரினைத் தொடங்குகிறோம்:



'குடித்தனக்காரர் குடியிருக்க இரண்டு ரூம் காலி' என்று வெளியில் போட்டிருந்த போர்டை நம்பித்தான் முருகதாசர் வீடு-வேட்டையின்போது அங்கே நுழைந்தார்.

உள்ளே வீட்டின் பாக வசதிதான் விசித்திரமாக இருந்தது. முன் பக்கம், ஒற்றைச் சன்னல் படைத்த ஒரு சிற்றறை. அதற்கப்புறம், எங்கோ பல கட்டுகள் தாண்டி மற்றொரு அறை. அதுதான் சமையல் வகையராவுக்கு. முதல் அறை படிக்க, படுக்க, நாலுபேர் வந்தால் பேச -இவை எல்லாவற்றிற்கும் பொது இடம். முதலில் முருகதாசர் பொருளாதாரச் சலுகையை உத்தேசித்தே அதில் குடியிருக்கலாம் என்று துணிந்தார். அதனால் தமக்கும் தம் சகதர்மிணிக்கும் இப்படி நிரந்தரமான 'பிளவு' இருக்கும் என்று சிறிதும் எட்டி யோசிக்கவில்லை; மேலும் அவர், யோசிக்கக்கூடியவரும் அல்லர்.

பக்கத்தில் இருந்த அரிக்கன் விளக்கை எடுத்துக் கொண்டு, அவர் சமையல் பகுதியை நோக்கிப் பிரயாணமானார்.

இடைவழியில், குழாயடியில் உள்ள வழுக்குப் பிரதேசம், அடுத்த பகுதிக்காரர், விறகுக் கொட்டில் முதலிய விபத்துக்கள் உள்ள 'பிராட்வேயை' எல்லாம் பொருட்படுத்தாது, ஒருவாறு வந்து சேர்ந்தார். சமையல் அறை வாசலில் ஒரே புகைமயம். ''கமலம்!'' என்று கம்மிய குரலில் கூப்பிட்டுக்கொண்டு, உள்ளே நுழைந்தார்.

உள்ளே புகைத் திரைக்கு அப்பாலிருந்து, ''வீடோ லட்சணமோ! விறகைத்தான் பாத்துப் பாத்து வாங்கிக் கொண்டு வந்தியளே! உங்களுக்கின்னு தண்ணீலே முக்கிக் குடுத்தானா? எரியவே மாட்டுதில்லை! இங்கே என்ன இப்பொ? விறகு வாங்கின சீரைப் பார்த்து மகிழ வந்திட்டியளாக்கும்!'' என்று வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது.

''தீப்பெட்டியை இப்படி எடு! அதுக்காகத்தான் வந்தேன்!'' என்று நடைப்பக்கமாகப் பின் நோக்கி நடந்தார்.

''இங்கே குச்சியுமில்லே, கிச்சியுமில்லே! அலமுவெத் தீப்பெட்டி வாங்க அனுப்பிச்சேன். மண்ணெண்ணெய் விளக்கெ நீங்கதான் துடைச்சுக் கொள்ளணும்!'' என்றாள் கமலம்.

''குழந்தையை அந்தியிலே வெளியிலே அனுப்பிச்சையே. நான் வந்தபிறகு வாங்கிக்கொள்ளப்படாதா?'' என்று அதட்டினார் முருகதாசர்.

''ஆமாம், சொல்ல மறந்தே போயிட்டுதே. செட்டியார் வந்துவிட்டுப் போனார்; நாளை விடியன்னை வருவாராம் என்றாள் கமலா.


முருகதாசர் இந்தப் பாசுபதாஸ்திரத்தை எதிர்பார்க்கவில்லை.

''வந்தா வெறுங் கையை வீசிக்கிட்டுப் போகவேண்டியதுதான்! வர்ரதுக்கு நேரம் காலம் இல்லை?'' என்று முணுமுணுத்துக் கொண்டே வெளியேற முயற்சித்தார்.

''அங்கே எங்கே போயிட்டிஹ? ஒங்களைத்தானே! கொஞ்சம் நல்லெண்ணெய் வாங்கிக்கிட்டு வாருங்களேன்!''

''எங்கிட்ட இப்போ துட்டுமில்லே, காசுமில்லை!'' என்று திரும்பி நின்று பதிலளித்தார் முருகதாசர்.

''அதுவும் அப்படியா! இன்னா இந்த* மிளவொட்டியிலே மூணு துட்டு இருக்கு; அதெ எடுத்துக்கிட்டுப் போங்க.



**புதுமைப்பித்தன்**

''வந்ததுக்கு ஒரு வேலையா? அங்கே ஒரு பாடு எழுதித் தொலைக்கணும். இங்கே உனக்கு இப்பத்தான் எண்ணெ—புண்ணாக்கு- பகலெல்லாம் என்ன செய்துக்கிட்டு இருந்தே! இருட்னம் பொறவா எண்ணை வாங்கறது! எல்லாம் நாளைக்குப் பார்த்துக்கலாம்!''

''சோம்பல் வந்தா சாத்திரமும் வரும், எல்லாம் வரும். ஏன், அண்ணைக்குப்போய் வாங்கிட்டு வரலியா - எல்லாம் ஒங்களுக்குத்தான். இப்பத்தான் அப்பளக்காரன் வந்து கொடுத்துட்டுப் போனான்; பிரியமா சாப்பிடுவேளென்னு சொன்னேன். பின்னே அந்த சின்னக்கொரங்கே என்ன இன்னும் காணலே! போனாப் போனதுதான்; நீங்கதான் சித்த பாருங்களேன்!''

இவ்வளவிற்கும் அவர் இருந்தால்தானே! விறகுப் பிரதேசத்தைத் தாண்டி வழுக்குப் பிரதேசத்தை எட்டிவிட்டார். புகையையும் பேச்சையும் தப்பி வந்தால் போதும் என்றாகி விட்டது. முருகதாசரின் ஆஸ்தான அறையின் ஒரு விசித்திரம் என்னவென்றால், சென்னையில் ''வைட்டிங் டைம்'' அட்டவணையைக் கூட மதிக்காமல், அது இருண்டுவிடும்.

இம்மாதிரி மண்ணெண்ணெய் நெருக்கடி ஏற்படாத காலங்களில், அந்த அறைக்குத்தான்

---


மிளகுப்பெட்டி-ஐந்தறைப் பெட்டி என்பது சகஜமான பெயர்.

முதலில் இராத்திரி. ஆனால் எண்ணெய் நெருக்கடிக் காலங்களில் சிவபிரானின் ஒற்றைக்கண் போன்ற அந்த அறையின் சன்னல் எதிர்ப்பக்கம் நிற்கும் மின்சார விளக்குக் கம்பத்திலிருந்து கொஞ்சம் வெளிச்சத்தைப் பிச்சை வாங்கும், கார்ப்பொரேஷன் தயவு வரும்வரை. ஸ்ரீ முருகதாசர், வேறு வழியில்லாமல், தெருநடையில் நின்று அலமுவின் வருகையை எதிர்நோக்கியிருக்க வேண்டியதாயிற்று.

முருகதாசர் வானத்தை அளக்கும் கதைகளைக் கட்டுவதில் மிகவும் சமத்தர்; 'சாகா வரம் பெற்ற' கதைகளும் எழுதுவார். அந்தத் திறமையை உத்தேசித்து, ஒரு விளம்பரக் கம்பெனி மாதம் முப்பது ரூபாய்க்கு வானத்தையளக்கும் அவரது கற்பனைத் திறமையைக் குத்தகை எடுத்துக் கொண்டது. அதனால் அவர், வீர புருஷர்களையும், அழியாத சித்திரங்களையும் எழுத்தோவியமாகத் தீட்டுவதை விட்டு விட்டு சோயாபீன்ஸ் முதல், மெழுகு வர்த்தி வரையிலும், வெளிநாடுகளிலிருந்து வந்து குவியும் பண்டங்களின் காவியங்களை இயற்றிக் கொண்டிருக்கிறார். 'டபாஸா' வீரிய மாத்திரையின் மீது பாடிய பரணியும், தேயிலைப் பானத்தின் சுயசரிதையும், அந்தத் தமிழ் தெரியாத வெள்ளைக்காரனையும் இவர்மீது அனுதாபம் காட்டும்படி செய்துவிட்டன. அதற்காகத்தான் அந்த முப்பது ரூபாய்!

வீட்டு எதிரில் நிற்கும் மின்சார விளக்கின் உதவியைக் கொண்டும் பிள்ளையவர்களால் அலமுவைக் கண்டுபிடிக்க இயலவில்லை. வெற்றிலை, வேலை, குழந்தை வராத காரணம்-எல்லாம் அவரது மனத்தில் கவலையைக் கொண்டு கொட்டின. நடையிலிருந்து கீழே இறங்கிச் சந்தின் மூலைவரை சென்று, பார்த்து வரலாமா என்று புறப்பட்டார்.

பக்தி மார்க்கத்தில் ஏகாக்கிரக சிந்தையைப் பற்றிப் பிரமாதமாக வர்ணிக்கிறார்கள். மனம் ஒரே விஷயத்தில் லயித்துவிட்டால் போதுமாம். பிள்ளையவர்களைப் பொறுத்தவரை, அவர் இந்தப் 'பணம்' என்ற மூன்றெழுத்து மந்திரத்தில் தீவிர சிந்தை செலுத்துபவர். பணத்தை வாரிச் சேர்த்துக் குபேரனாகிவிடவேண்டும் என்ற எண்ணம் ஒன்று [illegible]லை. கவலையில்லாமல் [illegible]தா சாப்பிட்டோம், வேலை பார்த்தோம், வந்தோம் என்று இருக்க வேண்டும் என்பதற்காக, எத்தனையோ வித்தைகளையெல்லாம் செய்துவிட்டார். அவருடைய குடும்பத்தின் வரவு செலவுத் திட்டத்தை மட்டிலும், அவரால் எப்பொழுதும் சமன் செய்ய முடியவில்லை. நிதிமந்திரியாக இருந்தால், பட்ஜெட்டில் துண்டு விழுவதற்குப் பொருளாதாரக் காரணங்கள் காட்டிவிட்டு, உபமான்யங்களைத் தைரியமாகக் கேட்கலாம். கவலையில்லாமல், கொஞ்சமும் உடம்பில் பிடிக்காமல், கடன் கேட்டுப் புறப்படுவதற்கு முடியுமா? குடும்பச் செலவு என்றால், சர்க்கார் செலவாகுமா!



கவலை இருக்கப்படாது என்ற உறுதியின் பேரில்தான் நம்பிக்கை என்ற இலட்சியத்தை மட்டும் திருப்தி செய்விக்க, 'சாகா வரம் பெற்ற' கதைகளை எழுதுவதைக் கொஞ்சம் கட்டிவைத்து விட்டு, இந்த 'லிப்டன் தேயிலை', காப்பி, கொக்கோ ஆகியவற்றின் மான்மியங்களை அவர் எழுத ஆரம்பித்தார். ஒரு பெரிய நாவல் மட்டிலும் எழுதிவிட்டால், அது ஒரு பொன் காய்க்கும் மரமாகிவிடும் என்று அவர் நெஞ்சழுத்தத்துடன் நினைத்த காலங்களும் உண்டு. இப்பொழுது அது ஒரு நெடுந்தூர இலட்சியமாகவே மாறிவிட்டது.

முன்பாவது, அதாவது நம்பிக்கைக் காலத்தில், ஏதோ நினைத்ததைக் கிறுக்கி வைக்கக் காகிதப் பஞ்சமாவது இல்லாமல் இருந்தது. அப்பொழுது ஒரு பத்திரிகை ஆபிசில் வேலை. ஆனால், இப்பொழுது காசு கொடுத்து வாங்காவிட்டால் முதுகில்தான் எழுதிக் கொள்ளவேண்டும். முருகதாசர் நல்ல புத்திசாலி; அதனால்தான் முதுகில் எழுதிக் கொள்ளவில்லை. யாராவது ஒரு நண்பரைக் கண்டுவிட்டால் போதும்; தமது தூர இலட்சியத்தைப்பற்றி அவரிடம் ஐந்து நிமிஷமாவது பேசாமல் அவரை விட மாட்டார். நண்பர்கள் எஸ். பி. ஸி. ஏ. (ஜீவஹிம்சை நிவாரணச் சங்கம்) யின் அங்கத்தினர்களோ என்னவோ, அத்தனையையும் சகித்துக் கொண்டிருப்பார்கள்...

சந்தில் திரும்பிப் பார்த்தால் அலமுவின் ராஜ்யம் நடந்து கொண்டிருந்தது. ''ஏட்டி, என்ன நீயோ உன் லட்சணமோ!'' என்று ஆரம்பித்தார் முருகதாசர்.

ஒரு ரிக்ஷா வண்டி. ஏர்க்கால் பக்கத்தில் வண்டிக்காரன உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அலமு, ஒரு சுண்டெலி மாதிரி, ஜம்மென்று மெத்தையில் உட்கார்ந்திருக்கிறாள். ரிக்ஷாக்காரனுடன் ஏதோ நீண்ட சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது போலும்!

''ஏட்டி!'' என்றார் முருகதாசர் மறுபடியும்.

''இல்லையப்பா' நீ இனிமெ என்னை அலமுன்னு கூப்பிடுவேன்னியே!'' என்று சொல்லிக் கொண்டே, வண்டியிலிருந்து இறங்கப் பிரம்மப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தாள்.

''தீப்பெட்டி எங்கடீ!?'' என்றார் முருகதாசர்.

''கடைக்காரன் குடுக்கமாட்டங்கரான், அப்பா!''

''குடுக்காதெ போனா நேர வீட்டுக்கு வாரது! இங்கெ என்ன இருப்பு?''



''அப்படிக் கேளுங்க சாமி! நம்ம கொளந்தென்னு மெரட்டாமே சொல்லிப் பார்த்தேனுங்க. வீட்டுக்கு வண்டியிலே கொண்டாந்து வுடணுமுன்னு மொண்டி பண்ணுதுங்க. எனக்குக் காலுலே சுளுக்கு. அந்தச் சின்னாம்பயலே காணும்......'' என்று நீட்டிக் கொண்டே போனான் ரிக்ஷாக்காரன்.

''அப்பா! அவன் பங்கஜத்தை மாத்திரம் கூட்டிக்கிட்டே போறானே!'' என்றாள் அலமு. பங்கஜம் எதிர் வீட்டு சப்ரிஜிஸ்திரார் குழந்தை, அது ரிக்ஷாவிலும் போகும், மோட்டாரிலும் போகும். அந்த விஷயம் ரிக்ஷாவுக்குத் தான் புரியுமா குழந்தைக்குத்தான் புரியுமா?''

''அலமு! ராத்திரிலெ கொழந்தைகள் ரிக்ஷாவிலே போகப் படாதுடீ! எறங்கி வா!'' என்று குழந்தையைத் தூக்கிக் கொண்டு வாடிக்கைக் கடைக்காரனிடம் சென்றார் முருகதாசர்.

பிள்ளையவர்கள் கடையை எட்டு முன்பே, கடைக்காரன் ''சாமி! இந்த மாதிரி யிருந்தாக் கட்டுமா? போன மாசத்திலே தீர்க்கலியே! நானும் சொல்லிச் சொல்லிப் பார்த்தாச்சு. பாக்கியை முடிச்சு, கணக்கெத் தீர்த்துடுங்க! எனக்குக் குடுத்துக்கட்டாது. நான் பொளைக்க வந்தவன்!'' என்றான்.

''நானும் பிழைக்க வந்தவன் தான்! எல்லாரும் சாகவா வருகிறார்கள்! மின்னெ பின்னே தான் இருக்கும். நான் என்ன கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறேனா?''

''போங்க சாமி! அது ஒண்ணு தான் பாக்கி! ரூ. 2-5-4 ஆச்சு; எப்ப வரும்?''

''தீப்பெட்டியெக் குடு சொல்றேன்!''

''பெட்டிக்கென்ன பிரமாதம்! இந்தாருங்க. எப்ப வரும்?''

''எப்பவா! சம்பளம் நாளைக்குப் போட்ருவாங்கன்னு நினைக்கிறேன்; நாளை இல்லாவிட்டால் திங்கக்கிழமை.''

'' திங்கக்கிழமே நிச்சயந் தானே! நான் சீட்டுக் கட்டணும்!'' என்றான்.

''சரி, பார்க்கிறேன்!'' என்று திரும்பினார் தாசர்.

''பார்க்கிறேன்னு சொல்ல வேண்டாம், நிச்சயமாக வேண்டும்!''

ஒரு கவலை தீர்ந்தது...அதாவது திங்கட்கிழமைவரை.

பாதி வழியில் போகையில், ''அப்பா!'' என்றது குழந்தை.

அவர் எதையோ நினைத்துக் கொண்டிருந்ததால், தன்னையறியாமல் கொஞ்சம் கடினமாக ''என்னடி!'' என்றார்.

நீதான் கோவிச்சுக்கிறியே, அப்பா! நான் சொல்லமாட்டேன் போ!''

''கோவம் என்னடி, கோவம்! சும்மா சொல்லு!''

''அதோ பார், பல்லு மாமா!''

முருகதாசரின் நண்பர் சுப்பிரமணிய பிள்ளைக்குக் கொஞ்சம் உயர்ந்த பற்கள். அவை வெளியே நீண்டுகொண்டு, தமது இருப்பை அனாவசியமாக உலகத்திற்கு அறிவித்துக் கொண்டிருந்தன. அதனால் அலமு அவருக்கு இட்ட காரண இடுகுறிப் பெயர் அது.

''எங்கடி!''

''அதோ பார், வீட்டு நடேலே! என்னை எறக்கிவிடப்பா! என்று அவரது கையிலிருந்து வழுகி, விடுவித்துக் கொண்டு, வீட்டிற்கு ஓட ஆரம்பித்தது.

''மெதுவா! மெதுவா!'' என்றார் பிள்ளை; குழந்தையா கேட்கும்?

''மாட்டேன்!'' என்றது. அதற்கப்புறம் ஏக களேபரம். பாவாடை தடுக்கியதோ என்னமோ, அலமு வலுக்கட்டாயமாக அங்கப் பிரதஷிணம் செய்ய ஆரம்பித்தாள்.

பிள்ளையவர்கள் ஓடிப்போய் குழந்தையை வாரி எடுத்தார். ஆனால் இவர் பதட்டத்திற்கு ஏற்ப, அங்கு குழந்தைக்கு ஒன்றும் ஏற்படவில்லை.

''தோளுக்கு மேலே தொண்ணூறு. தொடச்சுப் பார்த்தா ஒண்ணுமில்லே!'' என்று பாடிக் கொண்டு குழந்தை எழுந்தது.

''என்ன சார், குழந்தையை நீங்க இப்படி விடலாமா?'' என்று சொல்லிக் கொண்டே சுப்பிரமணியம் அவர்கள் பக்கம் வந்தார்.

''என்ன சார் செய்யட்டும்! என்ன சொன்னாலும் கேட்கிறதில்லை என்ற உறுதி மனசிலே ஏறிப்போயிருக்கு. வெளியிலே புறப்பட்டாச்சா, அப்புறம் தேடிக் கொண்டு பின்னோட பத்துப் பேர். இவளைக் கடைக்கனுப்பிச்சுட்டா தாயார்; இவ்வளவு நேரம் அந்த ரிக்ஷாக்காரனோட தர்க்கம்-என்ன செய்கிறது! வாருங்கள் சார் உள்ளே! ஒன் மினிட்! விளக்கை ஏத்துகிறேன்''



குழநதை அலமு அதறகுள வீட்டிற்குள், ''பல்லு மாமா வந்து விட்டார்'' என்று பொதுவாக உச்ச ஸ்தாயியில் விளம்பரம் செய்து கொண்டு ஓடிவிட்டாள்.

'குழந்தை துருதுருவென்று வருகிறதே! பள்ளிக்கூடத்திற்காவது அனுப்பக் கூடாதா'' என்றார் நண்பர்.

ஆமாம் சார், தொந்தரவு சகிக்கலே. அங்கேதான் கொண்டு தள்ளணும். வயசு கொஞ்சம் ஆகட்டுமே என்று பார்க்கிறேன்'' என்றார் முருகதாசர், விளக்குத் திரியை உயர்த்திக்கொண்டே.

''நேத்து பீச்சுக்குப் போயிருந்தேன்! சுந்தரத்தைப் பார்த்தேன் ....'' என்று ஆரம்பித்தார் சுப்பிரமணியபிள்ளை.

''அந்த ராஸ்கல் வந்துட்டானா! என்றைக்கும் அவன் தொல்லைதான் பெரிய தொல்லையாக இருக்கிறது. இங்கே வந்தான்னா ஆபீசுக்கு வந்து யாருக்காவது வத்தி வச்சுட்டுப் போயிடரது.... மின்னே வந்தப்போ, என்னஎழவு சொன்னானோ, அந்த ஆர்ட்டிஸ்ட் 'பதி' இருந்தானே, அவனுக்குச் சீட்டுக் கொடுக்க வழி பண்ணிட்டான்'' என்று படபடவென்று பேசிக் கொண்டே போனார் முருகதாசர்.

''அப்படிப் பார்த்தா உலகத்திலேயே யார்தான் சார் நல்லவன்! அவன் உங்களைப் பத்தி ரொம்பப் பிரமாதமாக அல்லவா கண்ட இடத்திலெல்லாம் புகழ்ந்து கொண்டிருக்கிறான்?''

''சவத்தெத் தள்ளுங்க, சார்! பேன் பார்த்தாலும் பார்க்கும், காதை அறுத்தாலும் அறுக்கும். அவன் சங்காத்தமே நமக்கு வேண்டாம். நீங்க என்ன சொல்ல வாயெடுத்தீர்கள்?''

''அதுதான். உங்களைப் பத்தித் தான் ஒரு இங்கிலீஷ்காரனிடம் பிரமாதமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

''இவ்வளவுதானா! கதையை எழுதரேன், அல்லது கத்தரிக்காயை அறுக்கிறேன் இவனுக்கென்ன......?''

அதே சமயத்தில் வெளியிலிருந்து, ''முருகதாஸ்! முருகதாஸ்!'' என்று யாரோ கூப்பிட்டார்கள்.

''அதுதான்! அவன்தான் வந்திருக்கிறான் போலிருக்கிறது! பயலுக்கு நூறு வயசு...''

''சைத்தான் நினைக்குமுன்னால் வந்து நிற்பான் என்பது தான்! என்று முணு முணுத்தார் முருகதாசர்.

பிறகு அவர் எழுந்து நின்று வெளியில் தலையை நீட்டி ''யாரது?'' என்றார்.

''என்ன! நான்தான் சுந்தரம், இன்னும் என் குரல் தெரியவில்லையா'' என்று உரத்த குரலில் கடகடவென்று சிரித்துக்கொண்டு உள்ளே நுழைந்தார் வந்தவர். அவருடைய சிரிப்புக்கு இசைந்தபடி காலில் போட்டிருக்கும் ஜோடு தாளம் போட்டது.

''என்ன சுந்தரமா? வா! வா! இப்பத்தான் உன்னைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். நீயும் வந்தாய்! காப்பி போடச் சொல்லட்டுமா? அலமு! அலமு!''என்று உரக்கக் கூறினார் முருகதாசர்.

எங்கிருந்தோ, ''என்னப்பா!'' என்று அலமுவின் குரல் வந்தது.

''அம்மாவை மூணு கப் காபி போடச் சொல்லு. சீக்கிரம் ஆகணும்!''

''நீ என்ன பத்திரிகையையே விட்டுவிட்டாயாமே! இப்பத்தான் கேள்விப்பட்டேன்.''

''வயிற்றுப் பிழைப்பிற்கு எதில் இருந்தால் என்ன? சீலைப்பேன் குத்துகிறதும் ஒரு 'பிஸினஸ்' ஆக இருந்து, அதில் ஒரு 'சான்ஸ்' கிடைத்தால், அதையும் விட்டா வைக்கிறது? நான் பத்திரிகையை விட்டுவிட்டா, கதை எழுதாமல் இருந்துவிடுவனா? ஒரு பெரிய நாவலுக்குப் 'ப்ளான்' போட்டிருக்கேன். தமிழன்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால், எனக்குக் காகிதம் வாங்கவாவது காசு கிடைக்கும். அதில் 'சென்ட்ரல் ஐடியா' என்ன தெரியுமா?''

''நீங்க நேற்றுப் பொருட்காட்சிக்குப் போனீர்களாமே?'' என்று பேச்சை மாற்ற முயன்றார் சுப்பிரமணிய பிள்ளை. இந்த விஷயத்தைத் தொட்டுவிட்டால், முருகதாசர், கீறல் விழுந்த கிராமபோன் பிளேட் மாதிரி, விடாமல் திருப்பித் திருப்பி அதையே கதைத்துக் கொண்டிருப்பார்.

''அப்பா! காப்பியாயிட்டது. நீ தான் வந்து எடுத்துக்கிட்டுப் போகணும். சுடுது!'' என்று சொல்லிக்கொண்டு நிலைப்படி இரண்டு பக்கத்தையும் தொட்ட வண்ணமாய், ஒற்றைக் காலை ஆட்டிக் கொண்டு நின்றாள் அலமு.

''அம்மா எங்கே?

''அம்மா சாதத்தெ வடிச்சிக்கிட்டிருக்கா, அப்பா!''

''சரி! இதோ வாரேன், போ!''

''வாயேன்!''

''வர்ரேன்னா, போடி உள்ளே''

''காப்பி ஆறிப்போயிடும், அப்பா!''



''இதோ ஒரு நிமிஷம்'' என்று சொல்லிக் கொண்டு உள்ளே சென்றார்.

''மாமா! நீ என்ன கொண்டாந்தே?'' என்று கேட்டுக் கொண்டு, சுப்பிரமணியபிள்ளை மடியில் உட்கார்ந்து கழுத்திலிருக்கும் நெக் டையைப் பிடித்து விளையாட ஆரம்பித்தாள் அலமு.

''அதெப் பிடித்து இழுக்காதே, மாமாவுக்குக் கழுத்து வலிக்கும்!' என்றார் சுந்தரம் பிள்ளை.

''வலிக்காதே!'' என்று மறுபடியும் ஆரம்பித்தாள்.

முருகதாசரும், மேல்துண்டின் உதவியால் ஒரு செம்பை ஏந்திய வண்ணம், உள்ளே நுழைந்தார்.

''என்னப்பா, மூணு டம்ளர் கொண்டாந்தே! எனக்கில்லையா?''

''உனக்கென்னடி இங்கே! அம்மா கூடப் போய்ச் சாப்பிடு!''

''மாட்டேன்'' என்று ஒரு டம்ளரை எடுத்து வைத்துக்கொண்டது குழந்தை.

முருகதாசர் காப்பியை ஆற்றி, சுந்தரம் கையில் ஒரு டம்ளரைக் கொடுத்தார். சுந்தரம் வாங்கி மடக் மடக்கென்று மருந்து குடிப்பது போல் குடித்துவிட்டு, ''காப்பி வெகு ஜோர்!'' என்று சர்டிபிகேட் கொடுத்தான்.

மற்றொரு டம்ளர் சுப்பிரமணிய பிள்ளையிடம் கொடுக்கப்பட்டது. ''மாமா! எனக்கில்லையா'' என்று அவரிடம் சென்று ஒண்டினாள் அலமு.

''வாடி, நாம் ரெண்டு பேரும் சாப்பிடுவோம்''! என்றார் முருகதாசர்.

''மாமாகூடத்தான்!'' என்றது குழந்தை. சுப்பிரமணிய பிள்ளை கையிலிருந்த டம்ளரில் அலமுவைக் குடிக்கச் செய்தார்.

பாதியானதும், ''போதும்!'' என்றது குழந்தை.

''இந்தாருங்க சார்!'' என்று மற்ற டம்ளரையும் நீட்டினார் முருகதாசர்.

''வேண்டாம், வேண்டாம்! இதுவே போதும்!'' என்றார் சுப்பிரமணிய பிள்ளை.

"நான்சென்ஸ்" என்று சொல்லிவிட்டுக் குழந்தை எச்சிற்படுத்தியதைத் தாம் வாங்கிக் கொண்டார் தாசர்.

''நேரமாகிறது, மவுண்டில் ஒரு நண்பரைப் பார்க்க வேண்டும்!'' என்று எழுந்தார் சுந்தரம்.

''அதற்குள்ளாகவா? வெற்றிலை போட்டுக்கொண்டு போகலாம்!'' என்றார் முருகதாசர்.

''கையில் எடுத்துக் கொண்டேன். நேரமாகிறது! அப்புறம் பார்க்கிறேன்!'' என்று சொல்லிக் கொண்டு வெளியேறினார் சுந்தரம்.

கையில் இருந்த புகையிலையை வாயில் ஒதுக்கிவிட்டு, சிறிது சிரமத்துடன், தமக்கு நேரமாவதைத் தெரிவித்துக் கொண்டார் சுப்பிரமணியபிள்ளை.

தொண்டையைச் சிறிது கனைத்துக்கொண்டு, ''சுப்பிரமண்யம், உங்களிடம் எதாவது சேஞ்ச் இருக்கிறதா? ஒரு மூன்று ரூபாய் வேண்டும்?'' என்றார் முருகதாசர்.

''ஏது அவசரம்?''

''சம்பளம் போடலே; இங்கு

கொஞ்சம் அவசியமாக வேண்டியிருக்கிறது.. திங்கட்கிழமை கொடுத்து விடுகிறேன்!''

''அதற்கென்ன..பர்ஸை எடுத்துப் பார்த்துவிட்டு, ''இப்போ என் கையில் இதுதான் இருக்கிறது!'' என்று ஓர் எட்டணாவைக் கொடுத்தார் சுப்பிரமணியம்.

''இது போதாதே!'' என்று சொல்லி, அதையும் வாங்கி வைத்துக்கொண்டார் முருகதாசர்.

''அப்போ....'' என்று மீண்டும் ஏதோ ஆரம்பித்தார்.

''பார்ப்போம்! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது'' என்று சுப்பிரமணியமும் விடைபெற்றுச் சென்றார்.

முருகதாசர், தமது ஆஸ்தான அறையின் சிம்மாசனமான பழைய கோரைப் பாயில் உட்கார்ந்து கொண்டு, அந்த எட்டணாவைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டு, நீண்ட யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

''அங்கு என்ன செய்யறீங்க?'' என்ற மனைவியின் குரல்!

''நீ தான் இங்கே வாயேன்!''

கமலம் உள்ளே வந்து, ''அப்பாடா!'' என்று உட்கார்ந்தாள். அவர் கையில் இருக்கும் சில்லறையைப் பார்த்துவிட்டு, 'இதேது?' என்றாள்.

''சுப்பிரமணியத்திடம் வாங்கினேன்!''

''உங்களுக்கும் .. வேலையில்லையா?'' என்று முகத்தைச் சிணுக்கினாள் கமலம். பிறகு திடீரென்று எதையோ எண்ணிக் கொண்டு, ''ஆமாம். இப்பத்தான் நினைப்பு வந்தது. நாளைக்குக் காப்பிப் பொடியில்லை; அதே வச்சு வாங்கி வாருங்களேன்!'' என்றாள்.

''அந்தக் கடைக்காரனுக்காக அல்லவா வாங்கினேன்! அதைக் கொடுத்து விட்டால்?''

''திங்கட்கிழமை கொடுப்பதாகத்தானே சொன்னீர்களாம்!''


''அதற்கென்ன இப்பொழுது?''

''போய்ச் சீக்கிரம் வாங்கி வாருங்கள்!''

''திங்கட்கிழமைக்கு?''

''திங்கட்கிழமை பார்த்துக் கொள்ளுகிறது!''

(மீனாட்சி புத்தக நிலையத்தாரின் 'புதுமைப்பித்தன் கதைகள்' என்ற நூலிலிருந்து)




## சுற்றுலா வளர்ச்சியில் முதலிடம் வகிக்கும் தமிழ்நாடு

உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவருவதில் தென்மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. பயணிகளுக்கான தங்கும் வசதி, போக்குவரத்து வசதி ஆகியவைகளைச் செய்து கொடுப்பதிலும் விளம்பரங்கள் மூலம் சுற்றுலாப் பயணிகளைக் கவருவதிலும் தொடர்ந்து சிறந்து பணியாற்றி வருகின்ற தமிழக அரசையே இந்தப் பெருமை சாரும். இவ்வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சீரிய பணி, சுற்றுலாப் பயணிகளாலேயே பாராட்டப்படுகிறது. மாமல்லபுரத்தையும், கன்னியாகுமரியையும் முதல்தரமான சர்வதேச சுற்றுலாக் கவர்ச்சியிடமாக மாற்ற மத்திய அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று, தமிழக அரசு மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறது. இது பிற தென்மாநில அரசுகளும் இம்மாதிரி முயற்சிகளை மேற்கொள்ளத் தூண்டுதலாக அமையும்.

சுற்றுலா வளர்ச்சியைப் பொறுத்தமட்டில், கர்நாடகம் தமிழ்நாட்டின் அளவுக்கு முன்னேற வேண்டுமானால் கர்நாடக அரசு இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டியிருக்கிறது. தென்மாநிலங்களிலேயுள்ள முக்கிய சுற்றுலா இடங்களையும், புண்ணிய இடங்களையும் இணைத்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பயணங்களை (Package Tours) நடத்தி வருவது குறிப்பிடத்தக்க சிறந்த அம்சம். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிர்வாகத்தின் கீழுள்ள தங்கும் விடுதிகள் (சாப்பாடு வசதிகளுடன் அல்லது இல்லாமல்) குறைந்த செலவில் கிடைக்கின்றன; சொகுசு வண்டிகள் நல்ல முறையில் பராமரிக்கப்படுகின்றன; பயிற்சியளிக்கப்பட்ட பணியாளர்கள் அன்புக்கும், திறமையான பணிக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றனர். மொத்தத்தில் அவர்களிடம் சீரிய செயல்திறன் உள்ளது எனலாம்.

['டெக்கான் ஹெரால்டு'—26.7.79 தலையங்கம்]



# இளம் ஓவியன்!

‘‘படங்கள் நிறைந்த புத்தகங்கள் என்றால் எனக்குக் கொள்ளை ஆசை!’’ என்று தன் ஆர்வத்தை வெளியிடுகிறான் இளம் ஓவியன், க. பொன்னிவளவன்.

சென்னை, தியாகராயநகர் இராம கிருஷ்ணா மிஷன் மேல்நிலைப் பள்ளியில் (மெயின்) ஒன்பதாவது வகுப்பில் படிக்கும் இம்மாணவனுக்குப் பதின்மூன்று வயதாகிறது. சித்திரம் வரைவதில் சிறந்து விளங்குகிறான். இவனுடைய தந்தை திரு எம். கலியபெருமாள் அவர்கள், நந்தனம் கலைக் கல்லூரியில், அறிவியல் துறைத் துணைப் பேராசிரியராகப பணியாற்றுகிறார்.

‘சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்’ என்பதற்கிணங்க, மாணவன் பொன்னிவளவன் ஆறாம் வகுப்பு முதல் தொடர்ந்து சித்திரப் பாடத்தில், முதல் மதிப் பெண்கள் பெற்று வருகிறான

ஓவியம் வரைவதில் எப்படி ஆர்வம் வந்தது?


‘‘நான், நிறைய படங்கள் நிறைந்த புத்தகங்களை, இதழ்களை விரும்பிப் படிப்பேன். அந்தப் புத்தகங்கள் எங்கு என் கண்ணில் பட்டாலும் அதை வாங்கிவிடுவேன். சித்திரப் புத்தகங்களைப் பார்த்துப் பார்த்து அதைப்போல் படம் வரைய வேண்டும் என்ற ஆவல் வந்தது’’ என்று கூறும் பொன்னிவளவன், ஒரு படத்தைப் பார்த்ததும் அதை அப்படியே வரைந்து விடு கிறான்; கற்பனையாகவும் சித்திரம் தீட்டுவதில் திறம் பெற்று விளங்குகிறான்.

‘‘நீ வருங்காலத்தில் ஒரு பெரிய ஓவிய னாக வருவாய்!’’ என்று ஆசிரியர்கள் இம் மாணவனை வெகுவாகப் பாராட்டுகிறார்களாம்.

பள்ளி விழாக்களின்போது, அலங்காரம் செய்ய, ஓவிய ஆசிரியர் இம்மாணவனை உதவிக்கு அழைத்துக் கொள்வாராம்.


இளம் ஓவியன் பொன்னிவளவனை, அனைத்துலகக் குழந்தைகள் ஆண்டில் ‘வளர்க!’ என வாழ்த்துகிறோம்.


—பேட்டி : பி. வி. கிரி



அனைத்துலகக் குழந்தைகள் ஆண்டு – 2







# கீர்த்தி மிகு நார்த்தா மலை

–க. இலக்குமி நாராயணன்
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
புதுக்கோட்டை.

புதுக்கோட்டை நகருக்கு வடமேற்கே சுமார் 16 கிலோ மீட்டர் தொலைவில் திருச்சி செல்லும் பாதையில் ஒரு சிற்றூராக நார்த்தாமலை இருக்கிறது. இன்று சிற்றூராக இருக்கும் நார்த்தாமலை, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, பல்லவராட்சியும் சோழர் ஆட்சியும் தமிழகத்தைப் புகழ் உலகுக்குக் கொண்டு சென்ற நாட்களில், ஒரு சிறந்த அரசியல் முக்கியத்துவம் நிறைந்த பகுதியாய், கலாச்சார கேந்திரமாய் விளங்கியது. இந்த உண்மையை இங்குக் கிடைக்கும் கல்வெட்டுக்களும், வரலாற்றுச் சின்னங்களும் நமக்குக் கூறுகின்றன.

குன்றுகள் பல சூழ அமைந்திருக்கும் நார்த்தாமலை, 'நகரத்தார் மலை' என்பதின் திரிபாக இன்று இப்பெயரில் அழைக்கப்படுகிறது. பெருங்களூர் கோயில் தல புராணம், ''நாரதர் மலை' என்று நார்த்தாமலையை அழைக்கிறது.

இங்கு இருக்கும் கிராம மக்கள் நார்த்தாமலையைச் சூழ்ந்து இருக்கும் சிறு குன்றுகளை இமய மலையின் பகுதிகள் என்று கருதுகிறார்கள். அனுமன் சஞ்சீவி மலையை இலங்கைக்குக்கொண்டு செல்கையில் இங்கு சிந்திய மலைப் பிஞ்சுகளே, இன்று நார்த்தா மலைக் கிராமத்தைச் சுற்றிக் காணுகின்ற சிறு குன்றுகள் என்பது அவர்கள் நம்பிக்கை.

சோழ மண்டலத்தின் இரட்டைபாடி கொண்ட சோழ வள நாட்டில் அண்ணல்வாயில் கூற்றத்தில் தெலுங்கு குல கால புரம் என்ற பெயரில் சோழர் காலத்தில் ஒரு சிறந்த நகரமாக நார்த்தாமலை விளங்கி இருந்ததைக் கல்வெட்டுக்களின் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம். மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில், குலோத்துங்க சோழ பட்டணமாக அது செழித்திருந்தது.

நார்த்தாமலை இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு முத்தரையர்கள் என்னும் குறுநில மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. முத்தரையர்கள் சுயேச்சையாகவும், பாண்டிய, பல்லவ, சோழப் பேரரசுகளுக்கு உட்பட்டும் கால நிலைமைகளுக்கு ஏற்ப ஆட்சி செய்திருக்கின்றனர். புதுக் கோட்டைப் பகுதியில், நார்த்தா மலையோடு திருமெய்யம், மலையடிப்பட்டி, பூவாலைக்குடி ஆகிய இடங்களில் முத்தரையர்கள் எழுப்பித்திருக்கும் திருக் கோயில்கள் தமிழக கோயில் கலை வரலாற்றில் மிக உன்னதமான இடத்தை இவர்களுக்குப் பெற்றுத் தந்திருக்கின்றன.


மாலிக்காபுரின் தென்னகப் படையெடுப்பை அடுத்து, சிறிது காலம் மதுரை சுல்தான்கள் ஆட்சியில் இருந்த நார்த்தாமலை விசய நகர படையெடுப்பால் முகமதியர் ஆட்சியினின்று விடுபட்டது. கி.பி. 14-15ஆம் நூற்றாண்டுகளில் பல்லவராயர்கள் ஆட்சியில் இருந்த நார்த்தாமலை புதுக்கோட்டை தொண்டைமான் மரபு வலுப்பெற்றபோது, புதுக் கோட்டைத் தனியரசின் ஆட்சிக்கு உட்பட்டது.


புதுக்கோட்டையின் ஏழு பெரிய கோவில்களில் ஒன்றாக விளங்கும் மாரியம்மன் திருக்கோயிலினால் இன்று முக்கியத்துவம் பெற்று விளங்கும் நார்த்தாமலை, பண்டை நாளில், சமணம் சைவம் வைணவம் ஆகிய சமயத் தலைவர்களாலும், இந்நகரில் வாழ்ந்த வணிகப் பெருங்குடி மக்களாலும் சிறப்புற்று விளங்கியது.

''சீலையசெட்டி'' என்னும் வணிக வகுப்பினர் பண்டைக் காலத்தில் இங்கே வசித்தனர் என்பதைச் சில கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இவர்கள், சோழர் அல்லது பாண்டிய மன்னர்களின் பெயர்களைத் தங்கள் பெயர்களாகக் கொண்டிருக்கின்றனர். இதன் அடிப்படையில் இவர்கள் வணிகத் தலைவர்களின் குடும்பத்தவராக இருக்கலாம் எனக் கருதலாம். தற்போது நார்த்தாமலை கிராமத்திலும் அதன் குன்றுகளிலும் பழங்கால வரலாற்றுச் சின்னங்களாகப் பல நல்ல கோவில்களும் குடவரைகளும் இருக்கின்றன. இங்குள்ளஒன்பதுசிறு குன்றுகளில் ஆளுருட்டி மலை, மேலமலை, கோட்டை மலை ஆகியவை குறிப்பிடத்தக்கன. மேலமலை சமணர் மலை என்றும் சிவன் மலை என்றும் பல பெயர்களில் அழைக்கப்பட்டது.

பல்லவனும், பாண்டியனும் முறையே நாவுக்கரசராலும், ஆளுடைப் பிள்ளையாலும் சைவர்களாக மாற்றப்பட்டதற்குப் பிறகு அந்நாடுகளிலிருந்து அமைதி தேடிப் பெயர்ந்த சமண முனிவர்கள் புதுகையில் உள்ள குன்றுப் பகுதிகளுக்குச் சென்று வசித்தனர். இதனால் புதுக்கோட்டையின் பல பகுதிகள் சிறந்த சமணப் பகுதிகளாக விளங்கின, அவ்வாறு சமணப் பகுதியாகத் திகழ்ந்த இடங்களில் நார்த்தாமலையும் ஒன்றாக விளங்குகிறது. இங்குள்ள

விஜயாலய சோழீசுவரம்
நார்த்தாமலை





மகளமார்

புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் உள்ள நார்த்தாமலை சிற்பம்.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டு

குன்றுகளில் பல சமணக் குடவரைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது அம்மாசத்திரம் மலை என்று அழைக்கப்படும் மலை, புதுக்கோட்டை சமஸ்தான காலத்தில் ஆளுருட்டி மலை என்று அழைக்கப்பட்டது. மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்துக்கல்வெட்டு (பு.ச. க. 474) அதைத் திருமனை மலை என்றும் திருப்பள்ளி மலை என்றும் குறிப்பிட்டுள்ளது. மற்றும் ஒரு கல்வெட்டு (பு.ச.க. 658) இதனைத் திருப்பள்ளி மலை என்றும், பொம்மை மலையைத் தென் திருப்பள்ளி மலை என்றும் குறிப்பிடுகிறது. இக் கல்வெட்டின் மூலம் பல சமண முனிவர்கள் இவ்விரு மலைகளிலும் வசித்து வந்ததை அறிகிறோம்.

**ஆளுருட்டி மலையும்,**
**சமணர்கள் குடவரையும் :**

ஆளுருட்டி மலையின் வடக்கு புறத்தில் உள்ள ஒரு குகையில் சித்தன்னவாசல் ஏழடிப் பட்டத்தில் இருப்பது போன்ற நான்கு படுக்கைகள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இரண்டு இரட்டைப் படுக்கைகளாகவும் இரண்டு ஒற்றைப் படுக்கைகளாகவும் அமைந்துள்ளன. சமண முனிவர்களுக்காகப் பழங்காலத்தில் அமைக்கப்பட்ட இக் கல் படுக்கைகள் வழவழப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. மாறவர்ம சுந்தர பாண்டியன் காலத்தில் இங்கு சமண கோவில் ஒன்று இருந்தது.

மதுரையில் கனகசந்திர பண்டிதர் என்னும் சமண ஆசிரியரும் அவரது சீடர் தர்மதேவ ஆசாரியரும் சோழர் காலத்தில் வசித்து வந்ததாக அக்காலத்துக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

**மேல மலையில் இருக்கும்**
**வரலாற்றுச் சின்னங்கள் :**

மேல மலையில் இரண்டு குடைவரைக் கோவில்கள், ஒரு கட்டுமானக் கோவில் ஆகிய மூன்று முக்கிய வரலாற்றுச் சின்னங்கள் உள்ளன. இவை ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழமை உடையவை.

இந்தியத் தொல் பொருள் ஆய்வுக் கழகத்தின் நிருவாகத்தில் இருப்பவை; பாதுகாக்கப்பட்ட இந்திய வரலாற்றுச் சின்னங்கள் என்று அக்கழகத்தால் அறிவிக்கப்பட்டவை. இக்கோவில்களுக்கு அருகே பொறிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுக்களில் இருந்து பழங்காலத்தில் இக் கோவில்களுக்கு வழங்கி வந்த பெயர்களை அறிந்து கொள்கிறோம் இரு குடைவரைக் கோவில்களில் ஒன்று திருமாலுக்கு உரியது. மற்றொன்று சிவனுக்கு உரியது. அவை முறையே பதினெண் பூதி விண்ணகரம் என்றும், பழியிலி ஈசுவரம் என்றும் பண்டைக் காலத்தில் அழைக்கப்பட்டன. இவற்றிற்கு எதிரே கிழக்கில் மேற்கு நோக்கிய நுழைவாயிலைக் கொண்ட ஒரு கட்டுமானக் கோவில் இருக்கிறது. முழுவதும் கல்லாலேயே அமைக்கப்பட்டு இருக்கும் இக்கட்டுமானக் கோவிலே தமிழகக் கோவில் கட்டடக் கலை வரலாற்றில் மிக முக்கியப் பங்கினை வகிக்கும் விசயாலய சோழிசுவ்ரம் ஆகும்.

**சமணர் குடகு என்றும் அழைக்கப்படும் பதினெண் பூதி விண்ணகரம்:**

செவ்வகமான கருவரை, முக மண்டபம் ஆகியவற்றினைக் கொண்டுள்ள இவை வைணவக் குடவரைக் கோவில் கல்வெட்டுக்களில் பதினெண் பூதி விண்ணகரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பதினெண் பூதி என்பது ஊரின் வணிகக் குழுவைக்குறித்து எழுந்த பேராகும். அலர்மேலு மங்கை நாயகன் அமர்ந்தருளும் கோவில்களை விண்ணகர் என அழைப்பது வைணவ மரபாகும். இம்மரபுப்படி பதினெண் பூமியுடைய வணிகக் குழுவினால் அமைக்கப்பட்ட திருமால்கோவில் பதினெண் பூமி விண்ணகர் என்று அழைக்கப்பட்டது. இத்திருக் கோவில் நாயகர், கரிய மாணிக்க ஆழ்வார் என்று கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டிருக்கிறார்.

கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் சமணர்களால் அமைக்கப்பட்ட சமணக் குடவரைக் கோவிலாக முதலில் இது வழங்கியது. பிறகு இச்சமணக் குடவரைக் கோவில் முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் கி. பீ. 1228-ல் வைணவக் கோவிலாக மாற்றப்பட்டது. என்று திரு கே. ஆர். வெங்கடராம அய்யர் புதுக்கோட்டை மேனுவலில் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் எந்தச் சான்றுகளின் அடிப்படையில் முதலில் இது சமணக் குடவரையாக இருந்தது என்பதை அவர் கூறவில்லை.

கருவறையின் முன்னே உள்ள மண்டபத்தின் பாறைச் சுவரில் புடைச் சிற்பங்களாக நான்கு கரங்களுடன் நிற்கும் நிலையில் செதுக்கப்பட்டு இருக்கும் பன்னிரண்டு திருமால் சிலைகளைக் காணுகின்றபோது, அவை 13-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவை எனத் துணிய முடியவில்லை. அவற்றின் கலைப் பாணியை நோக்குகையில் 11-ஆம் நூற்றாண்டில் வடித்த சிலைகளாகவே கருதத் தோன்றுகிறது. இதன் அடிப்படையில் நோக்குகின்றபோது சுந்தரபாண்டியன் காலத்திற்கு (கி. பி. 13-ஆம் நூற்றாண்டிற்கு) முன்பே இது வைணவக் கோவிலாக இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

இச்சிற்பங்கள் கருவறையின் நுழைவாயிலுக்கு இரு மருங்கும் பக்கத்திற்கு ஐந்து வீதம் பத்தும் வடக்குப் பகுதிச் சுவர், தெற்குப் பகுதிச்சுவர் ஆகியவற்றில் ஒவ்வொன்று வீதம் இரண்டும் ஆக பன்னிரண்டு திருமால் சிலைகள், நான்கு கரங்களோடு வெண்சங்கும் வெற்றி ஆழியும் தாங்கி நிற்கின்றன. முன் வலது, இடது கரங்கள் முறையே அபய அஸ்தம் காட்டியும், தொடைமீது வைத்தும் அமைந்திருக்கின்றன.

**பழியிலி ஈசுவரம் :**

பல்லவப்பேரரசன் நிருபதுங்க வர்மன் காலத்தில் குடைவித்த கோவில் இது. 2.4 மீ., .25 மீ, அளவிற்கு இரண்டு மீட்டர்கள் உயரம் கொண்டதாகக் குடைவரை அமைக்கப்பட்டுள்ளது.

குடைவரைக்கோவிலுக்கு எதிரே இருக்கும் பாறையில் கோவிசய நிருபதுங்கவர்மனின் ஏழாம் ஆட்சி ஆண்டுக்கல்வெட்டு ஒன்று இருக்கிறது. அதில் பழியிலி ஈசுவரம் என்னும்இக்குடைவரைக் கோவிலை எடுப்பித்தாரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இக்குடவரைக் கோவில் விடேல் விடுகு முத்தரையனின் மகனான சாத்தன் பழியிலி என்னும் முத்தரையர் தலைவனால் எடுக்கப் பட்டது. இவனது மகன் இக் கோவிலுக்கு முற்றத்து மாடம் (முகமண்டபம்) எருது ஊர்தி, அதை வைப்பதற்குக் கொட்டில் ஆகியவற்றை அமைத்துக் கொடுத்தான். மீனவன் தமிழாதிரையன் என்பானின் மனைவி பழியிலி சிறிய நங்கை என்பாள். இறைவர்க்குப் பூசைகள் செய்வதற்காக மூன்று வேலி நிலம் ஊர் அவைத் தலைவனுக்கு நிவந்தமாக அளித்தாள்.

இங்குள்ள இக் கல்வெட்டின் கூற்றுப்படி இக்குடைவரைக் கோவில் கி.பி. 9ஆம் நூற்றாண்டில், அதாவது இன்றைக்கு ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்டதாகும்.

**விசயாலய சோழீசுவரம் :**


பதினெண் விண்ணகரத்திற்கு எதிரே மலையின் கிழக்குச் சரிவில் இக்கோவில் இருக்கிறது. கோவிலுக்கு எதிரே இருக்கும் மாறவர்ம சுந்தர பாண்டியனின் 12-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு விசயாலய சோழீசுவரம் உடைய நாயனாருக்கு வைகாசித் திருவிழா நடத்த நகரத்தார் ஏற்படுத்திய அறக்கட்டளையைக் கூறுகிறது. இந்த 13-ஆம் நூற்றாண்டின் கல்வெட்டின் அடிப்படையில் இக்கோவில் விசயாலய சோழீசுவரம் எனப்படுகிறது.

திருத்தணிக்கு அருகே உள்ள விளக்கணாம்பூண்டி என்னும் கிராமத்தில் இருக்கும் விசாலீசுவரர் கோவிலும் விசயாலய சோழீசுவரம் என்றே கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதும் இங்குக் கருதத்தக்கதாகும். திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், திரு கே. ஆர். வெங்கடராம அய்யர் போன்றோர் சுந்தர பாண்டியனின் கல்வெட்டில் குறிப்பிட்டிருக்கும் விசயாலய சோழீசுவரம் நார்த்தாமலைக் கோவிலே என துணிந்து உரைத்துள்ளார்கள். திரு கே. வி. சௌந்தரராசன் போன்ற சில அறிஞர்கள் இதனை விசயாலய சோழீசுவரம் என அழைப்பது தவறு எனக் கருதுகிறார்கள். இக்கோவிலின் கலைப் பாணியையும் கட்டட அமைப்பையும் பார்க்குங்கால் பல்லவர் பாணி சோழர் பாணியாக உருமாறும் காலக் கட்டத்திலே இக்கோவில் படைக்கப்பட்டிருக்கிறது என்பது நன்கு புலனாகிறது. அந்த அடிப்படையில் நோக்குகையில் இக்கோவிலை 'விசயாலய சோழீசுவரம் என்று அழைப்பதே பொருத்தம் எனவும் தோன்றுகிறது.

கோவில் நுழைவாயிலில் இருக்கும் துவாரபாலகர் சிலைகளில் ஒன்றில் கீழே இருக்கும் கல்வெட்டு, இக்கோவில் சாத்தன் பூதியால் கட்டப்பட்டது என்றும், இடி, மழை காரணமாகச் சிதைவுற்றது என்றும், சிதைவுற்ற கோவிலை மல்லன் வீடுமன் என்னும் தென்னவன் தமிழாதிரையன், திருப்பணி செய்தான் என்றும் கூறுகிறது. இக்கோவில் பல்லவர் பாணியும் முற்காலச் சோழர்களின் பாணியும்இயைந்து மிக அழகிய கலைப்படைப்பாக வெளிப்பட்டிருக்கிறது.

விசயாலய சோழன் காலத்தில் கட்டப்பட்ட இக்கோவில் சில சிறப்பான கட்டட அமைப்புகளைக் கொண்டுள்ளது. இக்கோவில் எட்டு சிறு கோவில்களுக்கு மத்தியில் மேற்கு நோக்கியவாறு மிக அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. எட்டு சிறு கோவில்களில் தற்போது ஆறு மட்டுமே உள்ளன. ஒன்றின் அடிப்பகுதி மட்டும் எஞ்சி இருக்கிறது. மற்றொன்று அதன் சுவடே தெரியாமல் கால வெள்ளத்தில் கரைந்து விட்டிருக்கிறது.. மையத்தில் அமைந்திருக்கும் கோவிலின் கருவரை 2.6 மீட்டர் விட்டமுள்ள வட்டமாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இக்கருவறையைச் சுற்றி அமைந்திருக்கும் வெளிச் சுவர், சுவருக்கு உள்ளேயே கருவறையைச் சுற்றி வருவதற்கு இடம் விட்டு, சதுரமாகக் கட்டப்பட்டுள்ளது. கருவறைக்கு முன்னே, மேற்பகுதி கற்களால் மூடப்பட்ட முன் இடைக்கட்டு (அர்த்தமண்டபம்) உள்ளது. கருவறையின் மேல் அமைந்த விமானம் நான்கு தளங்களை உடையது. நான்காவதாக உச்சியில் உள்ள தளம் வட்ட வடிவமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இக்கோவிலில் இருந்து சிதைந்து விழுந்த அன்னையர் எழுவரின் சிலைகளும், வீணாதர தட்சிணாமூர்த்தியின் சிலையும் தற்போது புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளன. பார்த்துப் பரவசமடைய வேண்டிய பாங்கு மிக்கவையாக அவை அருங்காட்சியகத்தில் விளங்குகின்றன.

சதுரமான 'சுற்றுப் பாதையில் வட்டமான கருவறை அமைந்திருப்பது இக்கோவில் அமைப்பின் ஒரு சிறப்பாகும். இதன் விமானம் நான்கு தளங்களில் அமைந்திருக்கிறது. நான்காவதாக உச்சியில் இருக்கும் தளம் வட்டமாகவும், மற்ற மூன்று தளங்களும் சதுரமாகவும் உள்ளன.




**புதுக்கோட்டை அருங்காட்சியகத்தில் உள்ள நார்த்தாமலை சிற்பம்.**

**கி.பி. 9-ஆம் நூற்றாண்டு**

**சுனைகள் :**

இக்கோவில்களைத் தவிர தலையருவி, சிங்கம், தளும்பு சுனை, என இரண்டு சுனைகளும் மேல் மலையில் உண்டு. முதலில் குறிப்பிட்ட சுனைக்கடியில் சிவலிங்கம் ஒன்று இருப்பதாகக் கூறப்படுகிறது. புதுக்கோட்டை ஸ்டேட் இன்ஸ்கிரிப்ஷன் (889) புதுக்கோட்டை மன்னர் இராமச்சந்திர தொண்டைமான் தலையருவி சிங்க| சுனையில் உள்ள நீரை இறைத்துவிட்டு அதில் இருந்த இலிங்கத்திற்கு வழிபாடு செய்ததாகக் கூறுகிறது.

**நகரில் அமைந்த கோவில்கள் :**

கிராமத்தில் அமைந்திருக்கும் கோவில்களில் மூன்று பழம் பெருமை வாய்ந்தவை. அவற்றுள் ஒன்று கடம்பர் மலையின் அடிவாரத்தில் இராஜராஜ சோழன் காலத்தில் கட்டப்பட்டது: இக்கோவிலின் இறைவர் திருக்கடம்பூர் உடைய நாயனார் என்று அழைக்கப்படுகிறார். மற்றுமொன்று கிராமத்தின்

மையத்தில் இருக்கும் திருவானைக்கா ஈசுவரமாகும். கோயிலுக்குக் கிழக்கே மற்றும் ஓர் சிவன் கோவில் இருக்கிறது. இது நகர் ஈசுவரம் என்று கல்வெட்டுக்களில் அழைக்கப்படுகிறது. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் கி. பி. 1228-ல் (பு. ச. க. 283) கட்டப்பட்டது. மூன்றும் சிவன் கோவில்கள். இவை சோழர்காலத்தில் நார்த்தாமலை நகரில் அமைந்த சிறந்த கோவில்களாக விளங்கி இருந்தன.

**கடம்பர் கோவில் :**


நார்த்தாமலையில் கிடைக்கும் கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை இக்கோவிலின் சுவர்களிலும், கோவிலை ஒட்டியுள்ள பாறையிலும் இருக்கின்றன. கண்ணனூர் பாலசுப்பிரமணியர் கோவிலில் உள்ளது போன்ற சில வேலைப்பாடுகள் இக்கோவிலில் காணப்படுகின்றன. எனினும் கண்ணனூர் கோவிலுக்கு இது காலத்தால் பிற்பட்டது. கோவில் விமானம் அரைவிட்டக் கற்கூடால் கவிழ்க்கப்பட்டிருக்கிறது. கோவிலின் சுற்றுப் பாதையில் உள்ள பரிவார தேவதைகளில் சிற்பங்களில் கணேசர் குறிப்பிடத்தக்கதாகும்.

இங்குள்ள கணைசர் தனது மேல் இரு கைகளிலும் கரும்பும், நெற்கதிரும் ஏந்திக் காட்சி தருகிறார். இரு கல்வெட்டுக்கள் (பு. ச. க. 279, 325) இங்குள்ள அம்மன் கோவில் தனியாகப் பழுதூர் உடையான் பெரியன் என்னும் பெருமகனால் கட்டப்பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றன. இக்கோவில் மண்டபத்தில் முற்காலத்தில் நார்த்தாமலைக் கிராமச்சபை தனது கூட்டங்களை நடத்தி வந்திருக்கிறது. (பு. ச. க. 621, 792.)

**திருவானைக்கா ஈசுவரம் :**

திருச்சியில் உள்ள புகழ்பெற்ற திருவானைக்கா கோவிலின் பெயரிலேயே நார்த்தாமலையில் இக்கோவில் விளங்குகிறது. இக்கோவிலின் நாயகர் திருவானக்கா உடையார் என்று குறிக்கப்பட்டுள்ளார். மூன்றாம் குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலத்தில் பரம்பூர் உடையான் கடம்பர் செங்குடையான் கங்கநாதர் என்னும் பெருமகனால் இக்கோவில் கட்டப்பட்டது. (பு. ச. க. 158) இக்கோவிலில் சோழர் மற்றும் பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக்கோவிலின் மேற்குச் சுவரில் உள்ள தேவகோட்டத்தில் இருக்கும் ''மாதொருபாகர்'' சிலை, கலைநலம் ததும்பிக் காட்சியளிக்கிறது.

மேலே கண்ட செய்திகளிலிருந்து, இன்று சிறு கிராமமாக விளங்கும் நார்த்தாமலையும், அதன் சுற்றுப்பகுதிகளும் எந்த அளவிற்குக் கீர்த்திமிகு நார்த்தாமலையாகப் பண்டையில் விளங்கி இருந்தது என்பதை நன்கு புரிந்து கொள்ளலாம்.



இந்தப் பெண்கள் வேலையில்லாமல் திண்டாடித் தவித்திருப்பார்கள். ஆனால் இன்று நல்வாழ்வு பெற்றிருக்கிறார்கள். இவர்களுக்கு நல்வாழ்வு கொடுத்தது யார்? விவரத்தை 32ஆம் பக்கத்தில் காண்க!

# பூச்சிகளை அழிப்பதில் புதியதோர் முறை

டாக்டர் எஸ். ஜெயராஜ்,
பூச்சியியல் துறைப் பேராசிரியர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
மதுரை.

நாம் உற்பத்தி செய்யும் பயிர்களைப் பல விதமான பூச்சிகள் தாக்கிப் பெருத்த சேதம் விளைவிக்கின்றன. உணவு உற்பத்தியில் சுமார் 40 சதம் பூச்சிகளாலும் எலிகளாலும் விரயமாக்கப்படுகிறதெனக்கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றை ஒழிக்கப் பல்வேறு இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளை மிகுந்த அளவில் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து பயிர்ப் பாதுகாப்பு செய்து வருகிறோம்.

**பூச்சிக் கொல்லி மருந்துகளின் குறைபாடுகள் :**

பூச்சிக்கொல்லி மருந்துகளால் பொதுவாக நிரந்தரமான பயிர்ப் பாதுகாப்பு செய்ய முடிவதில்லை. திரும்பத் திரும்பப் பூச்சிக் கொல்லிகளை உபயோகிக்க வேண்டியிருக்கிறது. இதனால் விவசாய உற்பத்திச் செலவு அதிகமாகின்றது. மேலும் பல பூச்சிகள் விரைவாகப் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு எதிர்ப்புச் சக்தி உண்டாக்குகின்றன. எனவே மாற்று நச்சுப் பொருட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது.

பயிரைத் தாக்கும் பூச்சிகள் மட்டுமல்லாது, நமக்கு நன்மை பயக்கும் தேனீ, ஒட்டுண்ணிகள் போன்றவற்றையும் இப்பூச்சிக் கொல்லிகள் கொல்லுவதால் பலபிரச்சினைகள் ஏற்படுகின்றன. நிலம், நீர், காற்று போன்ற சுற்றுப்புறச் சூழ்நிலைகளிலும் நச்சுத் தன்மை பரவுகிறது. இதோடு மட்டும் அல்லாமல், சில சமயங்களில் பூச்சிக் கொல்லி மருந்துச் செடிகளையும் கருகச் செய்து விடுகின்றன.

புதிய முறைகள்: மேற்கூறிய காரணங்களால் பூச்சிக் கொல்லி மருந்துகளின் உபயோகத்தை ஓரளவு குறைத்து, மற்ற புதிய முறைகளுடன் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு செய்ய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பல்வேறு ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில், முக்கியமானவை நோய்க்கிருமிகள் மூலம் பூச்சிகளுக்கு நோய் ஏற்படச் செய்வது, பூச்சிகள் தாக்காத புதிய பயிர் ரகங்களை உருவாக்குவது, ஊண் தடுப்பான்கள் மூலம் பூச்சிகளைப் பட்டினி போடுவது, ஒளிக்கதிர்களாலும், இரசாயனப் பொருட்களாலும் பூச்சிகளை மலடாக்குவது, ஹார்மோன்கள் மூலம் பூச்சிகளை முதிர்ச்சியடைய விடாமல் தடுப்பது, இரசாயனப் பொருட்கள் மூலம் ஆண் பூச்சிகளை மட்டும் ஈர்த்து அழித்துவிட்டு, பெண் பூச்சிகளின் இனப் பெருக்கத்தைத் தடைசெய்வது ஆகியவைகளாகும். நோய்க் கிருமிகள் மூலம் பூச்சிகளை அழிப்பது பற்றி இங்கு ஆராய்வோம்.

**பூச்சிகளின் நோய்கள் :**

மற்ற விலங்குகளுக்கு நோய் ஏற்படுவது போலவே பூச்சிகளுக்கும் நோய் உண்டாகிறது. சுமார் 250 வகை பாக்டீரியாக்கள், 350 வகை வைரஸ் கிருமிகள், 600 வகை பூஞ்சாணங்கள், 250 வகை புரோட்டோசோவாக்கள், மற்றும் 100வகை நூற் புழுக்கள் பூச்சிகளை பாதித்து, நோய்வாய்ப் படச்செய்து கொல்கின்றன. இயற்கையிலேயே இத்துணைக் கிருமிகள் பூச்சிகளைத் தாக்கினாலும், இவை எல்லாவற்றையும் ஆராய்ச்சிச்சாலையில் அதிக அளவில் உற்பத்தி செய்து பயன்படுத்துவது இயலாதது. பயிர்களின் முக்கியமான பூச்சிகளைப் பாதிக்கக்கூடிய சுமார் 50 வகைக் கிருமிகள், நூற் புழுக்கள் மட்டுமே நமக்கு மிகவும் பயனுள்ளவையாக இருக்கின்றன. மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும், நன்மை செய்யும் பூச்சிகளையும், மற்ற உயிரினங்களையும் பாதிக்காத நுண்ணுயிர்க் கிருமிகளே நமக்குத்தேவை. அவை எளிதில் உற்பத்தி செய்யக் கூடியவையாகவும் இருக்க வேண்டும். உற்பத்திச் செலவும் மிகவும் குறைவாக இருக்க வேண்டும். பெரும்பாலான கிருமிகள், பூச்சிகள் உற்பத்தியாகுமிடங்களில் தங்கி, தொடர்ந்து அவற்றை அழிக்கப் பயன்படுவதால், இப்பயிர்ப் பாதுகாப்பு முறை மிகவும் சிக்கனமாகவே இருக்கிறது.

**பூச்சிகளின் பாக்டீரியா கிருமிகள் :**

பேசில்லஸ் துரிஞ்சியன்ஸ் எனப்படும் பாக்டீரியா, பயிர்களைப் பாதிக்கும் இலைப் புழுக்கள் போன்றவற்றை அழிக்கும் திறம் படைத்தது. இந்த பாக்டீரியாவின் செல் ஒவ்வொன்றிலும் ஒரு ஸ்போர் விதையும், பூச்சிகளுக்கு நச்சுத் தன்மையுள்ள 8-பக்க வைரக்கல் வடிவமுள்ள படிகம் ஒன்றும் உள்ளன. இக்கிருமியை தூசி மருந்துபோல், தூவுவான் மூலம் தூவலாம். எண்ணெய்த் திரவ மருந்து போல் தண்ணீரில் கலந்தும் தெளிப்பான்கள் வைத்துத் தெளிக்கலாம். இலைகளுடன் இப் பாக்டீரியாவையும் புழுக்கள் உண்பதால் இரண்டு நாட்களுக்குள் அவை கறுப்பாகி, அழுகிச் செத்து மடிகின்றன.

இக்கிருமி செடிகளுக்கோ, மனிதர்களுக்கோ, கால்நடைகளுக்கோ அல்லது நன்மை செய்யும் பூச்சிகளுக்கோ நோய் ஏற்படுத்துவதில்லை. மாறாக, மாட்டுத் தீவனம், கோழித் தீவனத்துடன் இதைக் கலந்து கொடுத்தபோது, அவற்றின் சாணத்தில் உற்பத்தியாகும் வீட்டு ஈயின் புழுவும் நோய் வாய்ப்பட்டு இறந்துவிடுகின்றது.



செடிகளிலும் பட்டு, வியாதி விரைவாக எல்லாப் பூச்சிகளுக்கும் பரவுகிறது. ஓர் ஏக்கர் பயிருக்கு சுமார் 50-100 நோய் வாய்ப்பட்ட புழுக்களிலிருந்து கிடைத்த வைரஸ் கிருமிகள் போதுமானது. நல்ல பயனடைய இக்கிருமிகளை மாலை நேரங்களில் நல்ல தண்ணீருடன் கலந்து தெளிக்க வேண்டும்.

**பூச்சிகளின் பூசணங்கள் :**

காப்பிச் செடியைத் தாக்கும் பூச்சியை செஃபலோஸ்போரியம் லெகானியய் என்னும் பூசணம் நல்ல முறையில் கட்டுப்படுத்தியது. இப்பூசணத்தைச் சோள தானியத்தில் உற்பத்தி செய்து அதன் ஸ்போர் விதையைத் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும். ஸ்போர், பூச்சியின் மீதுபட்டு, அதன்பின் முளைத்து பூச்சிக்குள் செல்லும், நான்கு நாட்களுக்குள் பூச்சி செத்து, பின் பூசண வளர்ச்சி ஏற்பட்டு மற்ற பூச்சிகளுக்கும் நோய் பரவுகிறது. குளிர்காலங்களில், காற்றின் ஈரத்தன்மை அதிகமாக இருக்கும்போது இக்கிருமி வேசமாகப் பரவுகிறது.

இதேபோல, பேசில்லஸ் பொப்பிலியே என்னும் பாக்டீரியா, பயிர்களின் வேரைத் தாக்கும் வெள்ளைப் புழுக்களை நல்ல முறையில் அழிக்க முடியுமெனக் கண்டறியப்பட்டது.

**பூச்சிகளின் வைரஸ் கிருமிகள் :**

பூச்சிகளைத் தாக்கும் வைரஸ் கிருமிகள் மிகவும் பயனுள்ளவையாக இருப்பதற்கு, அவை குறிப்பிட்ட பூச்சியை மட்டும் அழிப்பது, மற்ற உயிரினங்களைப் பாதிக்காதது, மற்றும் வேகமாகப் பரவி பூச்சிகளை நோய் வாய்ப்படச் செய்வது ஆகியவை முக்கிய காரணங்களாகும். பருத்தி வெட்டுப்புழு புரடீனியா, நிலக்கடலை சிவப்பு கம்பளிப்புழு மற்றும் கொண்டைக் கடலைக் காய்த் துளைப்பான் ஆகியவற்றை அழிக்க மூன்றுவித வைரஸ் கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வைரஸ் கிருமிகளைச் செடிகளின் மீது தெளிக்க வேண்டும். செடிகளுடன் கிருமிகளை உண்ட புழுக்கள் ஓரிரு நாட்களில் மேற்கொண்டு உணவு உட்கொள்ளும் தன்மையை இழந்துவிடுகின்றன. அடுத்த இரண்டு, மூன்று நாட்களில் புழுக்கள் அழுகி, தலைகீழாகத் தொங்கிச் சாகின்றன. புழுவின் உடலிலிருந்து கிருமிகள் ஏராளமாக வெளிப்பட்டு மற்ற

இதேபோல் குப்பையில் உற்பத்தியாகும் தென்னை மர காண்டா மிருக வண்டின் புழுவை அழிக்க மற்றுமோர் பூசணம் (மேடரைசியம் அனைசோபிலியே) நல்ல பலனளிக்கிறது. இதை காரட் கிழங்கில் உற்பத்தி செய்து, ஸ்போர் கலவையைக் குப்பையில் தெளிக்க வேண்டும்.

நோய்க்கிருமிகள் மூலம் பயிரைத் தாக்கும் பூச்சிகளை அழிப்பதில், நம் நாட்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இந்த ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நச்சுத்தன்மை இல்லாத, எளிய, நிரந்தரமான பயிர்ப்பாதுகாப்பு செய்ய இவ்வாராய்ச்சிகள் உறு துணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

## வேளாண்மை மறுநிதி மேம்பாட்டுத் திட்டங்கள் !

பம்பாயிலுள்ள வேளாண்மை மறுநிதி மேம்பாட்டுகழகத்தின் நிதி உதவியுடன், ரூ. 1,242.62 இலட்சங்கள் நிதி ஒதுக்கீட்டில் சிறு பாசனம் அல்லாத திட்டங்களான தென்னை அபிவிருத்தி, ரப்பர் பயிரிடுதல், கோக்கோ பயிரிடுதல், திராட்சை பயிரிடுதல் ஆகிய 36 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் ரூ. 765.22 இலட்சங்கள் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பல நிலைகளில் திட்ட உருவாக்கத்திலுள்ள சிறு பாசனம் அல்லாத 34 திட்டங்கள் இந்த ஆண்டில் வேளாண்மை மறுநிதி மேம்பாட்டுக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னர் செயல்படுத்தப்படும். இதே திட்டத்தின் கீழ் நீண்ட காலக் கடன் வழங்குவதற்காக ரூ. 5 கோடி செலவில் இந்த ஆண்டிற்குத் திட்டம் வகுக்கலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# தஞ்சைக்கேற்ற நஞ்சை நில வாழை

திரு பாஷ்யம்
வாழை ஆராய்ச்சி அலுவலர் (பொறுப்பு),
வாழை ஆராய்ச்சி துணை-நிலையம்,
ஆடுதுறை.
—துணை வேளாண்மை அலுவலர்கள்:
திரு ஜோ. இராதாகிருஷ்ணன்,
திரு எஸ். சுந்தரம்பிள்ளை.

மூக்கனிகளில் மூன்றாவது கனியாகவும், ஏழைகளின்ஆப்பிள் என்றும் அழைக்கப்படும் வாழையானது இந்தியத் துணைக கண்டத்தில் எல்லா மாநிலங்களிலும் பயிரிடப்பட்டு வருகிறது. குறிப்பாக தமிழகத்தில் சுமார் 49,320 எக்டேர்நிலப் பரப்பில் பயிரிடப்பட்டு, மொத்த உற்பத்தியில் மூன்றிலொரு பங்கை தமிழகம் தருகிறது. தமிழகத்தில் குறிப்பாக மதுரை, திருச்சி, திருநெல்வெலி, தஞ்சாவூர் மாவட்டங்களில் அதிகப்பரப்பில் பயிரிடப்படுகிறது.

நமது தமிழகத்தில் வெவ்வேறு மாவட்டங்களில் அந்த மாவட்டங்களின் சூழ்நிலைக்கேற்ப நஞ்சை நிலங்களிலும், தோட்டக்கால் நிலங்களிலும், மலைகளிலும் பயிரிடப்பட்டுவருகிறது.

தமிழகத்தில், மற்ற மாவட்டங்களில் பயிர் செய்வதைக்காட்டிலும் தஞ்சை மாவட்டத்தில் வாழையை பயிர் செய்வதில் ஒரு சிறப்பு உண்டு. அதாவது ஆற்றின் வேகத்தால் காலப்போக்கில் அடித்து வரப்பட்டு சேர்ந்து குறுமண் கலந்த வண்டல் மண்ணில் வாழையானது நீர் பாய்ச்சப்படாமல் பல்லாண்டுகளாக ஒரே இடத்தில் பயிர் செய்வதை வேறு எங்கும் காண முடியாது. இம்மாதிரி வாழையடி வாழையாக ,வாழை பயிர் செய்யப்படுவதுப் படுகை முறையில்வாழை பயிர் செயல் என்றழைக்கப்படுகிறது.

இத்தஞ்சைப் பகுதியில் நன்செய் நிலங்களிலும் வாழையைப் பயிர் செய்வதற்கு விவசாயிகள் அதிகமாக முன் வருகிறார்கள். மாற்றுப் பயிர் செய்வதற்கும், சிற்சிலயிடங்களில் பாசனத்திற்குத் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுவதாலும் இவ்விதப் பயிர் மாற்றம் செய்ய இப்பகுதி வேளாண் பெருமக்கள் வாழையை நாடுகின்றனர். இவ்வித நன்செய் வாழை அதிக அளவில் திருச்சி மாவட்டத்திலும், மற்றும் மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலும் பயிர் செய்யப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் நேந்திரன் ரஸ்தாளிபோன்ற வாழையினங்களும், மதுரையில் நெய் வண்ணன் என்ற ரகமும் தனியாகவும், கலப்புப் பயிராகவும் நன்செய் நிலங்களில் சாகுபடி செய்யப்படுகிறது.

ஆகவே, தஞ்சையில் உள்ள நன்செய் பகுதிகளுக்கு ஏற்ற வாழையினத்தைக்கண்டறியவும், செய் நேர்த்தி மற்றும் வடிகால் வசதி ஏற்படுத்தும் முறைகளை கண்டறியவும் ஆடுதுறை வாழை ஆராய்ச்சி துணை-நிலையத்தில் 1976-ஆம் ஆண்டு முதல், முக்கிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இப்பகுதியில் ஏற்படும் கடுங்காற்று, புயல் காரணமாகவும், பாசனத் தண்ணீர் தேங்குவதாலும் வாழைகள் தீவிர பாதிப்பிற்குள்ளாகின்றன. இவ்வாராய்ச்சிப் பண்ணையில் நஞ்சை வாழை பரிசோதனையின்போதும் இவ்வித இடர்ப்பாடுகள் ஏற்பட்டன.

புதியதாக நடப்பட்ட முதல் வாழைக் கன்றுகளின் வளர்ச்சியும், அதன் விளைச்சலும் ஆய்வு செய்யப்பட்டது. இதில்சாக்கியா என்ற வாழை இனம் மற்ற பூவன், காஞ்சி, மொந்தன், கற்பூரவல்லி, ரஸ்தாளி, ரொபஸ்டா, நேந்திரன் ஆகிய வாழையினங்களை விட சிறப்பாக இருப்பது கண்டறியப்பட்டது.

| வாழையின் விளைவுத்திறன் | | ஒரு தார் (கிலோ) |
|---|---|---|
| 1. பூவன் | ... | 5.680 |
| 2. மொந்தன் | ... | 7.731 |
| 3. காஞ்சி | ... | 8.477 |
| 4. சாக்கியா | ... | 10.850 |
| 5. கற்பூரவல்லி | ... | 7.785 |
| 6. ரொபஸ்டா | ... | 5.110 |
| 7. நேந்திரன் | ... | 2.865 |
| 8. ரஸ்தாளி | ... | 5.300 |

சாக்கியா என்ற இந்த வாழையிரகம் தமிழகத்தில் கற்பகம் என்று இவ்வாராய்ச்சி நிலையத்தால் பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டு வருகின்றது. இது புயல் கடுங்காற்றை ஓரளவு தாங்கும் சக்தி கொண்டது.

காயாகவும் பழமாகவும் உபயோகப்படுத்தக்கூடிய இந்த சாக்கியா ரகம் மதுரை மாவட்டத்தில் பயிரிடப்பட்டு வரும் நெய் வண்ணனைக் காட்டிலும் மகசூலில் சிறந்து விளங்குவதாகக் கண்டறியப்பட்டது. மேலும், இந்த ரகம் வாடல் நோய்க்கும், இலைப் புள்ளி நோய்க்கும், இளங்காய்கள் கருகும் நோய்க்கும் நெய்வண்ணனைப் போன்று இலக்காவதில்லை.

எனவே தஞ்சையில் உள்ள நஞ்சை நிலங்களில் வாழையைப் பயிரிட விரும்பும் வேளாண் பெருமக்கள் இந்த சாக்கியா இன வாழையைப் பயிரிட்டு அதிக இலாபம் பெறலாம்.











# தந்தை பெரியார் நூற்றாண்டு விழா

நாகர்கோவில்
(7-7-'79)













விருதுநகர்
(8-7-'79)



# பயறு இரகங்களின் ஊட்டத் திறன்

நமது உடல் வளர்ச்சிக்கும், நோய்களிலிருந்து நம்மைக் காப்பதற்கும் புரதச்சத்து அவசியம். நாம் அதிகமாகச் சாப்பிடும் அரிசி உணவில், புரதச் சத்து குறைவாகவே உள்ளது. பயறு, பருப்பு வகைகளில் சுமார் 16 சதம் புரதமும், அரிசியில் 8 சதம் புரதமும் உள்ளன. புரதம் என்பது 20 வகையான அமினோ அமிலங்கள் இணைந்த ஒரு கூட்டுப் பொருளாகும். ஒவ்வொரு புரதத்திலுமுள்ள அமினோ அமிலங்களின் வரிசைக் கிரமமும் அவற்றின் அளவும் வித்தியாசப்படும்.

பால், முட்டை மற்றும் மாமிச உணவுகளில் நமக்கு வேண்டிய அமினோ அமிலங்கள் அனைத்தும் உடல் நலனுக்குரிய விகிதாச்சாரத்தில் உள்ளன. பயறு வகைகளில் உள்ள புரதத்தில் மெத்தியோனின் என்ற அமினோ அமிலம் குறைவாக உள்ளது. நாம் சாப்பிடும் உணவில் ஏதாவது ஓர் அமினோ அமிலம் குறைந்தால், மற்ற அமினோ அமிலங்கள் உட்கிரகிக்கப்படுவது குறையும். எனவே மெத்தியோனின் அதிகமுள்ள பயறு இரகங்களையே நாம் சாப்பிடுவது அவசியம்.

**மா. ஜெயப்பிரகாசம்**


**அ. கிருட்டிணவேணி**

**உயிர் வேதியல் துறை**

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்**

**கோவை.**

மற்ற எல்லா இரகங்களைவிட பிபி 3 இரக உளுந்தில் மெத்தியோனின் அதிகமாக உள்ளது. அடுத்ததாக கோ 3 உளுந்திலும், கோ 2, எம். 2 பச்சைப் பயறிலும் மெத்தியோனின் அதிகம் உள்ளது. சோயாபீன்ஸில் புரதம் அதிகமிருந்தாலும் மெத்தியோனின் மிகக் குறைவு. எனவே சோயாபீன்ஸ் உணவுடன் மெத்தியோனின் கலந்து சாப்பிட்டால் அதன் ஊட்டத் திறன் அதிகரிக்கும். இன்னும் அதிக அளவு மெத்தியோனின் உள்ள பயறு இரகங்களைக் கண்டுபிடிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



| இரகம் | புரதம் சதம் | மெத்தியோனின் கி/100 கி. புரதம் |
|---|---|---|
| **துவரை** | | |
| கோ 2 | ... 15.71 | 1.40 |
| கோ 3 | 14.95 | 1.34 |
| எஸ். 80 | 16.22 | 0.86 |
| 112—11—1 | 15.10 | 1.19 |
| **உளுந்து** | 16.85 | 1.78 |
| கோ. 4 | 17.48 | 1.49 |
| பிபி 3 | 15.62 | 1.92 |
| சி.எஸ். 61—1 | 18.49 | 1.19 |
| **பச்சைப்பயறு** | | |
| கோ 2 | 19.00 | 1.58 |
| கோ 3 | 16.85 | 1.14 |
| எம். 2 | 19.00 | 1.58 |
| **மொச்சை** | | |
| கோ 9 | 18.36 | 1.20 |
| டி. எல். 2539 | 18.24 | 1.21 |
| எம். எஸ். 9332 | 17.48 | 1.26 |
| **சுண்டக்கடலை** | | |
| கோ 1 | 16.09 | 0.87 |
| கோ 2 | 17.48 | 0.67 |
| **சோயாபீன்ஸ்** | | |
| யுஜிஎம் 20 | 27.70 | 1.08 |
| எம் 2 | 28.58 | 0.77 |
| எம் 3 | 28.08 | 0.93 |
| **தட்டைப்பயறு** | | |
| கோ 2 | 18.61 | 1.51 |
| கோ 3 | 19.62 | 1.53 |
| பிஎல்எஸ் 1 | 19.00 | 1.37 |
| பிஎல்எஸ் 370 | 16.34 | 1.35 |
| கோ பூசா 4 | 17.98 | 1.00 |
| **கொள்ளுப்பயறு** | | |
| கோ 1 | 17.61 | 1.48 |
| ஹெப்பால் 1 | 17.10 | 1.17 |
| எச்பிகே 1 | 15.46 | 1.29 |
| செட்டிபாளையம் | 15.33 | 1.30 |



# உரங்களும் அவைகளின் தேவைகளும்

(க. இராமலிங்கம், எம்.எஸ்.ஸி (விவ)
க. கலில் அகமது, பி.எஸ்.ஸி. (விவ)
மண் பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம்)

பயிர் வளர்ச்சிக்குத் தேவையான மூலகங்களை அளிக்கக் கூடிய பொருட்களை உரம் என்று கூறலாம். பயிர்களின் வளர்ச்சிக்குத் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து, சுண்ணாம்புச் சத்து, மக்னீசிய சத்து, கந்தகச் சத்து, இரும்புச் சத்து, தாமிர சத்து, துத்த நாகச் சத்து, மாங்கனீசு சத்து, வெண்கார சத்து, மாலிப்டினம் சத்து ஆகியவை தேவைப் படுகின்றன. மேற்கூறிய சத்துக்களில் ஒன்றையோ அல்லது பல சத்துக்களையோ கொடுக்கக்கூடிய பொருட்களை உரங்கள் என்று கூறுவர்.

### உரத்தின் அவசியம்

பயிர்கள், தங்களுக்குத் தேவையான சத்துக்களை மண்ணிலிருந்து எடுத்துக் கொள்கின்றன. அந்தச் சத்துக்கள் மண்ணில் போதிய அளவு இருந்தால் உரங்கள் இடவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் மண்ணிலுள்ள சத்துக்களின் அளவு, குறிப்பாக, தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவைகளின் அளவு பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான அளவைவிடக் குறைந்து இருப்பதால், இம் மூன்று சத்துக்களையும் அளிக்கக்கூடிய உரங்களை இடுவது அவசியமாகிறது. சுண்ணாம்புச் சத்து, மக்னீசிய சத்து, கந்தகச் சத்து ஆகிய மூன்று சத்துக்களும் மண்ணில் போதிய அளவு இருப்பதால், இச்சத்துக்களை இடவேண்டிய அவசியம் தற்பொழுது இல்லை. ஆனால் நுண்ணுணவுச் சத்துக்கள் என்று அழைக்கப் படும் சத்துக்களாகிய இரும்புச் சத்து, தாமிர சத்து, துத்தநாகச் சத்து, மாங்கனீசு சத்து, வெண்கார சத்து, மாலிப்டின் சத்து, ஆகியவைகளின் தேவைகள் தற்பொழுது இந்தியாவின் பல பகுதிகளிலும் உணரப் பட்டு வருகின்றன. சில பகுதிகளில், சில நுண்ணுணவுச் சத்துக்கள் நுண்ணுணவு உரங்களின் மூலம் அளிக்கப்பட்டும் வருகின்றன.


கடந்த இருபது ஆண்டுகளாக, நமது நாட்டில் வேளாண்மையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதிக உரம் ஏற்று, உயர் விளைச்சல் தரக்கூடிய பயிர் வகைகள் கடந்த பதினைந்து ஆண்டுகளில் நம் நாட்டிலும், நமது மாநிலத்திலும் புகுத்தப் பட்டன. உயர் விளைச்சல் தரக்கூடிய பயிர் வகைகள் மண்ணிலிருந்து அதிக அளவு சத்துக்களை எடுப்பதால், மண்ணிலுள்ள சத்துக்களின் அளவு குறைந்து வருகிறது. மேலும், ஒரு போகம் செய்யப்பட்ட நிலங்களில் இரு போகமும், இரு போகங்கள் செய்யப்பட்ட நிலங்களில் முப்போகமும் செய்யப்பட்டு வருகின்றன. அதாவது, நிலத்தில் ஆண்டு முழுவதும் பயிர் இருந்து கொண்டே இருக்கிறது. அப்பயிர்கள் தொடர்ந்து மண்ணிலுள்ள சத்துக்களை எடுத்துக்கொண்டே இருப்பதால் சமீப காலத்தில் உரத் தேவைகள் அதிக அளவு பெருகியுள்ளன. அத்துடன் உணவு உற்பத்தி அதிகரித்ததால், உரத்தேவைகளும் அதிகரித்து விட்டன.

### உரங்களின் வகைகள்:

உரங்களை நேரடி உரங்கள் (Straight fertilizers), கலப்பு உரங்கள் (Mixed fertilizers)

# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி



மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத் துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித் தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

கூட்டு உரங்கள் (Complex fertilizers) என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

**நேரடி உரங்கள்:**

நேரடி உரங்களை மீண்டும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது (1)தழைச் சத்து தரக்கூடிய உரங்கள் (2) மணிச்சத்து தரக்கூடிய உரங்கள், (3) சாம்பல் சத்து தரக் கூடிய உரங்கள்.

தழைச்சத்து தரக்கூடிய முக்கிய உரங்கள்

**யூரியா:—**

இது, எளிதில் நீரில் கரையக்கூடிய வெண்மைநிறப் படிகமான உப்பு. தழைச் சத்தை 46 விழுக்காடு தன்னகத்தே கொண்டது. எளிதில் காற்றிலுள்ள ஈரத்தை உறிஞ் சும் தன்மை உடையதால் இவ்வுரத்தை பாலிதின் உறையிட்ட கோணிகளில் வைத்திருக்க வேண்டும். 1828-ஆம் ஆண்டு ''ஒலர்'' என்ற அறிவியல் மேதைதான் யூரியா என்றபொருளை முதன் முதலில் தயாரித்துக் காண்பித்தவர். யூரியாவை நிலத்தில் இட்டவுடன், அது நான்கு அல்லது ஐந்து நாட்களுக்குள் அம் மோனியம் அயனிகளாக மாறி விடுகிறது. நெற்பயிர்கள் அம்மோனியம் அயனிகளை அப்படியே வேர்களின் மூலம் எடுத்துக் கொள் கின்றன. மற்ற பயிர்கள் அம்மோனியம் அயனிகள், நைட்ரேட் அயனிகளாக மாறிய பிறகு, நைட்ரேட் அயனிகளை எடுத்துக் கொள்கின்றன. இதை நீரில் கரைத்து (2சதவீத கரைசல்) இலைகளின் மேல் தெளித் தாலும், தழைச்சத்தானது பயிர்களுக்குக் கிடைக்கிறது.

யூரியாக் கரைசலை இலைகளின் மேல் தெளித்து, பயிர்களுக்குத் தழைச்சத்தை அளிக்கும் ஆராய்ச்சி கரும்புப் பயிரில் மேற் கொள்ளப்பட்டு வெற்றிகரமாக முடிந்துள்ளது. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் இது குறித்து எடுக்கப்பட்ட ஆராய்ச்சிகள் நல்ல பலனை அளித்துள்ளன. யூரியா கரைசலைக் கரும்புப் பயிருக்குத் தெளிப்பதன் மூலம் உரச்செலவைக் குறைக்கலாம் என்று அறியப்பட்டுள்ளது.

**அம்மோனியம் சல்பேட்:—**

யூரியா முக்கியத்துவம் அடைவதற்கு முன்பு, தழைச்சத்தைக் கொடுக்கக்கூடிய உர மாக அதிக அளவில் பயன்படுத்தப்பட்டது, அம்மோனியம் சல்பேட் ஆகும். இது வெண்மைநிறப் படிகமான உப்பு. எளிதில் நீரில் கரையக்கூடியது. இருபது சதவீதம் தழைச்சத்துக் கொண்டது. எவ்வளவு நாட்கள் வைத்திருப்பினும் தன்மை மாறாது; கெட்டுப் போகாது.

**கால்சியம் அம்மோனியம் நைட்ரேட்:**

இந்த உரத்தில் கால்சியம் கார்பனேட், அம்மோனியம் நைட்ரேட் என்ற இரண்டு உப்புக்கள் உள்ளன. இது உருண்டை வடிவம் கொண்டது. கால்சியம் சத்து குறைந்த நிலங் களுக்கும், அமிலத் தன்மையுடைய நிலங்களுக் கும் இது ஒரு சிறந்த உரம். நம்நாட்டில் 1972-ம் ஆண்டு வரை 20 சதவீதம் தழைச்சத்து கொண்ட கால்சியம் அம்மோனியம் நைட்ரேட் தயாரிக்கப்பட்டு வந்தது. அதன் பிறகு தயா ரிக்கப்படும் உரத்தில் 26 சதவீதம் தழைச் சத்து உள்ளது. இந்த உரத்தில் பாதி அம் மோனியம் வடிவமாகவும், மறுபாதி நைட் ரேட் வடிவமாகவும் உள்ளது.

**அம்மோனியம் சல்பேட் நைட்ரேட்:**

கணக்கிடப்பட்ட அளவு அம்மோனியம் சல்பேட், மற்றும் அம்மோனியம் நைட்ரேட்






கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

கோ ஆப்டெக்ஸ்
பாலியஸ்டர், பட்டு ஆடைகள்
புத்துலகப் படைப்பு...!
புதுமைகளின் முன்னறிவிப்பு...!

ஆகிய இரு உப்புக்களையும் ஒரு குறிப்பிட்ட உஷ்ண நிலையில் கலந்தால் கிடைப்பதே அம்மோனியம் சல்பேட்-நைட்ரேட் எனப்படும் இரட்டை உப்பாகும். இதில் 26 சதவீதம் தழைச்சத்து உள்ளது. இவ்வுரத்தில் தழைச் சத்தானது, 73 சதவீதம் அம்மோனியம் வடிவத்திலும் 27 சதவீதம் நைட்ரேட் வடிவத்திலும் உள்ளது.

*மணிச்சத்தைத் தரக்கூடிய முக்கிய உரங்கள்:*

**சூப்பர் பாஸ்பேட்:**

மணிச்சத்தைத் தன்னகத்தே கொண்டுள்ள இயற்கைப் பொருட்களாகிய எலும்புத் தூள், ராக் பாஸ்பேட் முதலியவற்றை விட இப்பொருள் சிறந்ததாக இருந்ததால் இதற்கு சூப்பர் பாஸ்பேட் எனப் பெயரிடப்பட்டது. ஆங்கிலத்தில் சூப்பர் என்றால் சிறந்த, மேலான என்று பொருள்: ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ''லீபிக்'' என்ற வேதியல் நிபுணர் 1840-ஆம் ஆண்டு முதன் முதலாக சூப்பர் பாஸ்பேட் என்ற உரத்தைத் தயாரித்தார். அதன் பிறகு 1842-ஆம் ஆண்டு 'லாஸ்' என்ற விஞ்ஞானி சூப்பர் பாஸ்பேட் என்ற உரத்தைப் பதிவு செய்த பொருளாக்கித் தயாரித்து விற்பனை செய்தார். அதன் மூலம் கிடைத்த ஏராளமான பணத்தைக் கொண்டு, இங்கிலாந்து நாட்டில் ஓர் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்திப் பல அரிய ஆராய்ச்சிகள் செய்து புகழ் பெற்றார். அந்த ஆராய்ச்சி நிலையம் தான் ''ரோத்தாம் ஸ்டேட் ஆராய்ச்சி நிலையம்'' என அழைக்கப்பட்டு இன்றும் உலக வேளாண்மை வேதியல் ஆராய்ச்சியில் முன்னோடியாகத் திகழ்கிறது.

மணிச்சத்து உரங்களில் சிறந்தது சூப்பர் பாஸ்பேட், 16 சதவீதம் மணிச்சத்தை உடையது. இது சற்றுச் சாம்பல் நிறமாகவும், மாவு போன்றும் இருக்கும். சூப்பர் பாஸ்பேட் என்பது தனிப்பட்ட உப்பு அல்ல. பல பொருட்களின் கலவையே சூப்பர் பாஸ்பேட் ஆகும்.

சூப்பர் பாஸ்பேட்டை எப்பொழுதும் அடியுரமாக இடவேண்டும்.

**ராக் பாஸ்பேட்:—**

ராக் பாஸ்பேட் என்பது உலகத்தின் சில பகுதிகளில் நிலத்திற்கடியில் காணப்படுகிறது. இந்தியாவில் உதயபூர், சிங்பூம், பெரம்பலூர் ஆகிய இடங்களில் ராக் பாஸ்பேட் காணப்படுகிறது. முப்பது முதல் நாற்பது சதவீதம் மணிச்சத்தை உடையது ராக் பாஸ்பேட். அமில நிலங்களுக்கு இடப்படும் ராக் பாஸ்பேட் நல்ல பயன்களைக் கொடுத்துள்ளது. ஆகவே மற்ற நிலங்களைக் காட்டிலும், அமில நிலத்திற்கு ராக் பாஸ்பேட் சிறந்தது. அதே போன்று அங்கம் அல்லது கரிம பொருள் அதிகமாக உள்ள நிலங்களுக்கும் ராக் பாஸ்பேட் சிறந்தது. நிலத்திற்கு இடப்பட்ட ராக் பாஸ்பேட்டிலிருந்து, மணிச்சத்து சிறிய அளவில் பல ஆண்டுகளுக்குக் கிடைப்பதால் முதல் முறை இடும் பொழுது அதிக அளவில் இட வேண்டும். பின் இரண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை இடலாம்.

*சாம்பல்சத்துத் தரக்கூடிய முக்கிய உரங்கள்:—*

சாம்பல் சத்தானது ''பயிரினங்களுக்கு உயிரூட்டும் மூலகம்'' என்று அழைக்கப்படுகிறது. இச் சத்தைக் கொடுக்கக் கூடிய முக்கிய உரங்கள் இரண்டு.

**முரியேட் ஆப் பொட்டாஷ்**

இவ்வுரம் 60 சதவீதம் சாம்பல் சத்தைக் கொண்டது. தற்சமயம் மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் உரமும் இதுவே. பழச் செடிகளுக்கும், காய்கறிப் பயிர்களுக்கும், மற்றும் புகையிலைப் பயிருக்கும் முரியேட் ஆப் பொட்டாஷ் பயன்படுத்துவதைத் தவிர்த்து, பொட்டாசியம் சல்பேட் பயன்படுத்துவது நல்லது. முரியேட் ஆப் பொட்டாஷ் பயன்படுத்துவதால், பழங்களின் இனிப்புத்தன்மை குறைந்து விடுகிறது. உருளைக்கிழங்கிலுள்ள நீரில் கரையக்கூடிய மாவுப் பொருள் குறைந்து கிழங்கின் ருசி குறைந்து விடுகிறது. புகையிலை பயிருக்கு இவ்வுரத்தைப் பயன்படுத்தினால், குளோரைடு நச்சுத்தன்மை ஏற்பட்டு விடும்.

**பொட்டாசியம் சல்பேட்:**

இவ் வுரத்தில் சாம்பல் சத்து 48 முதல் 52 சதவீதம் உள்ளது. பழச் செடிகளுக்கும், காய்கறிப் பயிர்களுக்கும், மற்றும் புகையிலைப் பயிருக்கும் இவ்வுரம் மிகவும் ஏற்றது.

**கலப்பு உரங்கள்**

நேரடி உரங்கள் யாவும் ஏதாவது ஒரு குறிப்பிட்ட பயிருணவுச் சத்தை மட்டும் தான் அளிக்கக் கூடியன. கலப்பு உரங்கள் இரண்டு அல்லது மூன்று பயிருணவுச் சத்துக்களை அளிக்கக் கூடியது.

கலப்பு உரங்கள் இடுவதால், பயிருணவுகளைச் சமசீராகப் பயிர்களுக்கு அளிக்க முடிகிறது. குறிப்பிட்ட மண் வகைகளுக்கும், குறிப்பிட்ட பயிர் வகைகளுக்கும் ஏற்ற கலப்பு உரத்தைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த முடியும். தழைச்சத்து தரக்கூடிய நேரடி உரங்களாகிய யூரியா, அம்மோனியம் சல்பேட் போன்ற உரங்களைத் தொடர்ந்து இடுவதன் மூலம் மண்ணில் அமிலத்தன்மை ஏற்படும். கலப்பு உரங்களில் யூரியா அல்லது அம்மோனியம் சல்பேட் சேர்க்கப்படும் பொழுது, அதனால் ஏற்படக்கூடிய அமிலத் தன்மையை நீக்குவதற்குத் தேவையான சுண்ணாம்பையும் கலப்பு உரங்களில் சேர்த்து விடுவதால் நிலத்தில் அமிலத்தன்மை ஏற்பட வாய்ப்பில்லை. சில பயிர்களுக்குத் தேவையான நுண்ணுணவுச் சத்துக்களைக் கலப்பு உரத்தில் சேர்த்து விற்பனை செய்ய முடியும். உதாரணமாக நிலக்கடலைக்கு என்று தயாரிக்கப்படும் கலப்பு உரத்தில் வெண்காரத்தைச் சேர்த்து விற்பனை செய்யலாம். கலப்பு உரங்கள் நேரடி உரங்களைவிட சில விதத்தில் சிறந்ததாக இருப்பினும் கலப்பு உரங்களின் விலை அதிகம். அதாவது கலப்பு உரங்களிலுள்ள பயிருணவுச் சத்துக்களின் விலை, நேரடி உரங்களிலுள்ள பயிருணவு சத்துக்களின் விலையை விட அதிகம்.

**கூட்டு உரங்கள்**

கூட்டு உரங்களும் கலப்பு உரங்களைப் போலவே இரண்டு அல்லது மூன்று பயிருணவுச் சத்துக்களை அளிக்கக் கூடியன. ஆனால் கலப்பு உரம் என்பது, தழைச்சத்து, மணிச்


சத்து, சாம்பல் சத்துத் தரக்கூடிய நேரடி உரங்களைத் தேவையான விகிதத்தில் கலந்து தயாரிக்கப்படுபவை. கலப்பு உரம் என்பது தேவையான, குறிப்பிட்ட நேரடி உரங்களின் கலவையாகும். ஆனால் கூட்டு உரத்தில் நேரடி உரங்களைக் காணமுடியாது. கூட்டு உரம் என்பது பல மூலகங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு கூட்டுப் பொருளாகும். கூட்டு உரத்திலுள்ள ஒவ்வொரு குருணையிலும்அவ்வுரத்தில் இருக்க வேண்டிய சத்துக்கள் குறிப்பிட்ட அளவுப்படி இருக்கும். நம் நாட்டில் 1960-ஆம் ஆண்டில் தான் முதன் முதலாக அம்மோனியம் பாஸ்பேட் சல்பேட் என்ற கூட்டு உரம் தயாரிக்கப்பட்டது. கடந்த பத்து ஆண்டுகளாக, பல்வேறு கூட்டு உரங்கள் நம் நாட்டில் விற்பனை செய்யப்படுகின்றன. அவையாவன :—

அம்மோனியம் பாஸ்பேட் சல்பேட், நைட்ரோ பாஸ்பேட், அம்மோனியம் பாஸ்பேட் சல்பேட் நைட்ரேட், அம்மோனியம் நைட்ரேட் பாஸ்பேட், யூரியா அம்மோனியம் பாஸ்பேட், என். பி. கே. காம்ப்ளெக்ஸ்.

நம் நாட்டில் வேளாண்மையில் மிகவும் முன்னேறியுள்ள பஞ்சாப் மாநிலத்தில்கூட, உரங்கள் தேவையான அளவு அளிக்கப்படுவதில்லை. அம் மாநிலத்திற்குத் தேவைப்படும் தழைச்சத்தில் 38 சதவிதமும், மணிச்சத்தில் 20 சதவீதமும், சாம்பல் சத்தில் 13 சதவிதமும்தான் அளிக்கப்படுகின்றன. மற்ற மாநிலங்களில் இடப்படும் பயிருணவுச் சத்துக்களின் அளவு இதை விடக் குறைவானது.

தொடர்ந்து உரங்களை நிலத்திற்கு இடுவதால் நிலம் கெட்டு விடும் என்ற எண்ணம் சில விவசாயிகளுக்கு இருந்து வருகிறது. இதுபற்றி விவசாயிகள் நன்கு தெளிவடைய வேண்டும். மணிச்சத்து, சாம்பல்சத்து அளிக்கக்கூடிய உரங்களை எவ்வளவு அதிகமாக நிலத்திற்கு இட்டாலும் சரி, அல்லது பல ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அளித்தாலும் சரி; நிலத்தின் தரம் குறைவதில்லை. ஆனால் தழைச்சத்து அளிக்கக்கூடிய உரங்களாகிய அம்மோனியம் சல்பேட், யூரியா போன்ற உரங்களை அதிக அளவிலும் தொடர்ந்து பல ஆண்டுகளுக்கும் அளிப்பதன் மூலம் நிலத்தில் அமிலத் தன்மை ஏற்பட்டு நிலத்தின் தரம் சிறிது குறையக் கூடும். அது போன்ற சமயங்களில், மண்ணைப் பரிசோதனை செய்து நிலத்திற்குச் சுண்ணாம்பு இடுவதன் மூலம் அமிலத் தன்மையை மாற்றி நிலத்தின் தரத்தை உயர்த்தலாம். ஆகவே உழவர் பெருமக்கள் உரங்களைத் தொடர்ந்து இடுவதன் மூலம் நிலம் கெட்டு விடும் என்ற அச்சத்திலிருந்து விடுபட்டு, ஏற்ற உரங்களை, த்குந்த அளவில்-குறித்த காலத்தில் பயிருக்கு அளித்து-உணவு உற்பத்திக்கு உறுதுணையாக நிற்பார்களாக!

## 20-ஆம் பக்கத்து வினாவுக்கு விடை




கோயம்புத்தூர் குறிச்சி தொழிற்பேட்டையில் உள்ள 'நல்ல சமாரிடன் மகளிர் பாலிதீன் தொழிற் கூட்டுறவுச் சங்கம்', மகளிர்க்கு அளித்துள்ள வாய்ப்பினால்தான் இந்தப் பெண்கள் நல்வாழ்வு பெற்றிருக்கிறார்கள்.

1968-ல் துவக்கப்பட்ட இந் நிறுவனம் ஆண்டுதோறும் வளர்ச்சியுற்று, தற்போது 36 பெண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு நல்கியுள்ளது.

இதே தொழிலைத் தனியார் நிறுவனங்கள் இயந்திரங்களைக் கொண்டுதான் செய்கின்றன. இக் கூட்டுறவுச் சங்கம், 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்னும் கருத்தினை அரியணையில் ஏற்ற, இயந்திரத்தின் உதவி இல்லாமல் பெண் தொழிலாளர்களைக் கொண்டு செய்து வருகிறது. இதுபோன்ற நிறுவனங்கள் பெருகினால் தாய்க்குலத்திற்குத் தக்க வகையில் வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

ஒவ்வொரு பெண் தொழிலாளியும் நாள் ஒன்றுக்கு ரூ. 3 முதல் 6 வரை சம்பாதித்து வருகின்றார். இந்த ஆண்டு முதல் இந்தப் பெண்களுக்கு 2 செட்டு சீருடைகளும் — 1977-78ஆம் ஆண்டு கிடைத்த இலாபத்தில் 75 சதவீதம் பூரிப்புத் தொகையும் வழங்குவதற்கு முடிவு செய்துள்ள நிர்வாகக் குழு, கிராமப்புற மகளிர்க்கு மென்மேலும் வேலைவாய்ப்பைத் தரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.



# நெல்லைத் தரணியில் நல்லதொரு திட்டம்

வளம் கொழிக்கும் பகுதிகள் வறண்ட பாலைவனப் பூமிபோல் ஆகிவிடாமல் இருக்கவும், மாறாக வறண்டிருக்கும் பூமியை வளம் கொழிக்கும் நிலப்பரப்பாக மாற்றவும் அரசு மேற்கொண்டு செயல்படுத்திவரும் திட்டமே ''காற்று அரிப்புத் தடுப்புத் திட்டம்''.

திருநெல்வேலி மாவட்டத்தில் குறிப்பாக திருச்செந்தூர், தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம், நான்குநேரி ஆகிய வட்டங்களில் பன்னெடுங்காலமாக வேளாண்மை வளத்திற்குச் சவால்விட்டு வந்த காற்று அரிப்புக் கொடுமையை ஓரிரு மாதங்களிலோ, வருடங்களிலோ நீக்கிவிட முடியாது என்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு ''காற்று அரிப்புத் தடுப்புத் திட்டம்'' என்ற நல்லதொரு திட்டத்தினை 1978ல் வேளாண்மைத் துறையின் மூலம் தொடங்கியது. தற்போது அத்திட்டம் சிறப்பான முறையில் செயல்பட்டுவருகின்றது.

### காற்று அரிப்பினால் ஏற்படும் கடும் சேதம்:

நினைத்தாலே நடுக்கம் தரும் வேகம் கொண்டு மணிக்கு 70 கி.மீ. முதல் 100 கி.மீ. வரை பலத்த வேகம் கொண்டு புயல் போலக் காற்று வீசுவதால் மண் அரிப்பு ஏற்படுகிறது. பெரும்பாலும் மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் ஆகிய மாதங்களில்தான் இக்காற்று அதிக வேகத்துடன் வீசுகிறது. இவ்வாறு பலமாகக் காற்று வீசுவதால் தாவர வளர்ச்சிக்கு உகந்த உரச்சத்து மிகுந்த மேல்மண் அகற்றப்படுவதுடன், மண்ணில் ஈரச்சத்தும் குறைந்துவிடுகிறது. இது தவிர, காற்றினால் அடித்துச் செல்லப்படும் மண் வேறு ஓர் இடத்தில் குவிக்கப்படுவதால் அந்த நிலங்களில் விளைச்சலும் பாதிக்கப்படுகிறது. இவ்வாறு மண் குவிந்திருக்கும் பகுதிகள் 'தேரி' எனப்படுகிறது. எகிப்து நாட்டுப் பிரமிடுகளோ என எண்ணுகின்ற வகையிலே பெரிய தேரிகளை இப்பகுதிகளில் நிறையக் காண முடிகிறது. இம் மாவட்டத்தில் மொத்தம் 10 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பு, காற்று அரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளது.

### பயிர்களுக்கு அரணாகும் பயிர்கள் :

காற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்தினால் மண் அரிப்பைத் தடுத்துவிடலாம். எனவே காற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்த பாதுகாப்புத் தாவரத் தடையங்



எகிப்து நாட்டுப் பிரமிடுகள்.... அல்ல. காற்று அரிப்பினால் குவிக்கப்பட்ட மண் மேடுகள் (தேரிகள்).


அதிர்ஷ்டத்தை
அழைத்து
வெற்றி பெறுவீர்
தமிழ்நாடு அரசு
பரிசுச் சீட்டு
மற்றும் பல பரிசுகள்
25 வது குலுக்கல் 2 முதல் பரிசுகள்
50,000
குலுக்கல் நாள்
21-8-1979
4 வரிசைகள்
DR, DS, DT, DU
பரிசுத் தொகை ரூ. 15,60,000
மொத்தப் பரிசுகள்: 10620
ரூ. 1
இயக்குநர்
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்
அரசினர் தோட்டம் சென்னை-600 002
EP-DIPR-435.



**பெண்களுக்கு வேலைவாய்ப்பு - தாவரத் தடையங்களில் பாதுகாப்பாக வளர்க்கப்படும் தாவரங்களுக்குப் பெண்கள் தண்ணீர் ஊற்றுகிறார்கள்.**

கள் அமைக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன. இந்தத் தடையங் கள் காற்று வீசுகின்ற திசையின் நேர் குறுக்காக அமைக்கப்படு கின்றன. இவை 10 மீட்டர் அக லம் கொண்டதும் ஐந்து வரிசை யில் பலதரப்பட்ட செடிகளைக் கொண்டதும் ஆகும். இந்த வரி சைகளில் விராலி, உடை, முந்திரி, சவுக்கு, பனை, புளி போன்ற வறட்சித் தன்மையிலும் வளரக் கூடிய உள்ளூர்த் தாவர வகை கள் வளர்க்கப்படுகின்றன.

வறட்சிப் பகுதிகளில் இத்தாவ ரங்களை வளர்ப்பதற்கு முக்கிய மாகத் தேவைப்படுவது தண்ணீர். இத்தாவர வகைகள் நன்கு வளர் வதற்குத் தேவைப்படும் தண் ணீர் சுற்றியுள்ள கிராமங்களி லுள்ள நீர் நிலைகளிலிருந்து ஆண், பெண் தொழிலாளர்கள் மூலம் கொண்டு வரப்பட்டு இத் தாவரங்களுக்கு ஊற்றப்படுகின் றன.

தாவரத் தடையங்கள் வளர்க் கப்படும் வறட்சிப் பகுதிகளில் 75 ஆழ்குழாய்க் கிணறுகளை ஆங் காங்கே அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட் டிருக்கிறது. முதற்கட்டமாக 31.3.79 முடிய ஐந்து ஆழ் குழாய்க் கிணறுகள் ஏற்படுத்தப்பட்டுவிட்டன.

**புதிய பூமி உருவாகிறது**

காற்று அரிப்பைத் தடுக்க வல்ல இம்மரங்கள் 10 முதல் 15 ஆண்டுகளில் நன்கு வளர்ந்து காற்றின் வேகத்தைக் கட்டுப் படுத்தும் ஆற்றல் உடையதாகி விடும். ஆகவே சுமார் 10 முதல் 15 ஆண்டுகளுக்குப் பின் அத் தாவரத் தடையங்கள் ஏற்படுத் தப்பட்டுள்ள பகுதிகளில் காற்றி னால் மண் அரிப்போ, மண் குவி யலோ ஏற்பட்ட தடையமே இருக்காது. மாறாக, வளங்களை வாரி வழங்கும் மரங்கள் இருக் கும் புதிய பூமியே காணப்படும்!

**மக்கள் திட்டம்**

காற்று அரிப்புத் தடுப்புத் திட் டத்தை வேலைவாய்ப்புத் தரும் திட்டம் என்றே சொல்லலாம். அந்த அளவிற்கு, இத்திட்டத்திற் காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை யில் 70 சதவீதம் வேலை வாய்ப் பிற்காகவே செலவிடப்படுகிறது. இத்திட்டத்தின் மொத்த இலக் கான 10 ஆயிரம் எக்டேர் பரப் பில் இவ்வாண்டு இரண்டாயிரம் எக்டேர் பரப்பில் இத்திட்டத் தைச் செயல்படுத்த நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருவ துடன் இரண்டு இலட்ச ரூபாய் செலவும் செய்யப்பட்டுள்ளது.

78-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் இந்த ஆண்டு மார்ச்சுத் திங்கள் வரை ஏழே மாதங்களில் மொத்தம் 17 ஆயிரம் மனித வேலை நாட்கள் (Mandays) நடைபெற்றுள்ளன. இத்திட்டத் தில் ஈடுபட்டிருக்கும் ஆண் தொழி லாளருக்கு நாட்கூலியாக ஐந்து ரூபாயும் பெண் தொழிலாளருக்கு நாட்கூலியாக மூன்றரை ரூபாயும் வழங்கப்படுகிறது.

'காற்று அரிப்புத் தடுப்புத் திட்டம்' செயல்படுத்தப்படும் பகுதிகளைச் சுற்றியுள்ள கிரா மங்களைச் சேர்ந்த மக்கள் இப் பணியில் ஈடுபட்டுள்ளதைப் பெருமையாகவே கருதுகிறார் கள். திசையன்விளைக்கு அருகே உள்ள இட்டமொழி என்னும் சிற்றூரைச் சேர்ந்த திரு. ஆதி நாராயணன் என்பவர் ''நாங்கள் வழக்கமாகச் செய்கின்ற பனை மரம் ஏறும் தொழிலைவிட இதில் வேலைவாய்ப்பு உறுதியாக இருப் பதால் இத்தொழிலில் நாங்கள் மகிழ்ச்சியோடு ஈடுபடுகிறோம்; மேலும் பனைமரம் ஏறுகிற தொழிலில் ஆண்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்பு உண்டு. ஆனால் இத்திட்டத்தில் எங்கள் குடும்பப் பெண்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது'' என முக மகிழ்ச்சியோடு கூறுவதைக் கேட் கும் நாமும் அகமகிழ்ச்சியடைகி றோம்.

அதே பகுதியில் உள்ள மற்றொரு சிற்றூரான மாதை யன்குளத்தைச் சேர்ந்த திரு. பச் சைமால் என்பவர் தன் குடும்பத் தைச் சேர்ந்த 6 ஆண்களுக்கும், 3 பெண்களுக்கும் ஆக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 பேர் களுக்கு இத்திட்டத்தினால் வேலை வாய்ப்புக் கிடைத்து வரு வதாகச் சொல்கிறார். மக்கள் திட்டமே இது என்பதை இவர் களின் கூற்று உறுதி செய்கிறது அல்லவா!

**'தாவரத் தடையங்கள்' என்று சொல்லப்படும் மூன்று தாவர வரிசைகள்.**
**(படத்தில் இடது பக்க ஓரமாக காணப்படுகின்றன)**



**இர. அண்ணாத்துரை,**
**மாவட்ட ஆட்சித் தலைவரின் தனி உதவியாளர்,**
**(செய்தி-மக்கள் தொடர்பு)**
**திருநெல்வேலி மாவட்டம்.**





# எட்டையபுரத்து இரட்டையர்

ஒரே பிரசவத்தில் தோன்றுகின்ற இரண்டு சகோதரக் குழந்தைகளை இரட்டையர் என்று அழைக்கிறோம். சகோதரர்களாக இல்லாவிட்டாலும் கூட- உருவ அமைப்பில் - உயர் திறமையில் ஒருவரைப் போல மற்றொருவர் விளங்கினால் அவர்கள் இருவரையும் இரட்டையர் என்று பெருமைப்படுத்தும் வழக்கம் நம்மிடம் இருந்து வருகிறது.

தமிழ் இலக்கியப் பரப்பில் இருவேறு புலவர்களால் உருவாக்கப் பெற்ற சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று வழங்கப்படுகின்றன.

வெண்பாவையும் கலித்துறையையும் அந்தாதியாய்க் கொண்ட இருபது செய்யுட்களால் முடிவுறும் நூலுக்கு 'இரட்டை மணிமாலை' என்ற பெயரைத் தமிழ் இலக்கணம் சூட்டியிருக்கிறது.


ஆகவே, சென்ற நூற்றாண்டில் நெல்லை மாவட்டத்தில் எட்டையபுரத்தில் வாழ்ந்த எட்டப்ப பிள்ளை - முத்தம்மாள் தம்பதியரின் மகனான நாவலர் சோமசுந்தர பாரதியாரும், சின்னச்சாமி அய்யர் -லட்சுமி அம்மாள் தம்பதியரின் மகனான கவிஞர் சுப்ரமணிய பாரதியாரும் இரட்டையர் என்று வழங்கப்படுவது நியாயமானதே!

நாவலருக்கும் கவிஞருக்கும் ஏராளமான ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இருவரும் பிள்ளைப் பருவத்திலிருந்தே நண்பர்கள். 'டேய் சுப்பு' என்று கவிஞரை அழைப்பார் நாவலர்; 'டேய் சோமு' என்று நாவலரை அழைப்பார் கவிஞர். இருவரும் எட்டையபுரத்துப் பள்ளியிலே பயின்றார்கள். எட்டையபுரத்து வீதிகளிலே ஓடி மகிழ்ந்தார்கள்.

ஆங்கிலக் கல்வி கற்பது பெருமையாகக் கருதப்பட்டு வந்த அந்தக் காலத்தில் நாவலரும் கவிஞரும் தமிழைக் கற்பதில் தணியாத ஆர்வம் கொண்டிருந்தார்கள். இருவரின் தந்தையர்களும் சமஸ்தானத்தில் பணிபுரிந்து வந்தார்கள் என்பது மட்டுமல்ல இருவரும் தங்கள் பிள்ளைகள் தமிழ் கற்பதை ஆதரிக்கவில்லை. எனவே நாவலரும் கவிஞரும் பெற்றோருக்குத் தெரியாத விதத்தில் தமிழ் இலக்கிய நூல்களைப் படிப்பதும்- படித்த நூல்களை வீட்டுக்குக் கொண்டு வருவதற்கு அஞ் சி- சிவன்கோவில் காளை வாகனத்தின் உள்ளே வைத்துவிட்டு வருவதும் வழக்கமான நிகழ்ச்சிகள். கோவிலில் அவ்வப்போது நடைபெறும் இராமாயண விரிவுரையையும் - மகாபாரதச் சொற்பொழிவையும் கேட்பது இருவருக்கும் பிடித்தமான செயல்கள்.

எட்டையபுரத்தில் உயர் நிலைப் பள்ளி இல்லாத காரணத்தால் இருவரும் உயர் கல்வி கற்க நெல்லை நகரத்துக்குச் சென்றார்கள். நாவலர் பாரதி, சர்ச் மிஷன் உயர் நிலைப் பள்ளியில் சேர்ந்தார். பின்னர் அதனுடன் இணைந்திருந்த கல்லூரியில் சேர்ந்து பட்டப் படிப்பு வகுப்பில் பயின்றார். கவிஞர் பாரதி இந்துக் கல்லூரியில் பயின்று- படிப்பு முற்றுப் பெறாமல் வெளி வந்து, பிற்காலத்தில்,

'நெல்லை யூர்சென்றவ்
ஆணர் கலைத்திறன்
நேரு மாறெனை
எந்தை பணித்தனன்''
என்றும்
''செலவு தந்தைக்கோ
ராயிரஞ் சென்றது
தீதெ னக்குப்பல்
லாயிரஞ் சேர்ந்தன.
நலமொ ரெட்டுணை
யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரங்
கோயிலிற் சொல்லுவேன்''
என்றும் கவிதை பாடினார்.



நாவலர் சோமசுந்தர பாரதியாரின் நூறாவது பிறந்த நாள் விழா 27.7.79 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் வணக்கத்திற்குரிய மதுரை மாநகராட்சி மேயர் திரு எஸ். முத்து அவர்களின் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பல அறிஞர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நாவலரும் கவிஞரும் நெல்லையில் கல்வி கற்று வந்த காலத்தில், யாழ்ப்பாணத்தைச் சார்ந்த புலவர் ஒருவர் நெல்லைக்கு வந்திருந்தார். அவரைக் காண்பதற்கு நெல்லையில் உள்ள புல புலவர்கள் அணி திரண்டு சென்றிருந்தனர். அந்தக் கூட்டத்தில் நாவலரும் கவிஞரும் அங்கம் பெற்றிருந்தனர்.

யாழ்ப்பாணத்துப் புலவர், தம்மைக் காண வந்திருந்த புலவர்களிடம் அளவளாவியவாறே-ஓர் ஈற்றடியைக் கொடுத்து-செய்யுளை அமைக்கும்படி கூறினார். அங்கு வந்திருந்த புலவர்கள் அனைவரும் முயற்சியில் இறங்கினார்கள். கவிஞரும் நாவலரும் முயன்று சில நிமிடங்களில் பாடல்களை இயற்றி, யாழ்ப்பாணத்துப் புலவரிடம் வழங்கினர். புலவர், அனைவரின் செய்யுட்களையும் படித்துப் பார்த்தார்; கவிஞரின் செய்யுளும் நாவலரின் செய்யுளும் தான் அத்தனை செய்யுட்களிலும் சிறந்தவையாக - மேம்பட்டவையாக விளங்கின. யாழ்ப்பாணப் புலவர் வியப்படைந்தார்; பெரு மகிழ்வும் பெற்றார்! 'நாவலருக்கும் கவிஞருக்கும் கலை மகளின் அருள் பரிபூரணமாகக் கிடைத்திருக்கிறது' என்று அவர் கருதினார்; அந்தக் கருத்தின் விளைவாக - கலைமகளைக் குறிக்கும் 'பாரதி' என்னும் சிறப்புப் பெயரை ஒரே நேரத்தில் இருவருக்கும் சூட்டினார். அன்று முதல் சோமசுந்தரம் சோமசுந்தர பாரதி ஆனார்.

நாவலரும் கவிஞரும் நாட்டுப் பற்று மிக்கவர்களாக விளங்கினார்கள். நாட்டுப் பற்றுடைய நாவலர் மொழிப்போர் வீரராக மாறினார். நாட்டு விடுதலையைக் கண்ணால் பார்த்து அதன் பின் பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தார். கவிஞர், விடுதலைப் போர் வீரராகவே வாழ்ந்து - விடுதலையை மனக் கண்ணால் 'தரிசித்து' 'ஆனந்த சுதந்தரம் அடைந்து விட்டோம்' என்று பள்ளுப் பாடி விட்டு, விடுதலை கிடைப்பதற்கு முன்பே மறைந்துவிட்டார்.

நாவலர் பாரதி தமது வழக்கறிஞர் பணியை நெல்லையிலே துவக்கினாலும் பிற்காலத்தில் சங்கம் வைத்து மொழிவளர்த்த மதுரைத் திருநகரில் வந்து வாழ்க்கை நடத்தினார். கவிஞர் பாரதியும் தமது தொழிலை முன்னிட்டு, மதுரை நகருக்கு வந்து சிறிது காலம் வாழ்ந்தார்.

கவிஞர் பாரதி, மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் சிறிது காலம் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். நாவலர் பாரதி, வழக்கறிஞர் தொழிலை விட்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பல்லாண்டு தமிழ்த் துறைத் தலைவராகப் பணி புரிந்தார்.

அண்ணல் காந்தியடிகளிடம் இருவருக்கும் அளவில்லாத பற்று உண்டு. இருவரும் அண்ணலைச் சந்தித்து உரையாடியிருக்கின்றனர்.

ஒருமுறை சென்னைக்கு வந்திருந்த காந்தியடிகளைச் சந்தித்து, 'மாலையில் நான் நடத்தும் பொதுக் கூட்டத்திற்கு வர முடியுமா?'' என்று கவிஞர் பாரதி கேட்க - ''ஏற்கெனவே பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஒப்புக் கொண்டு விட்டதால், வர இயலவில்லை'' என்று காந்தியடிகள் கூற - ஏமாற்றத்துடன் திரும்பினார் கவிஞர் பாரதி. ஆனால், நாவலர் பாரதி, சென்னைக்கு வந்திருந்த காந்தியடிகளைச் சந்தித்து, தூத்துக்குடியில் நடைபெறும் பொதுக்கூட்டத்திற்கு அழைத்துச் செல்லும் வாய்ப்பைப் பெற்றார்.

சாதியின் பெயர் சொல்லி மக்கள் ஒருவரையொருவர் தாழ்த்திக் கொள்வதை இருவரும் வெறுத்தார்கள். தாழ்த்தப்பட்டோர், நல்வாழ்வு பெற வேண்டும் என்று, இருவரும் துடித்தார்கள்.

அரிசன நண்பர் ஒருவருக்குப் பூணூல் அணிவித்து அவரை வேதியராக்கி மனமகிழ்ந்தார் கவிஞர் பாரதி. மதுரை மாவட்டத்தில் உசிலங்குளம் என்னும் ஊரில் அரிசனங்களுக்குப் பள்ளிக்கூடம் ஒன்றை உருவாக்கி மனமகிழ்ந்தார், நாவலர் பாரதி.

பிறரைப் பாராட்டும் இயல்பு நாவலரிடம் உண்டு; சுப்பிரமணிய பாரதியைப் பாராட்டியிருக்கிறார்; அண்ணல் காந்தியடிகளைப் பாராட்டியிருக்கிறார். சமூகப் புரட்சி செய்த சண்ட மாருதக் கவிஞராம் பாவேந்தர் பாரதிதாசனைப் பாராட்டியிருக்கிறார். சீர்திருத்தத்தை எடுத்துரைத்த தந்தை பெரியாரைப் பாராட்டியிருக்கிறார்; தமது மாணவர்களைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்.

கவிஞர் பாரதியும் பிறரைப் பாராட்டுவதில் பேரின்பம் கண்டிருக்கிறார். ''வாழ்க நீ எம்மான்'' என்று அண்ணல் காந்தியை வாழ்த்திப் பாடியிருக்கிறார். 'எமது பரத நாட்டுப் பெண் பல்லார் வயிற்றினுமந் நவுரோஜி போற் புதல்வர் பிறந்து வாழ்க'' என முழங்கி, தாதாபாய் நவுரோஜியை வாழ்த்தியிருக்கிறார்; ''வாழ்க திலகன் நாமம்! வாழ்க! வாழ்கவே'' என்று பால கங்காதர திலகரைப் பாராட்டியிருக்கிறார்.

கவிதை உலகில் ஒளி வீசிய கவிஞர் பாரதி, உரைநடை எழுதும் ஆற்றலும் பெற்றிருந்தார். உரைநடையில் மாபெரும் வெற்றி வீரராக விளங்கிய நாவலர் பாரதி கவிதை எழுதும் திறமையும் கை வரப் பெற்றிருந்தார். கவிஞர் பாரதியின் கவி நடையில் தமிழ்க் கொதிப்புக் காணப்பட்டது. நாவலர் பாரதியின் உரைநடையிலும் அதே கொதிப்பைக் காணமுடியும். நாவலர் பாரதி தமிழை அகலமாக வளர்த்தார். கவிஞர் பாரதி தமிழை ஆழமாக வளர்த்தார். எட்டைய புரத்தைச் சேர்ந்த இந்த இரட்டையரால் தமிழ் வளர்ந்தது - செழித்தது- உலகப் புகழ் அடைந்தது.

—தமிழ்ப்பித்தன்


# வேண்டும்போது மட்டும் குழந்தை பெறவேண்டும் பிறப்பது பிறக்கட்டும் என்றிருத்தல் பேதமை

எதிர்பாராத வகையில் மனைவி தாய்மையுற்றால் நீங்கள் போட்டத் திட்டங்கள் யாவும் நடக்காது போகலாம். பிறர் விஷயங்களில் இப்படி நடந்திருக்கிறது. இதே தவறை நீங்களும் செய்ய வேண்டாம்!

**நினைவிருக்கட்டும்! வெள்ளம் வரும் முன்னே அணைபோட வேண்டும். நடப்பது நடக்கட்டும் என்றிருக்கக் கூடாது.**

## நிரோத் உபயோகிக்கவும்

ஆண்களுக்கானது; மிகவும் எளிதானது; சுலபமாகப் பயன்படுத்தலாம். மருந்துக் கடைகளிலும் குடும்ப நல நிலையங்களிலும் கிடைக்கின்றன.




**நிரோத்**

எல்லா வகையிலும் சிறந்தது

**இன்பமான இல்லற வாழ்வை விரும்பும் தம்பதிகளுக்கு உதவும் நம்பகமான சாதனம்**

davp-79/107

# கலைவாணர் கிருஷ்ணன்

முருகு. சுப்பரமணியன்

ஆகஸ்டு 30 கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் அவர்களின் நினைவு நாள். சிரிக்க வைத்துச் சிந்திக்க வைத்த அப்பெருமகனாரை நினைவுகூரும் வகையில் 'பொன்னி' ஆசிரியர், திரு முருகு சுப்பிரமணியன் 'பொன்னி' பொங்கல் மலரில் (1952) எழுதிய பேட்டிக் கட்டுரையின் சில பகுதிகளை இங்கே வெளியிடுகிறோம்.

''சமீபத்தில் நாகர்கோவில் டென்னிஸ் கிளப்பில் ரஷ்யா போய் வந்ததற்காக எனக்குப் பிரமாதமான வரவேற்பு அளித்தார்கள். அந்தக் கிளப்பில் செல்வர் வீட்டுப் பிள்ளைகள் அனைவரும் மெம்பர்கள். அந்தக் கூட்டத்தில் என்னை அந்தக் கிளப்பின் நிரந்தரத் தலைவராக இருக்கும்படிக் கேட்டுக் கொண்டார்கள். எனக்குச் சிரிப்புப் பொறுக்க முடியவில்லை. ஏனென்றால் அதே டென்னிஸ் கிளப்பில் நான் சிறுவனாயிருக்கும்போது பந்து பொறுக்கிப் போட்டு மாதம் மூன்று ரூபாய் சம்பளம் வாங்கியிருக்கிறேன். இன்று அதே கிளப்புக்கு என்னை நிரந்தரத் தலைவராக வரவேண்டுமென்று கேட்டால் எனக்குப் பெருமைதானே!

''இப்பொழுதுள்ள பிள்ளைகளுக்கு என்னுடைய பழைய கதை தெரியாது. ஆனால், எனக்குச் சம்பளம் கொடுத்த மானேஜர் மட்டும் இன்றும் மானேஜராகவே அங்கு இருக்கிறார். இதை அந்தக் கூட்டத்தில் சொன்னேன். பரம்பரையாகப் பணக்காரனாக இருந்துதான் ஒருவன் முன்னுக்கு வர முடியும், அறிவாளியாக முடியும் என்பது தப்பு. முயற்சி மெய் வருந்தக் கூலிதரும் என்பது ஒருக்காலும் பொய்யல்ல. ஏழை என்ற எண்ணத்தை அகற்றிவிட்டு, விடாது முயற்சித்தால் யாரும் மேல் நிலையடையலாம் என்பது என் கருத்து. என் வாழ்க்கையே இந்த உண்மைக்குச் சரியான சான்று''.

—கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களைப் பேட்டி கண்டபோது. அவர் குறிப்பிட்ட செய்திதான் மேலே தந்திருப்பது.

''இந்தத் தேர்தலில் யாருக்கு உங்கள் வாக்கை அளிக்கப்போகிறீர்கள்?''

''பெயரைக் கேட்கிறீர்களா?'

''இல்லை.....குறிப்பாக''

பேட்டி தொடர்ந்தது.

''ரொம்ப எக்கச் சக்கமான கேள்வி. இந்தக் கேள்விக்கு நான் இப்பொழுது பதில் சொல்ல முடியாது, சொல்லக்கூடாது''

''தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளில் உங்களுக்குப் பிடித்தமான கட்சி எது?''

''இந்தக் கேள்விக்கும் நான் பதில் சொல்லக்கூடாது. இருந்தாலும் பரவாயில்லை. சந்தேக



மில்லாமல் நான் ஆதரிப்பது, விரும்புவது திராவிடக் கட்சி தான்.''

''காங்கிரஸ் கூட்டங்களுக்கும் தாங்கள் செல்வதாகத் தெரிகிறதே! விளக்கம் தருவீர்களா?''

''முரண்பாடுதான்! என்றாலும் என்னுடைய நடுநிலையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நான் ஒரு கட்சிக்கே ஆளாகிவிட்டால் மற்ற கட்சியிலுள்ளவர்கள் நான் சொல்வது என்னவென்றே கவனிக்கமாட்டார்கள். யாரையும் நான் இழக்க விரும்பவில்லை. எனவேதான் எல்லாக் கட்சிகளின் கூட்டங்களிலும், மாநாடுகளிலும் கலந்துகொண்டு எனக்கு இட்ட பணியை மட்டும் நிறைவேற்றி வருகிறேன். இத்தகைய பொது நிலையை எல்லாத் தலைவர்களும் வரவேற்கிறார்கள். மற்றொன்று... எனக்கென்று தனிக்கொள்கை உண்டு. எந்தக் கட்சிக் கொள்கையும் எனக்குப் பூரணமாகப் பிடிப்பதில்லை''

''உங்கள் கொள்கை என்ன?''

''ஆதிமுதல் 'குடியரசு'', பாவலர் நடத்திய 'தேசபந்து' இ ர ண் டு பத்திரிகைகளையும் நான் படித்து வந்தேன். அப்போது நான் சிறுவன்; நாடகக் கம்பெனியில் வேலை.- ப க் தி மார்க்கத்திற்கும் நாஸ்திகத்திற்கும் உள்ள வேறுபாடுகளை நான் அப்போது நன்றாகத் தெரிந்து கொண்டேன். படித்து ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தேன்''.

''உங்கள் முடிவு என்ன?''

''சுயமரியாதைக் கொள்கை நம் நாட்டுக்குத் தேவை என்பது தான் அந்த முடிவு''

''அதே நேரம் 'காந்திபக்தன்' என்றும் சொல்கிறீர்களே..?''

''ஆம். நான் காந்தி பக்தன் தான்! கடந்த 33 வருஷமாகக் கதர் கட்டுகிறேன். காந்தியாரின் தொண்டுகளை நான் மிகவும் போற்றுகிறேன். இந்தியாவைக் காப்பாற்றக் காந்தியமும், தமிழ் நாட்டைக் காக்கச் சுயமரியாதையும் வேண்டும். என் கதை ஒவ்வொன்றிலும் இதே அடிப்படை தான்! இந்தக் கொள்கையிலிருந்து நான் சிறிதும் மாறவில்லை. அன்று முதல் இன்றுவரை அதே கொள்கைதான்!''

''தங்கள் ரஷ்யப் பயணம் பற்றிச் சுருக்கமான விளக்கம்''

"என் வாழ்நாளில் ரஷ்யா போய் வந்தது என் பாக்கியமென்றே சொல்லுவேன். காலேஜ் புரொபசருக்கும் ஆரம்பக் கல்வி பயிலும் மாணவனுக்கும் உள்ள வித்தியாசம் தான் நம் நாட்டிற்கும் ரஷ்யாவிற்கும் உள்ள வித்தியாசம். நாம் இன்னும் எவ்வளவோ முன்னேற வேண்டும்.''

''தாங்கள் இதுவரை எத்தனை படங்களில் நடித்திருக்கிறீர்கள்?''

''92 படங்களில் நடித்திருக்கிறேன். 93-வது படம் 'அமரகவி' படப்பிடிப்பு நடக்கிறது''.

''தாங்கள் நடித்த முதல் படம்?''

''சதிலீலாவதி'' -முதல் படமென்றாலும் அந்தப் படத்திற்கும் என் சம்பந்தப்பட்டவரையில் கதை, டைரக்ஷன், சீனரியோ எல்லாம் சாட்சாத் நான்தான்!''

'' இதற்குக் காரணம் அனுபவமா?''

''இல்லை. அசாத்தியமான தைரியம். மற்றவர்களெல்லாம் மைக்கைக் கண்டால் மிரளுவார்கள். 'சவுண்டு எப்படிப் பதிவாகுமோ? ' -'உரத்துப் பேசினால் என்ன?' இப்படி அடியெடுக்கும்போது ஆயிரம் சந்தேகப்பட்டுக் கொண்டு நடிப்பார்கள். நான் தனி-என் விருப்பப்படி சரியோ, தவறோ செயலில் காட்டிவிடுவேன்''

''தங்கள் வெற்றிக்கு இது மட்டும் தான் காரணமா?''

''இன்னும் எத்தனையோ காரணங்கள் உண்டு. எனக்குப் பேர் வேணும், புகழ் வேணும், பணம் வேணும் என்ற ஆசை இல்லை. பேர், புகழ், பணம் எல்லாம் சேர்ந்து வரவேண்டுமென்கிற பேராசையுமில்லை. தப்பிதம் செ ய்கிறோமோ என்ற அச்சமும் இல்லை. அதைச் செய்ய வேண்டும், இதைச் செய்ய வேண்டும் என்று ஒன்றும் செய்யாமல் மனக்கோட்டை கட்டுகிற வழக்கமுமில்லை. மேலும் இதுவரை என்ன சாதித்திருக்கிறோம் என்று கணக்குப் பார்ப்பதுமில்லை.

"உதாரணம் ஒன்று கேளுங்கள். மேட்டூர் அணைக்கட்டில் ஒரு புறத்தில் மேலே ஏறுவதற்கு உயரமான இரும்பு ஏணிப்படிகள் வரிசைவரிசையாக இருக்கின்றன. அதில் ஒருவன் ஏறுகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். பாதிவரை ஏறிவிட்டுத் திரும்பி 'நாம் எவ்வளவு தூரம் வந்திருக்கிறோம்?'' என்று அவன் கீழே பார்த்தால் கண்டிப்பாக அவனால் மேலே ஒரு படிகூட ஏற முடியாது. இறங்க வேண்டியது தான். இது மாதிரிதான் வாழ்க்கையிலும்! என்ன நடந்தது என்று பார்க்க ஆரம்பித்துவிட்டால் ஒருக்காலும் முன்னேறமுடியாது.''

''தாங்கள் எதுவரை படித்திருக்கிறீர்கள்?''

''ஐந்தாவது வகுப்புவரையில் மலையாளம் படித்திருக்கிறேன். மேலும் படிக்கப் பணம் இல்லை. வழியுமில்லை. நிறுத்திவிட்டேன். கண்டது கற்கப் பண்டிதனாவான் என்பது என்னைப் பொறுத்த வரையில் நூற்றுக்கு நூறு உண்மை''

கலைவாணருக்கு இருமல் தொந்தரவு அதிகமாகவே பேட்டியை அரைகுறையாகவே முடித்துக் கொண்டோம். மிகக் குறைந்த நேரமே அவர்களோடு நாங்கள் பேசியிருப்பினும், அவர்கள்தம் மன இயல்பை நாங்கள் நன்கு உணர முடிந்தது. ஏழைக்கு இரங்கும் பண்பு கலைவாணரின் உயிர்நாடியான குணம் என்பதைத் தெரிந்து கொண்டோம்.

'தமிழ்ப் பெரியார்கள்' என்று மறைந்த அறிஞர் வ.ரா. ஒரு நூல் எழுதியிருக்கிறார். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களையும் அப்பெரியார்களுள் ஒருவராகக் காட்டி விளக்கம் தந்திருக்கிறார்.

என்.எஸ்.கே. சினிமா நடிகர் மட்டுமல்ல; அத்துறையில், பல ஆண்டுகள் தொடர்ந்து புகழ் மங்காமல் மக்கள் ஆதரவைப் பெற்று வரும் பெருமை மட்டுமல்ல அவரைச் சேர்ந்திருப்பது, தமிழர் பொது வாழ்விலேயே குறிப்பிடத்தக்க 'பெரியவராகக்' கலைவாணர் இடம் பெற்றுவிட்டதை யாரும் மறுக்க முடியாது.

எக்கருத்தைப் பற்றியும் அவர் கருத்தை யறியவும், எந்தப் பொது நிகழ்ச்சியிலும் அவருக்குப் பங்கு தரவும் தமிழகம் விருமபுகிறது. பெருந்திரளான கூட்டம் அவரைக் காணக் கூடுவதும் இயற்கையாகி விட்டது. அவர் நடிப்பில், சொல்லில், பாட்டில் நகைச்சுவையைக் கண்டு உளம் மகிழும் தமிழ்மக்கள் பல்லாயிரவர்!

சினிமாத் துறையில் சீர்திருத்தத்தை விளைத்து, பலத்த எதிர்ப்பினிடையே வெற்றிகண்டு, எதிர்ப்புக்குமேல் நிற்கிறார் என்.எஸ்.கே; காலட்சேபம், வில்லுப்பாட்டு முதலிய நிகழ்ச்சிகளிலும் புதுமை நடமிடச் செய்தவர் அவர்தான்! தமிழகத்தில் நாம் காணும் மறுமலர்ச்சிக்கும் சீர்திருத்த ஆர்வத்திற்கும் கலைவாணர் ஓரளவுக்குக் காரணமென்பதை யாரும் ஒப்புக்கொள்ளத்தான் செய்வர். சிரிக்க வைத்து மக்களைச் சிந்திக்க வைக்கும் கலைவாணரும் மதுரம் அம்மையாரும் தமிழகத்திற்குத் தங்கள் கலைப்பணியின் மூலம் மேலும் பல புதுமைகளை வழங்குவார்களென எதிர்பார்ப்போமாக!

—1952 பொன்னி பொங்கல் மலரிலிருந்து]



# தமிழரின் தொன்மைப் பெருமைகள்

இப்போது நம்முடைய தமிழ்நாடு பதினான்கு மாவட்ட அளவில் சுருங்கிக் கிடக்கிறது. சில நூற்றாண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாடு, கேரள நாட்டையும், ஆந்திர நாட்டின் பெரும் பகுதியையும் கொண்டிருந்தது.

சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தொல்காப்பியத்துக்குப் பாயிரம் பாடிய சங்ககாலப் பெரும்புலவர் பனம்பாரனார், ''வட வேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத்து'' என்று தமிழ்நாட்டின் எல்லை, வடக்கே வேங்கடமலை வரை விரிந்து கிடந்ததாகக் குறிக்கிறார்.

அவர் காலத்துக்கும் முன்னால் தமிழ்நாட்டின் வடக்கு எல்லை, விந்தியம் வரை விரிந்து இருந்தது என்றும் அதற்கு அப்பாலும் பரவி இருந்தது என்றும் வரலாற்றுப் பேரறிஞர்களும் ஆய்வாளர்களும் கூறுகிறார்கள். ''வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்'' என்று பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது.

தமிழ்நாட்டின் தெற்கு எல்லையாக இன்று இருக்கும் குமரி இப்போது ஒரு முனையாக இருக்கிறது. பழந்தமிழ் நூல்களில் இது ஓர் ஆற்றின் பெயராகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆற்றிற்குத் தெற்கே 'பஃறுளி' என்ற பெயருடைய ஒரு பெருநதியும் ஓடியது எனப் பழைய நூல்கள் கூறுகின்றன.

''தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்'' என்றும் ''நெடியோன் நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே ''என்றும் சங்கப் பாடல்களில் காணக்கிடக்கின்றன. ''பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்து குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள'' என்று சிலப்பதிகாரமும் கூறுகிறது.

இந்த ஆறுகளால் வளம்பெற்ற செழிப்பான பெரிய நிலப்பரப்பே



காந்தியச் செல்வர்

**திரு. நா. மகாலிங்கம்**

பழந்தமிழ் நாட்டின் தெற்குப் பகுதி. இப்பகுதி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடலால் கொள்ளப்பட்டது. இப்போதுள்ள 'இந்துமாக்கடல்' என்னும் நீர்ப்பரப்பு, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நிலப்பரப்பாக இருந்தது.

இந்த நிலப்பரப்புதான் தமிழ் நூல்களில் வரும் குமரி நாடு, பழந்தமிழ் நாட்டின் தென்பகுதி. இதையே லெமூரியாக் கண்டம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**தமிழ்நாட்டின் வரலாறு :**

பழந்தமிழ் நாட்டில், இந்தப் பகுதியிலிருந்துதான் மக்கள் முதல் முதலில் தோன்றி உலகம் முழுவதும் சென்றிருக்கிறார்கள்.


சுமேரியா பாபிலோனியா, எகிப்து முதலிய இடங்களில் சென்று குடியேறியவர்கள் பழந்தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழர்கள். இந்த நாடுகளில் பேசப்படும் மொழிகளில் ஏராளமான தமிழ்ச் சொற்கள் கலந்திருக்கின்றன. இந்த நாடுகளில் உள்ள ஊர்கள் பலவற்றுக்குத் தமிழ்ப் பெயர்களே நிலவுகின்றன.

எகிப்தியர்கள் தங்கள் தாய்நாடு பாண்டிய நாடு என்று தங்கள் வரலாற்று நூலில் எழுதி வைத்திருக்கிறார்கள். சுமேரியர்கள் தங்கள் தாய்நாடு சோழநாடு என்று தங்கள் சரித்திர நூல்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முப்பத்திரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகள்வரை பழந்தமிழ் நாட்டின் தென்பகுதியான குமரி நாட்டை ஆண்ட அரசர்கள் பட்டியல், அங்கிருந்து தமிழ் வளர்த்த தமிழ்ச் சங்கங்களின் பட்டியல், அங்கு நடைபெற்ற சமுதாய நிகழ்ச்சிகளின் பட்டியல் முதலியவற்றையும் ''இராஜாவளி'', 'மகாவம்சம்' என்ற சிங்கள நாட்டு வரலாற்று நூல்களில் விரிவாகக் காணலாம்.

காலப்போக்கில் இந்தப் பகுதி கடலால் அழிந்து போயிருக்கிறது என்று ஆசிரியர் எர்னல்டு ஹெக்கல், ஸ்காட் எலியட், விஷர், எஸ்கார்வே, ஹெய்க்கல், சர் ஜான் ஈவன்ஸ், டபிள்யூ டபிள்யூ ஹண்டார், எட்வர்டு லான்சர் முதலிய வரலாற்று நூல் அறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சியில் கண்ட உண்மையை உலகுக்கு அறிவுறுத்தி இருக்கிறார்கள்.

'ஹிஸ்டரி ஆப் கிரியேஷன்' 'லாஸ்ட் லெமூரியா ஏ ஸ்டார்ட்லிங் புக்', 'ஆர்க்கியலாஜிகல் பைண்டிங் அண்டர் இண்டியன் ஓஷன்', 'ஹிஸ்டரி ஆப் இந்தியா' முதலிய நூல்களில் தமிழகத்தின் தொன்மையை மேலும் காணலாம்.



தென் இந்தியாவில் இருந்த மக்கள் தான் கடல் கடந்து தெற்கு ஐரோப்பா முதலியநாடுகளில் குடியேறி வாழத்தொடங்கி இருக்கிறார்கள். மெசபடோமியாவுக்கு மேற்கேயும் சென்று பிரிட்டிஷ் தீவுகளில் வாழத் தொடங்கியவர்களும் தென் இந்திய மக்களே என்று ஈராஸ் பாதிரியார் கருதுகிறார்.

பேராசிரியர் ரலே என்னும் வரலாற்றுப் பேரறிஞர் தமது 'உலக வரலாறு' என்ற நூலில் ''உலகிலேயே மனித வர்க்கம் தோன்றிய பூமி தென் இந்தியா தான்' என்று பல ஆதாரங்களுடன் மிக விரிவாக விளக்கி உள்ளார்.

பேராசிரியர் தோபிநார்டு என்ற ஆராய்ச்சியாளர் ''சௌத் இந்தியா'' என்ற தமது வரலாற்று ஆய்வு நூலில் 'உலக நிலப்பரப்பில் மிகப் பழமையானது, மூத்தது தென் இந்தியா தான்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

சர் ஜான் எட்வான்ஸ் என்னும் பேரறிஞர் தமது ''ஆர்ஜின் ஆப் மேன்'' என்ற நூலில் 'மனிதன் முதன் முதலில் தோன்றிய பூமியே தென் இந்தியாதான்' என்று தக்க சான்றுகளுடன் விளக்கமாகக் கூறி இருக்கிறார்.

இந்தத் தொன்மையான நிலப் பரப்பில் கடலால் அழிந்தது போக மீதி இருப்பதுதான் இப்போது நாம் வாழும் தமிழ்நாடு நமது தமிழ்நாட்டின் தொன்மையை எந்தக் கால அளவு கொண்டு கூறுவது? அது நாம் அறிந்திருக்கும் சரித்திரக் காலத்தையும் கடந்து நிற்பது. உலகம் பார்த்து வியக்கும் அளவிற்குத் தொன்மை வாய்ந்த தமிழ்நாட்டில் பிறந்தவர்கள் நாம் என்ற உண்மையைத் தமிழ்நாட்டில் பிறந்த ஒவ்வொருவரும் உணரும்படி செய்ய வேண்டும்.

**தமிழர் பண்பாடு**

பிற உயிர்களின் உணர்வை மதித்து அவைகளுக்கு உதவி புரிவதுதான் வாழும் முறை என்ற இலட்சியத்துடன் பழந்தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வாழ்க்கை முறைதான் தமிழ் மக்களின் செல்வமாக இருந்தது. இதுதான் தமிழ்ப் பண்பாடு. இந்தப் பண்பாட்டைப் பற்றித் தமிழ் இலக்கியங்களும் விரிவாகக் கூறுகின்றன.

சங்க இலக்கியங்களும் பழந்தமிழ் இலக்கணங்களும் இந்த நாகரிக வாழ்வைக் கவிதைகளாகவும் காட்சிகளாகவும் அற்புதமாக வடித்துக் காட்டுகின்றன.

தமிழ்நாட்டின் தென் பகுதியை ஆண்டு வந்தான் பாண்டியன். அவன் நாட்டின் பெரும் பகுதியைக் கடல் கொண்டு விட்டது. இதைக் கண்டு பாண்டிய மன்னன் சோர்ந்து போகவில்லை. தன் மக்களுக்கு உதவ முன்வந்து வடக்கே இருந்த சேர, சோழ நாடுகளின் நிலங்களின் சில பகுதிகளைத் தன் நாட்டுடன் சேர்த்துப் பாண்டிய நாட்டை விரிவுபடுத்தினான்.

இதனால் அப்பாண்டிய மன்னனுக்கு 'நிலம்தரு திருவின் நெடியோன்' என்ற புகழ்ப் பெயரும் ஏற்பட்டது. இந்நிகழ்ச்சியை ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய கலித்தொகை 'மலிதிரை ஊர்ந்து தன் மண் கடல் வவ்வலின், மெலிவு இன்றி மேற்சென்று, மேவார் நாடு இடம்பட, புலியொடு வில் நீக்கிப் புகழ் பொறித்த கிளர் கெண்டை' என்று குறிப்பிடுகிறது.

இவைகள் எல்லாம் பழந்தமிழர்களின் மன உறுதியையும், ஆண்மையினையும் விளக்கிக் காட்டுகின்றன. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று வாழ்ந்தவன் தமிழன். பழந்தமிழரின் பண்பாடுதான் உலகப் பண்பாடாக வளர்ந்திருக்கிறது.

**தமிழர் ஆட்சித் திறமை**

இந்த நாளில் செஞ்சிலுவைச் சங்கம், போரில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பு வீரர்களுக்கு உதவி புரிவது போல், அந்த நாள் தமிழ் மன்னர்கள் போரிடும் இருதரப்பு வீரர்களுக்கும் நடுநிலை தவறாமல் உதவிப் பணி புரிந்திருக்கிறார்கள்.

''ஈரைம்பதின்மரும்
பொருதுகளத்து ஒழிய
பெரும்சோற்று மிகுபதம்
வரையாது கொடுத்தோய்!''

என்று தமிழ் மன்னர்களின் பெருமையைச் சிறப்பித்துப் பாடியிருக்கிறார் முரஞ்சியூர் முடிநாக அரையர்.

பாரதப்போரில் ஈடுபட்ட இருதரப்புப் போர் வீரர்களுக்கும் தமிழ்மன்னன் சோறும், மருந்து முதலிய உதவிகளையும் செய்து அவர்கள் துன்பங்களைத் துடைத்திருக்கிறான். இவ்வாறு தமிழ் மன்னன் தொண்டாற்றுவதற்குப் பாரதப் போரில் ஈடுபட்ட இருதரப்பு மன்னர்களின் நம்பிக்கையைப் பெற்றிருந்தால்தான் முடியும். அத்துடன் தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த நாளில் தமிழகத்தின் எல்லை பாரதப்போர் நடைபெற்ற குருட்சேத்திரம் வரை பரவி இருந்தது என்று எண்ணுவதற்கும் இந்த நிகழ்ச்சி இடம் தருகிறது.

குஜராத்திற்கு அப்பாலும் தமிழகம் பரவியிருந்தது என்று

பேராசிரியர் ஔவை துரைசாமி அவர்கள் குஜராத் மாநிலத்தில் கிடைத்த கல்வெட்டுகளில் இருந்து நில உரிமை ஆதாரம் காட்டி நிறுவி இருக்கிறார்.

அரசர்களில் பகை அரசர், நட்பு அரசர், நொதுமல் அரசர், நடுநிலை அரசர் என நான்கு வகையினர் உண்டு.

பாரதப் போரில் சோறும், மருத்துவ உதவிகளும் அளித்த உதியஞ்சேரலாதன் என்ற தமிழ் மன்னன் ,நடுநிலை அரசனாக இந்தியா முழுவதும் செல்வாக்குப் பெற்றிருந்தான் என்பதைத் தான் மேற்குறித்த நிகழ்ச்சி நமக்கு நினைவூட்டுகிறது.

**தமிழன் கண்ட வானநூல்**

தமிழ் மக்கள் வான ஆராய்ச்சியிலும் வல்லுநர்களாக இருந்திருக்கிறார்கள்.


சூரியனின் இயக்கத்தையும், அது செல்லும் பாதையையும் அந்தப் பாதையைச் சூழ்ந்த நட்சத்திரங்களையும், காற்று வீசுகின்ற திசையையும், உடம்பு நிலைத்திருக்காமல் அழிந்து கொண்டிருப்பதற்குரிய காரணத்தையும் தெளிவாக அளந்து அறிந்தவர்கள் போல எந்தச் சமயத்திலும் அவற்றின் தன்மைகளை விளக்கும் ஆற்றல் உள்ளவர்களாகத் தமிழ் மக்கள் இருந்திருக்கிறார்கள்.

''செஞ்ஞா யிற்றுச்
செலவும், அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச்
சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரி தருதிசையும்
வரிது நிலைஇய
காயமும் என்றிவை
சென்றனர் அறிந்தோர்
போல என்றும்
இனைத்து என்போரும்
உளரே

என்று தமிழ் மக்களின் பரந்த வான ஆராய்ச்சித் திறனை விவரிக்கிறது இந்தப் புறப்பாட்டு.


பழந்தமிழர்கள் வான சாத்திரத்தை நன்கு ஆராய்ந்து காலக் கணக்கை வகுக்கும் திறன் பெற்றிருந்தார்கள். எப்படியோ இந்தத் திறமைகள் மறைந்துபோய்க் கொண்டே வருகின்றன.

வான சாத்திரப்படி காலக் கணக்கை நிர்ணயித்துப் பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. அதையே இன்றும் பின்பற்றி வருகிறோம். அதனால் பல தவறுகள் ஏற்பட்டு வருகின்றன. திருத்



தப்படாத அந்தக் காலக் கணக்குப்படியே பஞ்சாங்கங்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அதை உடனே மாற்றி அமைக்க வேண்டும் என்று பேராசிரியர் கே. சீனிவாசராகவன் போன்ற வானநூல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

வானநூல் அறிஞர்கள் நமது பஞ்சாங்கத்தில் இருக்கும் தவறுகளை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இப்போது, தை மாதப் பிறப்பு, ஜனவரி மாதம் 14, அல்லது 15ஆம் தேதியில் வருகிறது. இந்த நாளை உத்தராயணத்தின் ஆரம்பம் என்கிறோம். இது தவறு. மார்கழி மாதம் ஏழாம் நாள், டிசம்பர் மாதம் 22ஆம் தேதி, கிறிஸ்துமஸ் விழாவுக்கு முன்னதாகவே உத்தராயணம் தொடங்கி வருகிறது. அப்போதே சூரியன் தனது தெற்கு எல்லையில் இருந்து வடக்கு நோக்கிச் செல்ல ஆரம்பித்து விடுகிறான்.



ஒரு காலத்தில் வானவீதியில் சூரியன் வடக்கு எல்லையில் வைகாசி மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் இருந்ததாக வேதத்தின் மூலமாக அறிகிறோம். அப்போது உத்தராயணம் மாசி மாதத்தில் பிறந்திருக்கும். ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னால் சூரியன் வானவீதியில் வடக்கு எல்லையில் சித்திரை மாத ஆரம்பத்தில் அசுவினி நட்சத்திரத்தில் இருந்தான். அப்போது உத்தராயணம் தைமாதப் பிறப்பன்று தொடங்கிற்று. அதற்குப் பிறகு வானசாத்திரிகள் காலக் கணக்கைச் சரியாக்க் கணித்து வெளியிடத் தவறிவிட்டார்கள்.

இதனால் உத்தராயணம், தட்சணாயணம் ஆகிய இரண்டு அயணங்களும் ஒவ்வொரு வருஷமும் 20 நிமிடங்கள் முந்தியே ஏற்பட்டு வந்தன. எழுபத்து இரண்டு வருஷங்களில் இந்த இரண்டு அயணங்களும் இருபத்து நான்குமணி- ஒரு முழுநாள் முந்தியே வரத் தொடங்கிவிட்டன

பஞ்சாங்கத்தில் இந்தத் தவறு ஏற்பட்டு, அது திருத்தப்படாமலே அநேக நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. இதனால் உத்தராயணம் தட்சணாயணம் முதலிய புண்ணிய காலங்கள் பஞ்சாங்கங்களில் குறிப்பிட்டிருப்பதற்கு 23 நாட்கள் முன்னதாகவே வந்துவிடுகின்றன. நாம் இந்த உண்மையை அறியாமையினால் அந்தப் புண்ணிய காலங்களை 23 நாட்களுக்குப் பிறகு கொண்டாடி வருகிறோம்.

இப்போது தமிழ்நாட்டில் இருபது வகையான பஞ்சாங்கங்கள் வெளிவருகின்றன. ஒவ்வொரு மதத் தலைவரும் ஒரு பஞ்சாங்கத்தை ஆதரித்து வருகிறார்கள். இவைகள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் இருக்கின்றன. இது சமுதாய வாழ்வுக்கு நல்லது அல்ல. தனிப்பட்டவர்கள் பஞ்சாங்கம் வெளிடுவதை உடனே தடைப்படுத்தி, மத்திய அரசின் வானவெளி ஆராய்ச்சிக் கேந்திரம் வெளியிடும் பஞ்சாங்கத்தைத்தான் நாடு முழுவதும் பின்பற்ற வேண்டுமென்று ஒரு சட்டமே இயற்ற வேண்டும்.

**வானசாத்திரம் காட்டும்**
**வரலாற்று உண்மை!**

இன்று விண்வெளி விஞ்ஞானம் வேகமாக வளர்ந்திருக்கிறது. விண்வெளி ஆராய்ச்சிக்கு வேண்டிய நவீன வசதிகள் கொண்ட விஞ்ஞானக் கூடங்கள் ஆங்காங்கே ஏற்பட்டிருக்கின்றன.



மனிதன் சந்திரனுக்கும், செவ்வாய்க்கும்கூடச் செல்கிறான்.

விஞ்ஞான வசதிகள் இல்லாத அந்த நாளிலேயே தமிழன் வான வெளி ஆராய்ச்சியில் வல்லுனனாக இருந்தான். **அன்று அவன் கண்ட வான ஆராய்ச்சியின் அடிப்படையில்தான் இன்று விண்வெளி விஞ்ஞானம் விரிவடைந்து கொண்டிருக்கிறது.**

சூரியன் பரணி நட்சத்திரத்திலிருந்து மீண்டும் பரணி நட்சத்திரத்துக்கு வந்து சேருவதற்கு 27,000 ஆண்டுகள் ஆகும் என்று அன்றைய வான சாத்திர நிபுணர்கள் கணக்கிட்டிருந்தார்கள்.

வானத்தில் உள்ள நட்சத்திரக் கூட்டங்களை 27 நட்சத்திர மண்டலங்களாகப் பிரித்துக்கொண்டு ஒரு நட்சத்திர மண்டலத்திலிருந்து இன்னொரு நட்சத்திர மண்டலத்துக்குச் சூரியன் நகர்வதற்கு 1000 ஆண்டுகள் ஆகின்றன என்று துலலியமாகக் கணக்கிட்டு இருக்கிறார்கள்.

இந்தக் கணக்கைக் கண்டு பிடித்த வானசாத்திரிகள் வைவஸ்வத மனு அரசவையில் அமைச்சர்களாக இருந்தவர்கள். இவர் காலம் கி.மு. 8756 என்று இப்போது கண்டு பிடித்திருக்கிறார்கள். சேக்கிழார் இவரைத் தொன்மனு என்று சிறப்பித்துப் பாடுகிறார்.


வானசாத்திரத்தின் இன்றைய நவீன விஞ்ஞான வசதிகளைக் கொண்டு ஆராயும்போது நமக்கு பல வரலாறறு உண்மைகள் தெரியவருகின்றன. ராமனும், கிருஷ்ணனும் இதிகாச-கற்பனை நாயகர்கள் அல்லர். இந்த நாட்டை ஆண்ட மன்னர்களில் மிக முக்கியமானவர்கள் என்பதையும் அறிய முடிகிறது. ராமர், கிருஷ்ணர் ஆகிய மன்னர்களின் காலத்தையும் கண்டு பிடிக்க முடிகிறது. கி.மு. 4400ஆம் ஆண்டில் ராமர் பிறந்திருக்கிறார். கி.மு. 3200 ஆம் ஆண்டில் கிருஷ்ணர் பிறந்திருக்கிறார். கி.மு. 1500 ஆம ஆண்டில் ஆதிசங்கரர் பிறந்திருக்கிறார் என்று தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

இதை எப்படித் தெரிந்து கொள்ள முடிகிறது? ராமாயணத்திலும், மகாபாரதத்திலும் ஆதிசங்கரர் வரலாற்று நூலிலும் அவர்கள் பிறந்தபோது சூரியன் எந்த நட்சத்திரத்தில் எந்தப் பாதத்தில் இருந்தான் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை வைத்து வான சாத்திரக் கணக்கைக் கொண்டு ஆராய்ந்தால் ராமர், கிருஷ்ணர் ஆதிசங்கரர் தோன்றிய காலத்தைத் திருத்தமாகக் கணக்கிட்டுக் காணமுடிகிறது.

ராமனும், கிருஷ்ணனும் ஆண்ட காலத்தில் அவர்கள், வழிபட்ட கடவுளாக சிவபெருமான் இருந்திருக்கிறார். காலத்தால் ராமனும், கிருஷ்ணனும் கடவுளானது போல ராமனும், கிருஷ்ணனும வாழ்ந்த காலத்தில் அவருக்கு முன் சக்கரவர்த்தியாக இருந்த சிவன், சிவபெருமானாக வழிபடப்பட்டிருக்கிறார்.

வீர சைவம் சிவனை ஒரு சித்தர் என்றே சொல்லுகிறது. சிவன் உண்டாக்கிய யோகத் துறைக்கு 'சிவயோகம்' என்றே பெயர். இது ஞானயோகத்தில் ஒரு முக்கியமான பகுதியாகக் கருதப்படுகிறது. சிவன் ஞானசித்தனாக இருந்ததுடன் மன்னராகவும் இருந்திருக்க வேண்டும். சக்கரவர்த்தி தட்சன் மகளைச் சிவன் திருமணம் புரிந்து கொண்டதிலிருந்து இதை உணரமுடிகிறது என்று வீரசைவ ஞானிகள் கருதுகிறார்கள். சிவன், சக்கரவர்த்தி தட்சன் மகளைத் திருமணம் செய்து கொண்ட காலத்தில் சூரியன் இந்த நட்சத்திரத்தில்- இந்த பாதத்தில் இருந்தான் என்று சமஸ்கிருத சிவபுராணத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆதைக் கொண்டு சிவன் திருமணம செய்து கொண்டது, கி.மு. 17000 ஆம் ஆண்டில் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.





நம் நாட்டில் சிவ வழிபாடு இருப்பது போலவே உலகின் பல பகுதிகளிலும் சிவ வழிபாடு இருந்திருக்கிறது என்பதை ஆராய்சசியாளர்கள் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தென் இந்தியாவில் இருந்த அறிஞர்கள் உலகம் முழுவதும் சென்றிருக்கிறார்கள். அவர்கள் சென்ற நாடுகளில் தங்கள் சிவ வழிபாட்டைப் பரப்பியிருக்கிறார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

அவ்வாறு பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் உலகின் பல்வேறு நாடுகளுக்கும் சென்ற நமது அறிஞர்களின் சந்ததியினர் கி.மு. 2500ஆம் ஆண்டு அளவில் மீண்டும் தமது தாய் நாட்டுக்குத் திரும்பினார்கள். இவர்கள் எல்லாம் நம் நாட்டின் வழித்தோன்றல்களே தவிர அவர்களை வேறு நாட்டினர் என்றும், வேறு பண்பாட்டை உடையவர்கள் என்றும் கூறுவது பிழையாகும். இது நமது நாட்டின் வரலாற்றையும் பாரம்பரியத்தையும புரிந்து கொள்ளாதவர்கள் பேசும் பேச்சாகும்.

வேறு நாடுகளுக்குச் சென்று அங்கு வாழ்ந்திருந்த நம் முன்னோர்களின் சந்ததியினர் மீண்டும் இந்தியாவிற்கு வந்தபோது அவர்கள் எந்த மொழியைப் பேசினார்கள், எப்படி எழுதினார்கள் என்பதையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

மொகஞ்சோதாரோவில் கண்டு பிடிக்கப்பட்ட எழுத்துக்கள்

அவர்கள் எழுதிவந்த எழுத்துக்களாய் இருக்கலாம. குஜராத்தில் பௌத்த மடாலயங்களின் அகழ் ஆராய்ச்சியில் கிடைத்த எழுத்துக்களும், ஈரான் தேசம் வரையிலும் பரவியிருந்ததையும் ஆராய்ச்சியாளர்கள் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். இதே எழுத்துக்கள் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் அகழ்ந்து எடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகளிலும் அவற்றில் இருந்த பொருள்களிலும் காணப்படுகின்றன.

இதை எல்லாம் பார்க்கும் போது தமிழ் மொழியின் எழுத்துக்கள்தான் அந்த நாளில் அவ்வாறு இருந்திருக்க வேண்டும் என்று ஆராய்ச்சி அறிஞர்கள் ஊகிக்கிறார்கள். இதை மொழி வல்லுனர்கள் மேலும் நன்கு ஆராயவேண்டும். தமிழ்ப் பண்பாட்டையும் அதன் தொன்மையையும் ஆராய்ச்சி செய்து நமது வரலாற்றைப் புதுப்பித்து நாமே எழுதவேண்டும்.

வான சாத்திரத்தின் துணையால் இராமனின் காலம் 6400 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். இராமனின் வரலாற்றைக் காவியமாக்கி இருக்கிறார் வான்மீகி. இராமனுக்கு இளவரசுப் பட்டம் கட்ட பாரத நாட்டு அரசர்களை எல்லாம் கூட்டி தசரதர் ஆலோசனை நடத்துகிறார் என்ற செய்தி இராமாயணத்தில் வருகிறது. இந்த ஆலோசனை சபையில் தமிழ் மன்னனான பாண்டியனும் கலந்து கொள்கிறான். அவனுடைய ஆலோசனையையும் தசரதர் கேட்கிறார்.

அனுமன் சீதையைத் தேடி இலங்கைக்குப் போகிறான். அவனுக்குத் தென் திசையில் செல்லும் வழிகள் பற்றி விளக்கும்போது ''தமிழ்நாட்டின் இயற்கை அழகிலும், தமிழின் இனிமையிலும், அதன் பண்பாட்டிலும் மயங்கி நின்று விடாதே'' என்று அவனை எச்சரித்து அனுப்பியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இராவணன் சபையில் கும்பகர்ணனும் இராவணனும் உரையாடுகிறார்கள். இந்த உரையாடலைப் பற்றி வான்மீகி குறிப்பிடும்போது ஓர் உண்மையைத் தெரிந்து கொள்ள முடிகிறது. இராவணனும் கும்பகர்ணனும் பேசிக்கொண்ட மொழி ''தமிழ்'' என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

இராமன் வாழ்ந்த காலத்திலேயே 6400 ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழ்ப் பண்பாடு மிக உயர்ந்த நிலையில் இருந்தது என்பதைப் பற்றி வான்மீகி பேச வேண்டுமானால், தமிழ்ப் பண்பாடு அந்த அளவிற்கு வளர எத்தனை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அது தோன்றி இருக்க வேண்டும்?

வான்மீகியின் காலத்திற்குமுன்னால் மூவாயிரம் ஆண்டுகளாவது ஆகியிருக்க வேண்டும் என்று ஆராய்ச்சி அறிஞர்கள் சொல்கிறார்கள். குறைந்தபட்சம் தமிழ்ப் பண்பாடு பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே சிறப்பாக இருந்திருக்க வேண்டும் என்பதை இதன் மூலமாகத் தெரிந்துகொள்ளலாம்.

நவீன வானசாத்திரம் நமது தமிழ்ப்பண்பாட்டின் தொன்மையை உலகம் தெரிந்துகொள்வதற்கு உதவி செய்திருக்கிறது.

வான சாத்திரத்தின் மூலமாகக் கணித்திருக்கும் இந்த உண்மைகளை யாரும் கற்பனை என்று ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

## பழந்தமிழரின் வாழ்வும், வணிகமும்

பழந்தமிழ் மக்களின் சிற்பக் கலையைப் பற்றி, கட்டிடக் கலையைப்பற்றி விவரித்துக் கூற வேண்டியதில்லை. தமிழ்நாட்டின் பழம்பெரும் கோயில்களும், பேரூர், கிருஷ்ணாபுரம், ஆவுடையார்கோயில் முதலிய ஊர்களில் இருக்கும் கோயில்களில் காணும் சிற்ப அற்புதங்களும், இன்னும் மாமல்லபுரம் முதலிய இடங்களில் உள்ள சிற்ப நுட்பங்களும் சித்தன்னவாசல், தஞ்சை பெரிய கோயில் முதலிய இடங்களில் உள்ள ஓவிய அற்புதங்களும். பழந்தமிழ் மக்கள் உபயோகித்த நகைகளும், தமிழகத்தின் சிற்ப வேலைப்பாடுகளுக்கும் தமிழ் மக்களின் கலை ஞானத்துக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.



உலகத்தின் பல பகுதிகளில் இருந்து வரும் சிற்ப, சித்திரக் கலை நிபுணர்கள் தமிழ் மக்களின் கலைத் திறமையைப் பார்த்து வியந்து போற்றுகிறார்கள். ''நெடுநிலை மாடத்து இடைநிலைத் திருந்துழி'' என்றும், ''நிரைநிலை மாடத்து அரமியம் ஏறி'' என்றும்''வேயா மாடமும்'' என்றும் இளங்கோ அடிகள் தமிழ் மக்கள் பல மாடிக் கட்டிடங்களைக் கட்டி அதில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி தமிழனின் கட்டடக் கலையைச் சிறப்பித்திருக்கிறார்.

தமிழ் மக்களின் தொழில் சிறப்பு, சிலப்பதிகாரம் இந்திர விழா எடுத்த காதையிலும,மணிமேகலை கச்சிமாநகர் புக்க காதையிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

பட்டினும், மயிரிலும், பருத்தி நூலிலும் கட்டு நுண்வினையைக் கற்றவர்கள் தமிழ் மக்கள்.

கிழியினும் கிடையினும் மிக தொழில் பல பெருக்கியவர்கள் தமிழர்கள். பாலாவி அன்ன'' மெல்லிய ஆடை நெய்தவர்கள் பண்டைய தமிழர்கள்.

தமிழ் மக்கள் அந்த நாளில் பிற நாட்டவருடன் செய்துவந்த வாணிபப் பெருக்கைப் பார்த்தால் தமிழ்நாட்டின் தொழில் முறையை நன்கு தெரிந்து கொள்ளலாம்.

அந்த நாளில் தமிழ் மக்கள் கப்பல் தொழிலில் சிறந்து விளங்கினார்கள். கடல் கடந்துசென்று வாணிகம் செய்தார்கள். காவல் பிரிதல், களத்தான் பிரிதல் என்று பழந்தமிழ் நூலில் இதற்குச் சான்றுகள் இருக்கின்றன.

''திரைகடல் ஓடியும் திரவியம் தேடு'' என்னும் பழமொழி தமிழர்களின் கடல் கடந்த வாணிபத்தைக் குறிக்கிறது.

கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே. பாபிலோன், எகிப்து, ரோம், கிரீஸ், சிரியா முதலிய நாடுகளுடன் தமிழ் மக்கள் சிறப்பாக வாணிபம் செய்து வந்ததை இக்காலத்து சரித்திர ஆசிரியாகள்



நன்கு ஆராய்ந்து பல நூல்கள் எழுதி வெளியிட்டிருக்கிறார்கள்.

அந்த நாடுகளுக்குத் தேக்கு, சந்தனம், தந்தம், தோகை, மிளகு, ஏலம் முதலிய பொருள்கள் தமிழ்நாட்டிலிருந்து அனுப்பப்பட்டன என்பதற்கு ஏராளமான அகச் சான்றுகள் பழந்தமிழ் நூல்களில் இருக்கின்றன.

யவன மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இருந்த உறவுகள் பற்றி நிறையச் செய்திகள் தெரிகின்றன. யவனம் முதலிய ஹிப்ரு சொற்கள் தமிழிலும், தோகை முதலிய தமிழ்ச் சொற்கள் ஹிப்ரு மொழியிலும் கலந்திருப்பதை ஆராய வேண்டும்.

**தமிழரின் கடவுள் கொள்கை:**

ஆதியில் மனிதன் இயற்கையைக் கண்டு திகைத்தான். விண்ணையும், மண்ணையும் பார்த்தான். இடியையும், மின்னலையும், மழையையும், ஆறுகளையும் பார்த்து வியந்தான். உலகத்து ஜீவராசிகள் அவனுக்குப் பயத்தையும், பிரமிப்பையும் அளித்தன.

இவற்றுக்கெல்லாம் காரணம் என்ன? இந்தப் பேருலக இயக்கத்திற்கு மூல ஆதாரம் என்ன? என்பதைப் பற்றி மனிதன் ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கினான். அதன் முடிவுதான் அவன் கடவுளைப் பற்றி எண்ணியது.

பழந்தமிழ் மக்கள் கடவுள் நம்பிக்கை உடையவர்களாக இருந்தாலும், அவர்கள் ஒரே தெய்வத்தை வழிபட்டு வந்தார்களா என்பது ஆராய்வதற்கு உரியது. தொல்காப்பியர் காலத்தில் தமிழர்கள் உருவ அடிப்படையில் பல தெய்வங்களை வழிபட்டு வந்தனர் என்பதற்குச் சில செய்திகள் அதில் இருக்கின்றன. அந்தக் காலத்தில் தெய்வங்கள் பற்றிய புராண வரலாறு எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை.

தொல்காப்பியத்துக்குப் பின் எழுந்த சங்க இலக்கியங்களில் தொல்காப்பியத்தில் காணப்படும் தெய்வங்களே பல வடிவங்களாகக் காட்சி அளிக்கின்றன.

திருவள்ளுவர் காலத்தில் ஒரே தெய்வக் கொள்கை தமிழ் மக்களிடையே வற்புறுத்தப்பட்டது. என்றாலும், பல தெய்வ நம்பிக்கை அவர்களிடமிருந்து மறைந்து விடவில்லை. திருவள்ளுவர் காலத்துக்குப் பின் நாயன்மார், ஆழ்வார் காலங்களிலும் ஒரே தெய்வக் கொள்கை இருந்தது. ஆயினும், சமயப் பூசல்களின் காரணமாக அந்தக் கொள்கை வலுவிழந்து கிடந்தது.

நமது கலை, இலக்கியப் பண்பாட்டு நலங்களையும், நம் தமிழ் நாட்டின் தொன்மையையும் ஒரு கணம் மீண்டும் எண்ணிப் பாருங்கள். உலகில் இருக்கும் மற்ற நாடுகளையும் பாருங்கள். மற்ற நாட்டு மக்கள் எல்லாம் காடுகளில் உழன்ற காலத்தில் நாம் நாடு கண்டோம். அரசியல் உணர்ந்திருந்தோம். செங்கோல் செலுத்தினோம். இலக்கியங்கள் படைத்தோம். இலக்கணம் செய்தோம். நல்வாழ்வுக்கு உரிய எல்லாத் துறைகளிலும் ஓங்கி இருந்தோம்.

தமிழின் உயர்வும், ஒழுங்கும், வளமும், பண்பாடும், தமிழர்களை மட்டுமல்ல, தாயகத்தை மட்டுமல்ல, பாரதத்தை மட்டுமல்ல, தரணி முழுவதையும் ஒரு நாள் உயர்த்தும் என்று உறுதியாக நம்பலாம். விரிந்த மனமும், விஞ்ஞானப்போக்கும், ஒற்றுமை உணர்வும், உன்னத நோக்கும், கடமையில் விழிப்பும், கலங்காத உழைப்பும், தளராத முயற்சியும் கொண்டு தமிழினத்தை உலக அரங்கில் உயர்த்தப் பாடுபடுவோம்!

[திருச்சியில் நடைபெற்ற தமிழர் பேரவையில் 22.7.79 அன்று ஆற்றிய உரையிலிருந்து தொகுக்கப்பெற்றது].

# அரசின் அறிவிப்புகள் ஆணைகள் ஆக்கப்பணிகள்

**16-7-'79 முதல் 31-7-'79 வரை**

*16—7—'79*

விரைவில் குழலிசைக்கு அரசுச் சார்பில் ஒரு கலைஞர் நியமிக்கப்படுவார். தமிழ் நாட்டியக் கலையை உலகெங்கும் பரப்பிடவும் நாட்டியக் கலையைக் கற்றுத் தரவும், அரசின் சார்பில் ஒரு கலைஞரை நியமிக்கலாம் என்ற கருத்து இருக்கிறது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் கூறியுள்ளார்.

*17—7—'79*

தமிழகத்தில் அடுத்த ஐந்தாண்டுகளில் ரூ. 40 கோடிச் செலவில், பால் பெருக்குத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது. இதையொட்டித் தமிழக அரசு தேசிய பால்வள வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டது என்று மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் திரு க. இராசாமுகமது அவர்கள் தெரிவித்துள்ளார்.

*18—7—'79*

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவினையொட்டி வேலூரிலுள்ள அரசினர் தொழிற்பயிற்சிக் கல்லூரியினைத் தந்தை பெரியார் ஈ. வெ. ராமசாமி அரசினர் தொழிற்பயிற்சிக் கல்லூரி எனப் பெயரிடத் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தஞ்சை நகரை அழகுபடுத்த மூன்றாண்டுத் திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு தொ. கங்கப்பா அவர்கள் தெரிவித்துள்ளார்.

*19—7—'79*

தமிழகத்தில் 4 ஆயிரத்து 100 குழந்தைகள் காப்பகங்களைத் திறக்க தமிழக அரசு உத்தேசித்துள்ளது. ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு குழந்தைகள் காப்பகம் இருக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை என்று மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி.டி. சரசுவதி அவர்கள் தெரிவித்துள்ளார்.

*20—7—'79*

தமிழக அரசில் கலாச்சாரத் துறை என்ற தனியான துறை ஒன்றை அமைக்க அரசு முடிவு எடுத்துள்ளது என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

குடிசைவாசிகளுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்து, அவற்றை அவர்களுக்கே சொந்தமாக்கப் புதிய திட்டம் ஒன்றை அமல்படுத்துவது பற்றித் தமிழகஅரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ்.இராகவானந்தம் அவர்கள் தெரிவித்துள்ளார்

*21—7—'79*

தமிழ்நாட்டிலிருந்து சந்தனக்கட்டைகள் கடத்தப்படுவதைத் தடுக்க, ஆயுதம் தாங்கிய விசேஷ போலீசார் நியமிக்கப்படுவர் என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம்.வீரப்பன் அவர்கள் கூறியுள்ளார்.

*22—7—'79*

மதுரையில் ரூ. 50 இலட்சம் செலவில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூன்று நட்சத்திர ஓட்டல் கட்டுகிறது என்று சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு எஸ்.ஆர். ராதா அவர்கள் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சி மேம்பாட்டுக்காகவும், சுற்றுலாப் பயணிகள் வசதியை முன்னிட்டும், மாநிலத்தில்

உள்ள சுற்றுலா மையங்களை இணைத்து விமானப்போக்குவரத்து நடத்தத் தமிழக அரசு உத்தேசித்துள்ளது என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

23—7—'79

விற்பனைப் பொருள்களுக்குப் பலமுனை வரி இருப்பதை அகற்றி ஒருமுனை வரி விதிப்பது குறித்து ஆலோசனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

24—7—'79

தமிழகப் பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் துணைத் திட்டத்துக்காக இந்த ஆண்டு ரூ.250 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவு இம்மாதம் வழங்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் திரு பெ. சவுந்தரபாண்டியன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

25—7—'79

தருமபுரி மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் 104 பள்ளிக் கட்டடங்கள் கட்ட தமிழக அரசு ரூ. 17.20 இலட்சம் ஒதுக்க உத்தரவிட்டுள்ளது.

26—7—'79

குடிசைவாசிகளுக்கு மாதம் இரண்டரை ரூபாய் கட்டணத்தில் முன் பணமின்றி மின்சார இணைப்பு வசதி செய்து தரப்படும் என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் அறிவித்துள்ளார்.

விவசாயிகளுக்குக் கூட்டுறவுத்துறை மூலம் ரூ. 2,141 கோடி ரூபாய் குறுகிய காலக் கடனாக இந்த ஆண்டு அளிப்பதென்று தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

27—7—'79

நீலகிரி மாவட்டத்திலுள்ள "தசபாலஞ்சிகா" என்னும் சாதியினரை பிற்பட்டோர் வகுப்புப் பட்டியலில் சேர்த்துக் கொள்ள தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கோவை மாவட்டத்திலுள்ள "தசபாலஞ்சிகா" இனத்தினர் ஏற்கெனவே பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஆட்டோ ரிக்ஷாக்களில் வேகத்தைக் கட்டுப்படுத்தும் மீட்டர் பொருத்தினால் தான் புதிதாக உரிமம் வழங்கப்படும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி.பொன்னையன் அவர்கள் அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள 110 நகராட்சிகளிலும் உடனடியாக 'டவுன்பஸ்' சர்வீஸ்களை ஏற்படுத்துவதற்குத் தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் மூலமாக இந்த நகரசபைகளின் 20 கிலோ மீட்டர் சுற்று வட்டாரத்தில் உள்ள கிராமங்களுக்குப் பஸ் வசதி ஏற்படும். கிராமப்புறங்களில் பஸ் வசதிகளை அதிகரிப்பதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக 476 கிராமப்புற பஸ் ரூட்களை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமாக சுமார் 18 இலட்சம் மக்கள் வசிக்கும் கிராம ஊராட்சிகள் பயன் பெறும். இத்தகவல்களை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் அறிவித்தார்கள்.

28—7—'79

கல்வித்துறை இயக்ககத்தில் உடற்பயிற்சிக் கல்விக்காகவென்றே ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்துவதன் சாத்தியக் கூறுகள் பற்றித் தாம் ஆராய்வதாக மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

கூட்டுறவுப் பணியாளர்கள் ஓய்வுபெறும் வயதை 55லிருந்து 58ஆக உயர்த்த கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் துணை விதிகளைத் திருத்த அரசு அனுமதித்துள்ளது என்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே.ஏ.கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்துள்ளார்.

29—7—'79

நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரிவதற்கு 200 தலைமை ஆசிரியர்களை நியமிப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் தலைமை ஆசிரியர்கள் ரூ. 450-800 சம்பள விகிதத்தில் நியமிக்கப்படுவார்கள். பி.டி.பட்டம் பெற்று அல்லது தமிழ்ப் பண்டிதர் பட்டம் பெற்று, செகண்டரி கிரேட் தலைமை ஆசிரியர்களாகப் பணிபுரிகின்ற அனுபவம் உள்ள சீனியர் ஆசிரியர்கள் இப்பள்ளிகளில் நியமிக்கப்படுவார்கள்.

30—7—'79


மற்ற மாநிலங்கள் மற்றும் அயல்நாடுகளின் கிராமியக் கலை நிகழ்ச்சிகளையும், கலாச்சாரத் திருவிழாக்களையும் தமிழ்நாட்டில் நடத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது என்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் கூறியுள்ளார்.

31—7—'79

தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழக அலுவலர்களைக் கண்காணிக்க லஞ்ச ஒழிப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவு ஒன்று விரைவில் அமைக்கப்படவிருக்கிறது என்றும் போக்குவரத்துக் கழகங்களின் தலைவரின் கீழ் இவ்வமைப்பு செயல்படும் என்றும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சி. பொன்னையன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**அடுத்த இதழ் 'ஊரக வளர்ச்சிச் சிறப்பிதழாக' மலருகிறது!**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
[illegible] தமிழக அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


சேரன் போக்குவரத்துக் கழகம்
சேரன்


அரசுப் பொருட்காட்சி
(கோவை)



கோவை மாநகராட்சி அரங்கு

# ஜாதிகளற்ற சமுதாய அமைப்பே சமதர்மச் சமுதாயத்தின் அடித்தளம்!



உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.

—தந்தை பெரியார்.



இந்த நாட்டிலே, ஜாதி தான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்திலே கலக்கப்பட்டிருக்கும் கடுவிஷம். மனதிலே முடக்கு நோயைப் புகுத்திவிட்டமுறை — எனவே தான் பேதமற்ற சமுதாயத்தை—சமத்துவத்தை — சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா.

எங்கும் சமத்துவம் ஓங்க
எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் நிறை
எனும் இலட்சியம் ஈடேற
தொண்டாற்றுவோம்!